


நந்தினி என் நந்தினி
திருமகள்
இந்திரா சௌந்தர்ராஜன்



# பதிப்புரை

'நந்தினி என் நந்தினி' எனும் தலைப்பில் இப்புதின நூலை யாத்துள்ள இந்திரா சௌந்தர்ராஜன் அவர்களைத் தமிழ்ச் சமுதாயத்திற்கு அறிமுகப்படுத்தத் தேவையில்லை. நாவல்கள் மற்றும் தொலைக்காட்சித் தொடர் வாயிலாக தமிழ் நெஞ்சங்களில் உலவி வருபவர்.

'நந்தினி என் நந்தினி', 'நான்தான் அவன்' என்னும் இரண்டு புதினங்களைக் கொண்டது இந்நூல்.

அவற்றுள் நவரசங்களுள் பல ரசங்களைக் கொண்ட கதாபாத்திரங்கள் நந்தினி என் நந்தினி எனும் நாவலில் வார்த்தைகளில் வாழ்கின்றன. வாசித்த பிறகு அவை வாசகர்களின் இதயங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கும்.

இதில் காதல் காட்சிகள் உண்டு. காதலர் ஒரு கணக்குப் போடுவார்; காதலி ஒரு கணக்குப் போடுவார். ஆனால், நிறைவுறும் கணக்கோ வேறு. அந்தக் கணக்கே வாழ்வு. இது போன்று வாழ்வின் ஒவ்வொரு பகுதியும் கணிதத்தையே அடிப்படையாகக் கொண்டது. எவ்வாறு? அதுவே நந்தினி என் நந்தினியின் சாரம்.

அடுத்து, 'நான்தான் அவன்' எனும் நாவலின் பிரதானக் கதாபாத்திரம் ஸ்பிலிட் பெர்சனாலிட்டி. ஒவ்வொரு நிகழ்விலும் திகில் திருப்பங்களைக் கொண்ட சமூக நாவல் இது.

எங்கள் **திருமகன் நிலையத்திலிருந்து** வெளிவரும் ஒவ்வொரு நூலையும் வாசித்து தாங்கள் மனநிறைவு அடைகிறீர்கள் என்பதை நாங்கள் அறிவோம். அவ்வாறே இந்திரா சௌந்தர்ராஜனின் இந்த நூலையும் படித்துச் சுவைப்பீர்கள் என்று நம்புகிறோம்.

-ம. திருப்பதி
**திருமகன் நிலையம்**

# நந்தினி என் நந்தினி

## 1

**க**னவு!

தூங்கும் மூளையின் எண்ணக் கசிவுக்கு இன்னொரு பெயர் இது.

பெரும்பாலும் மனதுக்குள் ததும்பி வழியும் பலவிதமான எண்ணங்களே உறக்கத்தில் வெந்நீர்ப் பானையின் ஆவிபோல வெளிப்பட்டு காட்சிகளாய் விரிகின்றன.


இது எண்ணங்களால் இயக்கப்படும் மனிதர்கள் அனைவருக்கும் பொருந்தும். சில மிருகங்கள் கூட கனவு காண்கின்றன. இது ஒரு அதிசயமான செயல். இப்படித்தான் விஞ்ஞானம் சொல்கிறது.

சிறுநீர் கழித்தல், மலம் கழித்தல், எச்சில் சுரத்தல், வியர்த்தல் போல இதுவும் ஒரு அத்தியாவசியச் செயல் என்கிறது விஞ்ஞானம்.

ஆனாலும் விஞ்ஞானத்தின் கூற்றை மீறிய பல விஷயங்கள் கனவுகளில் புதைந்திருக்கின்றன. அவை கனவை மிகமிக ஆச்சரியமான ஒன்றாக யூகிக்க வைக்கின்றன.

அவற்றில் ஒன்று... கனவில் யானை துரத்துவது! பெரும்பாலோருக்கு கனவில் யானை வந்து துரத்தும் சம்பவமும் நிகழ்ந்திருக்கிறது.

ஒரு பெரிய பிரச்சனையின் மன அழுத்தம் தாளாமல் நிகழும் ஒன்றாகவே இதை ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். ஆனால் சாஸ்திர வல்லுநர்களோ 'சொப்பன சாஸ்திரப்படி



'அப்படி ஒரு கனவு கண்டவருக்கு அவரது தகுதிக்கு ஏற்ற பதவியோ இல்லை பரிசோ கிடைக்கப் போகிறது. அதன் எதிரொலிதான் அந்தக் கனவு' என்கின்றனர்.

குறுகலான வீதி அது...

வீட்டு வாசல்களில் பல பெண்கள் கோலம் போட்டுக் கொண்டிருந்தனர். நல்ல காலை வேளை... லேசான பனிப்பொழிவு கூட இருந்தது. இந்த நேரம் தான் ராம்கியின் சைக்கிள் அந்தத் தெருவில் ஊடுருவும் நேரமும் கூட... சைக்கிள் கேரியரில் சீராக அடுக்கி மடிக்கப்பட்ட அன்றைய தினசரிகள், முன்புறத்தில் ஒரு தார்ப்பாய் பையில் அடுக்கப் பட்டிருக்கும் குமுதம், விகடன், கல்கிகள் சகிதம் ஒரு புயலைப் போல்தான் அவன் எப்பொழுதும் வீதிப் பிரவேசம் செய்வான்.

'சர் சர்' என்று அவன் கைகளில் இருந்து பேப்பர்கள் பறந்து சென்று வீட்டுத் தாழ்வாரங்களில் விழும்.

நின்று நிதானமாக வெற்றிலை, பாக்கு போல் அவற்றைத் தட்டில் வைத்து வழங்க அவனுக்கு நேரம் கிடையாது; முடியவும் முடியாது. நான்கு மணிக்குத் துவங்கும் வேலை கிட்டத்தட்ட பதினேழு கிலோ மீட்டர் பயணத்தில் நூற்றி இருபது வீடுகளைச் சந்தித்து எட்டு மணிக்குத்தான் முடிகிறது.

அதன்பின் வீட்டுக்குச் சென்று குளித்து, பழைய சோற்றை ஒரு பிடிபிடித்துவிட்டு வேலைக்குப் புறப்படச் சரியாக இருக்கும்.

ஒன்பது என்றால் ஒன்பது மணிக்கு அவன் வேலை பார்க்கும் ஆஃப்செட் பிரிண்டிங் பிரஸ்ஸை அவன் முதலாளி திறந்து விடுவார். ஒரு நிமிடம் லேட்டாகச் சென்றாலும் பார்வையாலேயே சுட்டெரிப்பார். ஏன் என்றால் மாலை



ஐந்து மணிக்கு மேல் அவன் இருக்கிறேன் என்று சொன்னா லும் அவர் இருக்க விடாதவர்.

அதற்குப் பிறகு அவனுக்கு ஈவினிங் காலேஜும், அதில் அவனுக்கான டிப்ளமோ படிப்பும் இருக்கிறதே...? ஒன்பது மணி வரை படிப்போடு குஸ்தி போட்டுவிட்டு வீட்டுக்கு வந்தால் உடம்பு கெஞ்சோ கெஞ்சு என்று கெஞ்சும். அதற்காகப் படுத்து தூங்கிப் போனாலோ மறுநாள் காலேஜில் லெக்சரர்க்கு பதில் சொல்ல முடியாது. எனவே கொட்டாவி பிரியப் பிரிய ஒரு பத்தரை, பதினொரு மணி வரை அன்றைய பாடங்களை ரிவைஸ் செய்து, அசைன்மெண்ட்டை எழுதி முடித்துவிட்டு பிறகு கொல்லைக்குப் போய் கிணற்றில் தண்ணீர் இழுத்து தலையில் விட்டுக் கொண்டு குளிக்கும்போது அவ்வளவு சுகமாக இருக்கும்.

அவனது இடையறாத பணிகளை வைத்த கண் வாங்கா மல் பார்த்துக் கொண்டிருப்பாள் சிந்தாமணி. சின்னதாய் ஒரு இட்லிக் கடை நடத்துபவள்.

அவனுக்கென்று யாருமே இல்லை.

அப்படிப்பட்டவள் எதிரில் ஒரு ஐந்து வயது சிறுவனாக கண்களைக் கசக்கிக் கொண்டு வந்து நின்றவன் தான் ராம்கி. அப்பா யார்... அம்மா யார்...? எதற்கும் பதில் சொல்லத் தெரியவில்லை. யாரும் தேடிக் கொண்டும் வரவில்லை.

ஒருநாள் போலீஸ் ஸ்டேஷனுக்கு அவனோடு போய் அவர்களிடம் சொல்லிவிட்டுத் திரும்பியும் வந்து விட்டாள் சிந்தாமணி. அவள் பின்னாலேயே வந்து அவளுக்கு முன் அவளது சிறிய வீட்டின் முன் திண்ணையில் அமர்ந்திருந்து அவளுக்கு ஆச்சரியத்தை தந்திருந்தான் அன்று.

அதுதான் அவன் அளித்த முதல் ஆச்சரியம்!

இன்று ஒரு நாளைக்கு இருபது மணி நேரம் பாடுபடும் ஒருவனாக அவளுக்கு தினம் தினம் ஆச்சரியமளித்துக் கொண்டிருக்கிறான் ராம்கி.

எல்லாம் நேற்று போல் இருக்கிறது. இருபது வருடங்கள் ஓடிவிட்டன.

அன்றைய காலையில் நூற்று இருபது வீடுகளுக்கு பேப்பர், புத்தகங்களைப் போட்டுவிட்டு வீட்டுக்குள் நுழைந் தான். குளித்துவிட்டு லுங்கியைத் தோய்த்துக் காயப்போட்டு விட்டு தலையைத் துவட்டியபடி வந்து அமர்ந்தவனை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் சிந்தாமணி.

"என்ன சிந்தா... எதுக்கு இப்படி பாக்கறே?"

"பாக்காம... ஆமா, நீ மனுஷனா இல்ல எந்திரமாய்யா...?"

"இப்ப எதுக்கு இந்தக் கேள்வி...?"

"இப்படி ஓடினா என்னத்துக்காகும் உடம்பு?"

"ஏன், நான் இப்ப நல்லாத்தானே இருக்கேன்...?"

"வாலிப வயது. தாங்குது. இப்படியே ஓடிக்கிட்டிருந்தா என் வயசுல உட்காரக்கூட இடுப்புக்கு சக்தி இருக்காது..."

"தப்பா சொல்றே சிந்தா... இப்படி ஓடுறதும் ஒரு வகைல உடற்பயிற்சி..." அவன் சமாளித்தான். அவள் அதை ரசித்தாள்.

சிந்தாவின் இட்லிக் கடைக்கு எவ்வளவோ பேர் சாப்பிட வருகிறார்கள். விதம்விதமான மனிதர்கள். பார்க்க ஒருவன் ராஜா போல் இருப்பான். ஆனால் சாப்பிட்டு விட்டு காசு கொடுக்காமலே அப்படியே நைஸாக நழுவப் பார்ப்பான். இன்னொருவனோ பிச்சைக்காரன் போல இருப்பான். முதல்



காரியமாகக் காசைக் கொடுத்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பான்.

உருவத்துக்கும் மனசுக்கும் சம்பந்தமேயில்லாத மனிதர் களையே பார்த்துப் பார்த்து மரத்துப் போய்விட்டவள் சிந்தாமணி. அதனால்தானோ என்னவோ உருவம், உள்ளம் இரண்டிலும் அழகாய் விளங்கும் ராம்கியைப் பார்க்கும் பொழுது ஒரு ஏக்கம்...

இவன் நிஜமாலுமே தன் வயிற்றில் பொறந்திருந்தா எவ்வளவு நல்லா இருக்கும் தெரியுமா?"

-அவள் புலம்பலுக்கு அதைக் கேட்டு சிரிப்பான்.

"ஏன் சிரிக்கறே?"

"சிரிக்காம... நீ ஒரு வெள்ளந்தி சிந்தா... 'நான் ஒரு அனாதை'ன்னு எதுக்கு என்கிட்ட சொன்னே...? சொல்ல லைன்னாலே நான் உன் பிள்ளையாதானே இருந்திருப்பேன்."

"அப்படி இல்ல ராம்கி... நமக்கு சொந்தம் இல்லாததை சொந்தமா நினைக்கறது ஒரு வகைல திருட்டு. எனக்கு எதுக்கு அந்தப் புத்தின்னுதான் நான் அப்படி நினைக்கலை... உனக்கு விவரம் தெரியவும் உன்கிட்ட உண்மையை சொல் லிட்டேன்..."

"நீ உண்மையைச் சொல்லிட்டதா நினைக்கறே... ஆனா, நீ ஏன் அப்படிச் சொன்னேன்னு நினைச்சு நான் வருத்தப் படாத நாளில்லை தெரியுமா? நீ என் அம்மா அப்பாகிட்ட இருந்து என்னை திருடிக்கிட்டா வந்துட்டே...? நான்தானே உன்கிட்ட வந்தேன்? நீ சொன்ன மாதிரி போலீஸ்ல கொண்டு போய் என்னை விட்டுட்ட பிறகும் நான்ல உன்னைத் தேடிக்கிட்டு வந்தேன்?"

-அவன் திருப்பிக் கேட்டபோது அவளுக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது.

"பெத்தாதான் புள்ளையா சிந்தா? பெறாட்டியும் நீதான் எனக்கு அம்மா. ஒருவேளை என் நிஜ அம்மாவை நான் பார்க்கறேன்னு வை..."

-அவன் அப்படிக் கேட்கும்போதே சிந்தாமணிக்கு இமைகள் துடித்தன.

"அட, ஒரு பேச்சுக்குத்தான் நான் சொன்னேன். அப்பக்கூட அவங்களை என் அம்மாவா நினைக்க மாட்டேன்; உன்னைத் தான் நினைப்பேன்..."

"நெசமாவா?"

"சத்தியமா... நீ மட்டும் இல்லேன்னா நான் இப்ப ஒரு மனுஷனா நடமாடிக்கிட்டிருக்க முடியுமா? எந்த குப்பைத் தொட்டியில எதை பொறுக்கிக்கிட்டு இருப்பேனோ...?"

"இல்லை ராசா... உனக்கு அப்படி ஒரு நிலை மட்டும் என்னிக்கும் வராது. துளசி, குப்பை மேட்டுல முளைச்சாலும் துளசியாதான் முளைக்கும். அது இருக்கற இடத்தை அது கோயிலாக்கிடும். ஆனா அது குப்பையோட குப்பையா எப்பவும் ஆகாது..."

"இதா... இந்த துளசி அது இதுங்கற உதாரணமெல்லாம் வேணாம். அதேசமயம் இன்னொரு தடவை நீ என்னை மூணாம் மனுஷனா நினைக்கக்கூட பார்க்கக்கூடாது. நீதான் என் அம்மா... ஞாபகம் வெச்சுக்க..."

"சரிப்பா..."

"இன்னும் கொஞ்சநாள்தான். டிப்ளமா வாங்கிட்டா ஒரு நல்ல வேலை கிடைச்சிடும். அப்பால நீயும் இட்லி கடை வெச்சிக்கிட்டு லோல்பட வேணாம். உக்காந்து காலாட்டிக் கிட்டு சாப்பிடலாம்..."

-அவன் சொல்லச் சொல்ல அவளுக்கு ஆசையாக இருந் தது. அது அவள் கண்களில் தெரிந்தது. கூடவே ஒரு சிறு தயக்கமும்...



"என்ன சிந்தா...? ஏதோ சொல்ல நினைக்கற மாதிரி தெரியுதே?"

"ஆமாம்..."

"சொல்லு... எனக்கும் வேலைக்கு போக நேரமாகிக்கிட் டிருக்குது பார்..."

"நம்ம மீரான் ராவுத்தரை தெரியுமா உனக்கு?"

"யாரு... பழைய புத்தகக் கடை மீரான் ராவுத்தரா...?"

"அவரேதான்..."

"அவருக்கென்ன...?"

"அவரோட பையன் ஹக்கீமுக்கு துபாய்ல வேலை கிடைச்சிடுச்சாம்!"

"சந்தோஷமான விஷயம்தான்..."

"பெரிய வேலையாம்... அப்பா, அம்மாவைக் கூட கூட்டிக்கிட்டு வந்து வெச்சுக்கலாமாம்..."

"அப்ப நம்ம மீரான்பாய் இனிமே தெருவோரமா புத்தகக் கடையை போட்டுக்கிட்டு சிரமப்பட வேண்டாம்னு சொல்லு..."

"ஆமாம்... அதேதான்... அதேசமயம்..."

"என்ன... பாய்க்கு ஊருக்கு போக பணம் போதலையா? கஷ்டப்படறாரா?"

"அதெல்லாம் இல்ல... அந்தப் பழைய புத்தகங்களை எல்லாம்..."

-சிந்தாமணி இழுக்கும்போதே ராமசிக்குப் புரிந்து விட்டது-

"என்ன சிந்தா... அந்தப் புத்தகங்களை எல்லாம் உன் தலையில கட்டி உன்னை விக்கச் சொல்றாரா?"

சிந்தாமணியின் தலை ஆடியது-

"பாய் ஏன் இப்படி எல்லாம் நினைக்கறார்... புத்தகம் பத்தி உனக்கு என்ன தெரியும்? எதுக்கு எவ்வளவு விலைன்னு நீ கண்டே...?"

"அதுவும் சரிதான்... பேசாம அவர் புத்தகக் கடையை நீ எடுத்து நடத்தேன்..."

"சித்தா..."

"என்ன கண்ணு... எதுக்கு நீ பிரிண்டிங் பிரஸ்ல கிடந்து சேழியணும்? இது உக்காந்த இடத்துல செய்யற வியாபாரம்."

"அது சரி... ஆனா எனக்கு மட்டும் எந்தப் புத்தகத்துக்கு என்ன விலைன்னு தெரியுமா?"

"கண்ணு... அதெல்லாம் மீரான்பாய் சொல்லித்தரும். ஒரு இரண்டு நாள் அதுகூட இருந்தா போதும். நீ எல்லாத்தையும் கப்புன்னு பிடிச்சுக்க மாட்டியா?"

"அதுசரி... அதுல எவ்வளவு வரும்படி வரும்?"

"நிச்சயம் ஒரு நாளைக்கு நூறு ரூவா நிக்கும்னு சொன்னார் பாய்..."

"சரி சித்தா... அவ்வளவு புத்தகங்களையும் பாய் நமக்கு சும்மாவா தர்றாரு...?"

"அவர் தர்றேன்னுதான் சொன்னார். நான்தான் 'அதெல்லாம் வேண்டாம். தினம் விக்கிறதுல பாதி உங்களுக்கு, பாதி என் மகனுக்குன்னு சொன்னேன்."

"அப்ப நீ, நான் அந்த புத்தகக் கடைலதான் இருக்கணும்னு முடிவு பண்ணிட்டேன்னு சொல்லு..."

சிந்தாமணி அவன் முன்னால் சற்று நெளிந்தாள். அவனுக்கோ பாய் உட்கார்ந்த இடத்தில் மடங்கி உட்கார்ந்து கொண்டு புத்தகங்களை விற்பதை நினைத்துப் பார்க்கவே என்னவோ போல் இருந்தது. இருந்தும் சிந்தாமணியின் விருப்பத்துக்காக அரைமனதாக சம்மதித்தான்.



"அப்பாடா... இப்பதான் எனக்கு நிம்மதியாச்சு. இனி நீ தினம் என் கண்ணு முன்னாலேயே இருப்பே..." என்று அவன் கன்னத்தைத் தடவி திருஷ்டி கழித்தாள்.

கடைத்தெரு!

வாழைப்பழக் கடை ஒன்றில் வாழைப்பழத்தை எண்ணிப் பார்த்து வாங்கத் தொடங்கியிருந்தான் ராம்கி. அப்போது வீதியில் ஒரு திடீர் களேபரம். ஊர் சிவன் கோயில் யானை மதம் பிடித்தது போல் ஓடிவந்து கொண்டிருந்தது. "ஒதுங்க... ஒதுங்க..." என்று சிலர் குரல் கொடுத்துக் கொண்டும் வந்தனர்.

தள்ளுவண்டியில் வாழைப்பழம் விற்பவன் வெலவெலத்துப் போய்விட்டான். யானையும் திபுதிபுவென்று வந்து கொண்டிருந்தது. வாழைப்பழக் கடை அருகே வரவும் கடைக்காரனும் ஓட ஆரம்பித்தான். ஆனால் சமயோசிதமாக ராம்கி வாழைப்பழத்தை எடுத்து யானை முன் எறிய, அதுவும் ஒரு க்ஷணம் நின்று அந்தத் தாரை எடுத்து தன் வாயன்னைங்களில் அடக்கிக் கொள்ளப் பார்த்தது. தூர இருந்து சிலர், "போஸ், நிக்காதே... ஓடிடு..." என்று ராம்கியைப் பார்த்து குரல் கொடுத்தனர். ராம்கியிடமும் ஓடலாமா, இல்லை நின்று சமாளிக்கலாமா என்று ஒரு சிறு குழப்பம். அந்த யானை என்ன நினைத்ததோ... வாழைத்தாரை அப்படியே உமிழ்ந்துவிட்டு ராம்கியை ஒரு பார்வை பார்த்தது. ராம்கியும் இனி நின்றால் ஆபத்து என்பது போல ஓடத் தொடங்கினான். அவன் துரதிர்ஷ்டம் எதிரில் சாலையில் நிறுத்தப்பட்ட ஒரு லாரி வழிமறிக்க, அவனும் அதை சுற்றிக் கொண்டு ஓடுவதற்காக திரும்ப, அதேசமயம் காத்திருந்தது போல நீண்டது ஓடிவந்த யானையின் துதிக்கை.

"அய்யோ... என்னை விட்று..." என்று ராம்கியும் அலற...

கட்டிலில் படுத்திருந்த நிலையில் 'என்னை விட்று... என்னை விட்று...' என்று ராம்கி அலறுவதைப் பார்த்து விட்டு அலறிக் கொண்டு ஓடிவந்தாள் சிந்தாமணி. ராம்கியைத் தொட்டு உசுப்பினாள்.

"கண்ணு... கண்ணு..." என்று அவள் உசுப்ப, கண் திறந்த ராம்கிக்கும் கொஞ்சம் வெட்கமாகிவிட்டது.

"என்னய்யா... ஏதாச்சும் கெட்ட கனா, கினா கண்டியா...?"

"ஆமாம் சிந்தா..."

"என்ன கனவு?"

"யானை ஒண்ணு என்னை துரத்துது..."

"அப்படியா...? அப்ப நீ பெரிய ஆளா ஆகப்போறேன்னு சொல்லு..."

"உளறாதே சிந்தா..."

"இல்ல கண்ணு... யானை துரத்தற மாதிரி கனவு கண்டா பெரிய பதவி வரும்னு சொல்வாங்க..."

"ஒருவேளை அந்த புத்தகக்கடையை நான் இன்னிக்குத் தானே எடுத்துக்கப்போறேன். அதுவா இருக்குமோ?"

"சேச்சே... அதெல்லாம் கண்ணடைக்கா. நீ வேணா பாரு. பெரிய பட்டமோ, பதவியோ இல்ல பரிசோ உனக்கு கிடைக்கத்தான் போகுது..."

-சிந்தாமணி விழித்துக் கொண்டே கனவு காணத் தொடங்கிவிட்டாள்.



## 2

உறக்கம் என்பது உயிர்கள் வாங்கி வந்திருக்கும் ஒருவித அபூர்வமான விஷயம். உறக்கத்தை உடம்புக்கான ஓய்வு என்றுதான் எல்லோரும் நினைக்கிறார்கள். அதே சமயம் உறக்கம் என்பது மரணத்துக்கான ஒருவித ஒத்திகை என்பதை எண்ணிப் பார்க்க மறந்து விடுகின்றனர்.

நம் வாழ்நாளில் சரிபாதி நேரம் நாம் இருந்தும் இல்லாத நிலையில் உறக்கத்தில் போய் விடுகிறது. உறக்கம் வந்துவிட்ட பின் நாம் இருக்கிறோமா, இல்லையா என்று கேட்டால் அதற்கு சரியான பதில் கூற யாரும் இல்லை.

ஏன் இல்லாமல்?

'இருப்பதனால்தானே உறங்கச் சென்றோம்- உறங்கியதால் தானே விழித்து எழுந்தோம்' என்று திருப்பிக் கேட்கலாம். நாம் எதையும் கண்ணால் பார்த்து, காதால் கேட்டு, உணர்வால் அனுபவித்து, பிறகே நம்பிக்கை வைத்து அதை ஏற்கிறோம். உறங்கும் விஷயத்திற்கு வருவோம். நாம் தூங்கும்போது இந்த உலகில் என்ன நடக்கிறது என்பதே நமக்கு தெரியாது. நாமும் என்னவானோம் என்பது தெரியாது.

'தூங்கும் போது அங்கேதான் கிடப்போம். இதில் என்னவாவோம் என்கிற கேள்வி எதற்கு' என்று சிலர் கேட்கலாம். ஒரு மனிதன் தூக்கத்தில் எழுந்து நடக்கும் வியாதி உடையவன். அப்படி தூக்கத்தில் எழுந்து நடந்து சென்று ஒரு விபத்தில் அடிபட்டு விடுகிறது. அவனுக்கு அடிபட அவனது சுயமற்ற தன்மை காரணமா- இல்லை எதிரில் வந்தவர் காரணமா என்கிற கேள்வி எழுகிறது. இதற்கு எப்படி சரியான விடையைக் காண முடியும்?

எப்பொழுது ஒரு விஷயத்திற்கு சரியான விடை காண முடியவில்லையோ, அப்பொழுது அது புதிராகி விடுகிறது.

உண்மையில் நாம் உறங்கும் போது நாம் உடம்பிருந்தும் இல்லாதவராகி விடுகிறோம். அப்போது நம் மனம் எப்படி வந்த எண்ணங்களும் இன்றி நிர்மலமாகிறது என்பது ஆச்சரியத்துக்கு உரிய ஒரு விஷயம். ஒரு மனிதன் இறந்துவிட்ட பிறகு அவன் என்னவாகிறான் என்கிற

*கேள்விக்கு அளவது களவுகளற்ற தூக்கத்திலேயே விடைகள் இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.*

*கனவுகள் உள்ள தூக்கமோ, உறக்கத்திலும் நாம் எண்ணங்களால் ஒரு பிரதிபிம்ப வாழ்க்கை வாழ்வதை நமக்கு உணர்த்துகிறது. அந்த பிரதிபிம்பம் நிறம் என்னும் பிம்பம் இருந்தால் அன்றி வரப் போவதில்லை.*

*அதாவது கனவு என்பது நமக்கு நிகழப் போகிற அல்லது நிகழ்ந்து முடிந்த ஒரு நிஜத்தின் எதிரொலிதான் என்பது கனவைப் பற்றி ஆய்வு செய்தவர்களின் தீர்க்கமான கருத்து.*

*எவர் ஒருவர் கனவில் தண்ணீரில் மூழ்குவது போல கனவு கண்டாரோ, அவர் அதிக வருவாயுள்ள ஒரு சூழலுக்கு தள்ளப்பட இருக்கிறார் என்பது அந்தக் கனவுக்குப் பொருளாம்!*

ராம்கியோடு வந்து நின்ற சிந்தாமணியை புன்னகையோடு வரவேற்றார் மீரான் ராவுத்தர். "வா சிந்தாமணி... வாப்பா ராமகிருஷ்ணா... வாவா..."

ராவுத்தரிடம் வாய் நிரம்பிய வரவேற்பு. ராம்கி அவரைப் பார்க்காமல் அவரது புத்தகக் கடையில் கவனமாக இருந்தான். கட்டுக்கட்டாய் புத்தகங்கள். செம்பழுப்பு தட்டி அந்துப்பூச்சிகள், செல்கள் குடியேறி இருக்க- மலைமலையாய் குவிந்து கிடந்த புத்தகங்கள். சில இடங்களில் தடித்தடியான சட்ட புத்தகங்கள். வருவாய்க்கு மட்டும் கவலை இல்லாத ஒரு சூழ்நிலை இருந்தால் காலை நீட்டிக் கொண்டு ஒவ்வொரு புத்தகத்தையும் படித்தபடியே மொத்தக் காலத்தையும் கழித்து விடலாம் என்றுதான் ராம்கி யோசித்தான்.

"என்ன ராம்கி... இந்த புத்தகங்களை எல்லாம் பார்த்தா மலைப்பா இருக்குதா உனக்கு?"

"ஆமாங்க ராவுத்தரே... எவ்வ்வளவு புத்தகங்கள்... உங்ககிட்ட இல்லாத புஸ்தகமே இல்லை போலிருக்கே?"



"அதுதான் உண்மை. முதல் முதல் அச்சேறின பைபிள் காப்பிகூட என்கிட்ட இருந்தது. அதை மட்டும் ஒரு பாதிரியார் பத்தாயிரம் ரூபாய்க்கு கேட்டு வாங்கிட்டு போனார்னா பாத்துக்கயேன்..."

"அட... அவ்வளவு விலை எல்லாம்கூட போகுமா என்ன?"

"சரிதான்... பழைய புத்தகக் கடைன்னா குப்பை கூளம்னு நினைச்சிட்டே போல. அதான் இப்படி கேக்கறே... இங்க இல்லாத புத்தகங்கள் கிடையாது தெரியுமா?"

"மொத்தம் எவ்வளவு புத்தகம் தேறும் ராவுத்தரே...?"

"அது இருக்கும். ஒரு அறுபதாயிரம் பக்கம்..."

ராவுத்தர் சொல்லவும், ராம்கி அப்படியே வாயைப் பிளந்து விட்டான். அதன்பின் ராவுத்தர் கடையை எப்படி பூட்ட வேண்டும், உள்ளே எந்த புத்தகக் கட்டு எந்தப் பக்கம் இருக்க வேண்டும் என்பது முதல் எல்லாவற்றையும் சொல்லிக் கொடுத்துவிட்டு ராம்கியின் தலையை வருடி ஆசீர்வாதம் செய்துவிட்டு உருதுவிலும் ஏதோ மந்திரம் கூறி விட்டு புறப்பட்டார்.

சிந்தாமணி அதன்பின் ராம்கியை ராவுத்தர் அமர்ந்திருந்த இடத்தில் உட்கார்த்தி வைத்தான். பக்கத்தில் ஒரு சிறு மர மேஜை. அதில் காசு, பணத்தை போட்டு வைக்கும் சிறிய வகை டிராயர். அந்த மேஜை மேல் ராவுத்தர் எப்பொழுதும் ஒரு ஊதுபத்தியைக் கொளுத்தி வைப்பார். ஊதுபத்தியும் கனன்றபடியே இருந்தது.

சிந்தாமணி அந்தச் சூழலில் ராம்கியை ஒரு முதலாளி போல பார்த்தான். புகைப்படம் எடுப்பவர்கள் சுற்றிச் சுற்றி வந்து கோணம் பார்ப்பது போலெல்லாம் பார்த்து மகிழ்ந்தான்.

"என்ன சிந்தா... என்னைப் பார்க்க உனக்கு இப்ப வேடிக்கையா இருக்குதா?"

"அட நீ வேற... இப்பதான் ஒரு முதலாளி மாதிரி நீ இருக்குறே..."

"நான் முதலாளி மாதிரியா.. அதுவும் இந்த பழைய புத்தகக் கடைக்கு... வேடிக்கைதான்..."

"பழசோ, புதுசோ... இனி இதுக்கு நீதான் எல்லாம். கடவுளோட கருணை மட்டும் உனக்கு இருந்தா நீ எங்கியோ போய்டுவே தெரியுமா...?"

சிந்தாமணி அதிகம் ஆசைப்படுவது போலகூட ராம்கிக்கு தோன்றியது.

"சரி சிந்தா! நீ போய் உன் வேலையைப் பார். நான் என் வேலையைப் பார்க்கிறேன்..." என்று சிந்தாமணியை அனுப்பிவிட்டு அப்படியே வெளியே ஒரு பார்வை பார்த்தான். எதிரில் நாடார் மளிகைக் கடை. எப்பொழுதும் நாலு பேர் எதையாவது வாங்கிக் கொண்டிருப்பார்கள். இரண்டு கடை தள்ளி வேறு டெய்லர்கடை. அங்கேயும் சிலர் இருந்தனர்.

அவனது கடையாகிய புத்தகக் கடையில் மட்டும் ஈ ஓடியது.

'எந்த ஒரு நாட்டில் புத்தகக் கடைகளில் வியாபாரம் கொடிகட்டிப் பறக்கிறதோ அந்த நாட்டில் அமைதி இருக்கும். சுத்தம் இருக்கும். நிறைய அறிஞர்கள் தோன்றிய வண்ணம் இருப்பார்கள். அந்த நாடு ஊருக்கே வழிகாட்டியாகத் திகழும்' என்று காலேஜில் எப்பொழுதோ தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் ஒரு இலக்கியக் கூட்டத்தில் பேசும் போது சொன்னது காதில் ஒலித்தது.

இங்கோ நேர்மாறான ஒருநிலை.



பழைய புத்தகங்களை விற்று என்றைக்கு வாழ்க்கையில் முன்னேறப் போகிறோம் என்று ஒரு மலைப்பு உணர்ச்சி கூட ஏற்பட்டது.

அவனுக்கு மிகப் பக்கத்திலேயே அந்த நாளைய ஒரு பழைய புத்தகம். யதார்த்தமாக எடுத்து அதைத் திறந்தான். அதில் 'காமசக்கர பலகணி' எனும் தலைப்பு. வித்தியாசமாக இருந்தது. கீழே 'ஆம்பூர் வெங்கடாஜல முதலியார் தெய்வீக பிரசன்னத்தில் தேவர்கள் சொல்லச் சொல்ல எழுதிய- அபூர்வ காரியசித்தியுண்டாக்கும் புத்தகம்' என்கிற குறிப்பு. வேடிக்கையாகக் கூட இருந்தது.

'அபூர்வ காரிய சித்தி உண்டாக்குகிற புத்தகமா?' என்ற கேள்வியுடனேயே அடுத்த பக்கத்தை திறந்தான். அதில் 1 முதல் 999 வரை பொடிக் கட்டங்களில் எண்கள் அடங்கி இருந்தன. கீழே ஒரு சிறு கட்டத்தில், 'இக்கட்டத்தில் கண்ணை மூடிக் கொண்டு ஒரு எண்ணைத் தொடவும். பின் கண்களைத் திறந்து அந்த எண்ணை அறிந்து. அந்த எண்ணுக்குண்டான தேவ மூர்த்தியை அடுத்து வரும் பக்கங்களில் அறியவும். அதன்பின் அந்த தேவகுமாரன் திருநாமத்தை ஆயிரம் முறைக்கு குறையாது பக்தியோடு நீங்கள் உச்சரிக்க, அந்த தேவகுமாரனே உங்களைத் தேடி வந்து உங்களுக்கு வேண்டியதை செய்து தருவான். இது சத்தியம். இதைக் கேலி செய்தோ அவநம்பிக்கையுடன் விமர்சனம் செய்தோ கஷ்டப்பட வேண்டாம் என்றும் எச்சரிக்கிறோம்.' என்று அந்தக் குறிப்பில் இருந்தது.

ராம்கியை ஒருவித பரபரப்பு தொற்றிக் கொண்டது. உடனேயே செயலில் இறங்கி விட்டான். ஒரு குச்சியை தேடிப்பிடித்து கண்களை மூடிக் கொண்டு அந்தத் தாளில் எண்கள் உள்ள கட்டம் மேல் கையை இயக்கி ஒரு இடத்தில் நிறுத்தி விட்டு கண்களைத் திறந்து பார்த்தான். அந்தக் குச்சி 513-ஆம் எண் மேல் இருந்தது. உடனே அடுத்த பக்கத்தைப்

புரட்டி 513ஆம் எண்ணுக்குரிய தேவமூர்த்தி யாரென்று பார்த்தான்.

'ஆயிரத்தெட்டு தேவகுமாரர்களில் 513க்கு ஒன்பதாகிய செவ்வாயின் ஆதிபத்திய மூர்த்தியான முருக அம்சம் கொண்ட வீரபாகு மூர்த்தியை தியானிக்க' என்று போட்டிருந்தது.

எப்படி தியானிப்பது என்பது முதற் கேள்வி.

அடுத்து இப்படி ஒரு புத்தகத்தில்- அதுவும் பழைய புத்தகத்தில் உள்ளதையெல்லாம் நம்பிக் கொண்டு தியானிப்பது எந்த அளவுக்கு புத்திசாலித்தனம் என்றும் ஒரு எண்ணம் எழும்பியது. அந்தப் புத்தகம் அச்சடிக்கப்பட்ட ஆண்டைப் பார்த்தான். 1903!

'அடேங்கப்பா... சரியாக 108 வருடங்களுக்கு முந்தைய புத்தகம்! இதையா பொருட்படுத்துவது? ச்சை... அப்படியே அந்த புத்தகத்தை தூக்கி ஒரு மூலையில் போட்டான். ஒரு முட்டாள்தனம் செய்யவிருந்து பின் அதிலிருந்து தப்பி விட்டான் போலவும் உணர்ந்தான்.

கல்லூரிக்கு புறப்பட்டுக் கொண்டிருந்தாள் நந்தினி. அரேபியக் குதிரைகளை பார்த்திருப்பவர்கள் நந்தினியைப் பார்த்தால் ஆச்சரியப்படுவார்கள். அந்த குதிரைகளை தூக்கிச் சாப்பிடும் மதர்ப்புடன் அப்படி ஒரு அழகு!

கல்லூரிக்கு தினமும் ஸ்கூட்டியில்தான் போகிறாள். அவளது ஸ்கூட்டி பவனியை ரசிக்க வென்றே ஒரு ஜொள்ளர் படை ஏரியாவில் தவம் கிடக்கிறது. ஆனால் அவள் யாரையும் லட்சியம் செய்வதே இல்லை. மனோகர் என்னும் ஒரு யமஹா பைக் காரன் மட்டும் எப்படியாவது அவளைக் கவர்ந்தே தீர வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு அலைகிறான்.

தினம் ஒரு புதுத்துணி- புது ஷூ!



ராத்திரி தூங்கும் போதுகூட மேக்கப்புடன்தான் போய்ப் படுக்கிறான். நந்தினிக்கும் அவன் அலைவது பற்றி நன்றாகவே தெரியும். இந்த பெண்களுக்கு ஒரே குஷா புத்தி. தன் பின்னால் ஒரு ஆண் அலைகிறான் என்றால் அப்படியே உச்சி குளிர்ந்து போவார்கள். ஒரு நாள்... ஒரே ஒரு நாள் அந்த நபர் வராவிட்டாலும் துடித்துப்போய் விடுவார்கள்.

நந்தினிக்கும் இன்று துடிப்பு காத்திருந்தது. ஆனால் மனோகரன் என்னும் அந்த யமஹா பைக் காரனை காணவில்லை.

ஸ்கூட்டியில் போகும்போது எப்படியும் இருமுறை அப்படியும் இப்படியுமாக குறுக்கில் நுழைந்து விடுவான். 'என்ன வந்தது அவனுக்கு இன்று' என்கிற கேள்வியோடு சுற்றிச் சுற்றிப் பார்த்தபடியே போனாள். அவனோ அவள் தன்னை பார்க்கிறாளா இல்லையா என்பதை அறிய ஒரு காருக்குள் அமர்ந்தபடியே அவளுக்கே தெரியாமல் அவள் ஸ்கூட்டியை இருமுறை கடந்து போனான். அப்போதெல்லாம் அவள் தவிப்பதைப் பார்த்தபோது அவனுக்கு அவள் தன் மேல் பார்வையோடு இருப்பது புரிந்து விட்டது. உள்ளுக்குள் மகிழ்ச்சி அவனிடம் பிறிட்டது.

கார் ஸ்டியரிங்கை விட்டு விட்டு 'ஹய்யா' என்றுகூட ஒரு முறை கத்தி விட்டான். அப்படியே காரை ஒரு ஓரமாக நிறுத்தி விட்டு இறங்கி பின்னால் வரும் நந்தினிக்கு ஒரு அதிர்ச்சி தரிசனம் தர காத்து நிற்கத் தொடங்கினான்.

அவளும் ஸ்கூட்டியில் கடந்து போகும்போது அவனைப் பார்த்தாள். ஆச்சரியமாகத்தான் இருந்தது. ஆனால் அதைக் காட்டிக் கொள்ளாதபடியே போனாள். அவனுக்கும் புரிந்தது.

'போடி... போ... எத்தனை நாளைக்கு இப்படியே எனக் கென்னன்னு போறேன்னு பாக்கறேன்...' என்று மனதுக்குள் முணுமுணுத்துக் கொண்டான். கொஞ்சம் சோர்வாகக்கூட இருந்தது. இதற்காக பாபு என்கிற நண்பன் ஒருவனிடம்

கெஞ்சிக் கூத்தாடி கார் வாங்கி வந்திருந்தான். காதலுக்காக யார் யாரோ, எதை எதையோ செய்கிறார்கள். காரை ஓசிகேட்டு வாங்கி வருவதுதானா ஒரு விஷயம்?

காருடன் திரும்பிச் சென்ற போது பாபுவும், "டேய் மனோ... என்ன ஆச்சு? உன் லவ் இன்னிக்கு ஓர்க் அவுட் ஆயிடிச்சாடா?" என்று கேட்ட போது, 'இல்லை, அவள் ஏமாற்றி விட்டாள்' என்று சொல்ல சங்கடமாக இருந்தது.

"ஓ... அசத்திட்டேன்ல..." என்று தடாலடியாக புளுகினான்.

"அப்படியே இந்த கார் என் கார்தான்... ரொம்ப வெளியே எடுக்கறதில்லேன்னு அடிச்சு விட்டிருப்பியே..." என்றும் அவன் கேட்டபோது வழிந்தபடியே சிரிக்க வேண்டி இருந்தது. காரை அவன் இலவசமாகக் கொடுத்ததற்குப் பிரதி பலனாக, "வாடா... போய் டிபன் சாப்டுட்டு வருவோம்..." என்று அவனோடு உட்லண்ட்ஸ் ட்ரைவ் இன்னுக்கு போக வேண்டிய ஒரு சின்ன நெருக்கடியும் ஏற்பட்டது.

சில நேரங்களில் விதி சிலரோடு கொடூரமாக கண்ணா மூச்சி விளையாடும். அன்று மனோகருடன் அது விளையாட விரும்பியது போல் இருந்தது.

மனோகரும் அவன் நண்பனும் போய் அமர்ந்த அதே டேபிளுக்கு பக்கத்து டேபிளில் நந்தினி இன்னொரு வாலிபனுடன் டிபன் சாப்பிட வந்திருந்தாள். அந்த வாலிபனும் செக்கச் சிவந்து, நல்ல உயரத்தில் காஷ்மீரில் பிறந்து வளர்ந்தவன் போல இருந்தான். கூர்மையான நாசிகள், பெண்களுக்கு மட்டுமே அமையும் ரோஸ் நிற உதடுகள், படுபடு அழகான மீசை என்று கவர்ந்து இழுத்தான்.

நந்தினியும் மனோவை பார்த்துவிட்டாள். பதிலுக்கு அவனைச் சூடேற்றத் தொடங்கினாள். அந்த வாலிபனுடன் மிகவும் குளோஸ் ஆக மூவ் செய்யத் தொடங்கினாள்.



சமயங்களில் அவன் மேல் சாய்ந்து குலுங்கி குலுங்கிச் சிரித்தாள். மனோவால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. ஆர்டர் செய்த ஐட்டங்கள் சாப்பிட வந்தும், அது எதையுமே சாப்பிடவில்லை. அவள் மேலேயே பார்வை இருந்தது. மனமோ புழுங்கித் தவித்தது. பாபுவுக்கு அவன் படும் அவஸ்தை புரிந்து விட்டது.

"என்னடா... அந்த கிரீன் சுடிதார் தான் உன் ஆளா?"

"அது... அது வந்து..."

"சும்மா சொல்லுடா..."

"ஆமாண்டா..."

"உன் லவ்வர்ங்கறே. அவளோ அந்தப் பக்கம் ஷாருக்கான் மாதிரி ஒருத்தன் மேலே சினிமா போஸ்டர் பசை மாதிரி அப்படி ஒட்றா..."

"அது... அது..."

"இதோ பார்... காதல், கான்சர், கர்ப்பம் இந்த மூணும் மறைக்க முடியாத விஷயங்கள். ஏதாவது ஒரு வகையில வெளில தெரிஞ்சிடும். என்ன தயக்கம்...? மனசு விட்டுப் பேசு. என்னால் முடிஞ்சா உதவி செய்யறேன். இல்லேன்னா ஒதுங்கிக்கறேன்..."

"சொல்றேன். எழுந்து வா. இங்க இவ அடிக்கிற லூட்டியை பார்த்துகிட்டு உன்கூட பேச எனக்குப் பொறுமை இல்லை" என்று பாபுவுடன் பாதியிலேயே எழுந்து வெளியேறினான்.

அவளோ அதை ஒரு பெரிய வெற்றியாக கருதினாள். அந்த ரோஸ் நிற யுவன் அவளது சித்தி மகன். அண்ணன் உறவு. பெயர் பார்த்திபன். அவனிடம் மனோவை துரத்தியதை பெருமையாகக் குறிப்பிட்டாள்.

"பார்த்தி... உன்கூட நெருக்கமா இருக்கறதா காமிச்சே அந்த ஜொள்ளு பார்ட்டியை துரத்தி விட்டேன் கவனிச்சியா?"

"கவனிச்சேன். ஏன்... ரொம்ப தொந்தரவு பண்றானா?"

"ஆமாப்பா... நான் எப்ப, எங்க வெளிய போனாலும் எஸ்கார்ட் மாதிரி பின்னாலேயே வந்துட்றான். கொஞ்சம்கூட பிடிக்கலப்பா..."

"அப்ப கூப்பிட்டு சொல்லிடு. ஏன் டீஸ் பண்றே?"

"என்ன நீ... இந்த மாதிரி ஆட்களை எல்லாரும் கொஞ்சம் கூட கேர் பண்ணக்கூடாது. அப்புறம் நான் பேசினதை சாக்கா வெச்சு, ரொம்பத்தான் அட்வான்டேஜ் எடுத்துப் பாங்க..."

"கேர் பண்ணக் கூடாதுங்கறே... டீஸ் மட்டும் பண்றே?"

"நீ என்ன சொல்றே...?"

"நான் எதையும் சொல்லல. நீ சொன்னதை வெச்சு உன் கிட்ட கேக்கறேன். கேர் பண்ணக் கூடாதுன்னா திரும்பிப் பார்க்கக் கூடாது. டீஸ் பண்றது அவனை ஒரு விதத்துல நீ கன்சிடர் பண்ற மாதிரிதான்..."

"அப்படிங்கறியா?"

"அப்படியேதான்..."

"அப்ப நாளைக்கே அவனைப் பார்த்து, 'இந்த தேவதாஸ் வேலையெல்லாம் காட்டாதே. எனக்கு உன்னைப் பிடிக்கலை'ன்னு சொல்லிட்றேன். சரியா?"

"முதல்ல அதைச் செய். செய்யறத தெளிவா செய். உன் அன்பில்லாம என்னால வாழ முடியாதுன்னு அவன் டயலாக் பேசினா, 'என்னை தங்கச்சியா நினைச்சிக்கோ. அண்ணன், தங்கச்சி உறவுலயும் நல்ல அன்பு உண்டு'ன்னு சொல்லு..." என்று பார்த்திபன் நந்தினிக்கு நிறையவே எடுத்துக் கொடுத்தான்.



நந்தினி, பார்த்திபனை அவன் சொன்ன பதிலுக்காகவே ரசித்தாள்.

"காதல் விஷயத்துல பார்த்தி... உனக்கு நல்ல அனுபவம் போல இருக்கு..." என்றாள்.

"ஒரு அனுபவமும் இல்ல. எனக்கு பிரத்யேகமான அபிப்ராயம் உண்டு. அவ்வளவுதான்..."

"உன் அபிப்ராயம் என்ன?"

"காதல்னாலே காமம்ப்பா... அதைத்தவிர வேற ஒண்ணும் இல்ல..."

"மெள்ளப் பேசு. சினிமாக்காரங்க காதுல விழுந்துடப் போகுது. அப்புறம் இந்த பத்திரிகைக்காரங்க... இவங்கள்ளாம் காதலை புனிதம்னு நினைச்சுக்கிட்டு இருக்காங்க..."

"அதெல்லாம் சும்மா. அவங்களுக்கும் காதல்னா காமம்னு நல்லாத் தெரியும். இருந்தாலும் மனித குலத்துக்கு பிடிச்ச ஒரு பொதுவான உணர்வு அது. அப்புறம் எல்லாருக்குள்ளேயும் ஒரு பிடிச்ச பொண்ணு- பிடிச்ச ஆணு... அப்புறம் இதுதான் கிடைக்கும், இதெல்லாம் நமக்கு கிடைக்கவே கிடைக்காதுங்கற மாதிரி சில தாட்ஸ் இருக்கும். இந்த லவ் அந்த தாட்ஸ்-ஐ டிஸ்டர்ப் பண்ணாம நாய், குட்டியை கொஞ்சற மாதிரி தடவிக் கொடுத்து கொஞ்சுமாம்... அதனால எல்லாருக்குமே காதல்னா சப்கான்ஷியஸ்ல ரொம்ப பிடிக்கும். அதனாலதான் லவ் சப்ஜெக்ட்ஸ் சினிமாவுல எப்பவும் ஜெயிக்குது. இங்க மட்டுமில்ல... உலகம் முழுக்க..."

பார்த்திபன் ஏதோ தேர்ந்த உளவியல் அறிஞன் போலப் பேசினான். நந்தினி வாய் பிளந்தாள். இறுதியாக மீனாவின் அவன் மேலான ஈடுபாடும் காமம் சார்ந்ததுதான் என்று சொல்லி முடித்தான். அவன் அப்படிச் சொன்னது அவன்

வரையில் வேறு மாதிரி ஒரு முடிவுக்கு அவளைப் பிடித்துத் தள்ளிவிட்டது. அது...?

பீச்சில் அங்கங்கே சில ஜோடிகள் கடலை போட்டுக் கொண்டிருந்தனர். மெரீனா என்றாலே காதல் களம் என்று விளங்கியது முன்பு...

இன்றைய இளம் காதல் ஜோடிகள் வருவதற்கே அஞ்சும் இடமாகி விட்டது. அது சிலர் வரையில் போலீஸ்காரர்களே மாமூல் கேட்டு பிடுங்கி எடுத்து பொய்க் கேஸ் போடுவது வரை போய் விட்டதால் அது எல்லா காதலர்களையும் எச்சரித்து விட்டது.

கரையெல்லையில் அலைகள் மட்டும் வந்து போய்க் கொண்டிருந்தன. ஓயாத முயற்சிக்கு அலைகளைத்தான் சொல்ல வேண்டும்.

மனோகருக்கும் அந்த அலைகளைப் பார்க்க அப்படித் தான் தோன்றியது. கூடவே பாபு.

"டேய்..."

"ம்..."

"தனியா பேசுவோம்னு கூட்டிக்கிட்டு வந்தே. அலையை வேடிக்கைப் பார்க்க இல்லை."

"உண்மைதான். ஆனா இந்த அலைகளை பார்க்கும் போது எனக்குள்ள ஒரு பெரிய கேள்வி..."

"என்ன?"

"ஒரு நிமிஷம் கூட சும்மா இல்லாம அடிச்சுக்கிட்டே இருக்கே... கவனிச்சியா?"

"அதுக்கு என்ன இப்போ?"

"எப்பவாவது தான் சுனாமி அலையாகி இந்த கரையை இது தாண்டுது. மத்தபடி இது அடிச்சுக்கிட்டே தான் இருக்கு.."



"அறுக்காம விஷயத்துக்கு வா..."

"நந்தினி வரைல நானும் விடாம முயற்சி செய்யப் போறேன்..."

"இதை சொல்லத்தான் இவ்வளவு தூரம் கூட்டிக்கிட்டு வந்தியா?"

"இல்லடா... அவளை மறக்க முடியுமான்னு எனக்குள்ள கேட்டுப் பார்த்தேன். முடியாதுன்னு தோணிச்சு. அதான்..."

"நான் எப்படி நினைக்கறேன்னா... நல்லா இருக்கிற நீ பைத்தியமாகியே தீரணும்னு முடிவு பண்ணிட்டே.... இல்லே உன் மனசு பைத்தியமாகிட்டு வருது. அதான் நீ இப்படியெல்லாம் உளர்றேன்னு நினைக்கறேன்..."

"என்னடா பாபு... காதல் எவ்வளவு தெய்வீகமானது. அதைப் போய் இப்படி கேவலப்படுத்திட்டியேடா..."

"காதல் தெய்வீகமானதா...? எவன்டா சொன்னது? அவனைக் கூப்பிடு என்கிட்ட....."

"யாரோ என்னடா... நான் சொல்றேன். அது தெய்வீகமானதில்லையா?"

"அது என்னடா மனோ, இந்த தெய்வீக காதல் நல்லா கலரா, கிழங்கு கிழங்கா உடம்பு வெச்சிருக்கற பொண்ணுங்க மேல மட்டும் வருது? நல்ல மனசு, நல்ல படிப்புன்னு இருக்கற பொண்ணுங்க வத்தலா, தொத்தலா, கறுப்பா இருந்துட்டா அவங்க மேலெல்லாம் யாருக்குமே வரமாட்டேங்குது..?"

பாபு கேட்டதில் உள்ள நியாயம் மனோகரை பதில் சொல்ல முடியாமல் திணற வைத்தது.

"சொல்லுடா... தெய்வீகமானதுன்னா அழகு பார்த்தா வரக் கூடாதுடா. அறிவு, அன்பு, பண்பு, அப்புறம் வேற பல சிறப்புகளைப் பார்த்துத்தான் வரணும். அப்படி வர்றது தான்

காதல்னா அதுதான் தெய்வீகமானது. அப்படி தெய்வீக காதல் பலருக்கு இல்ல... சிலருக்கு ஏற்பட்டாகூட போதும், இந்த நாட்டுல தான் அழகா பிறக்கலியே, கறுப்பா பிறந்திட்டேனே, குட்டையா பிறந்திட்டேனேன்னு நினைக்கற பல பெண்களுக்கு அருமையான வாழ்க்கை கிடைச்சிடும் தெரியுமா.."

பாபு கேட்கக் கேட்க மனோகருக்கு தலை தாழ்ந்து கொண்டது. அவன் நந்தினி மேல் ஆசை கொண்டதும் அவளது வித்தியாசமான அழகுக்காகத்தான். நெற்றியில் எப்பொழுதும் ஒரு சுற்றை முடி முன்னால் விழுந்து விழுந்து மறிக்கும். அதை அவள் ஒதுக்கி விட்டுக் கொள்ளும் விதம் நல்ல அழகு! அதே போல ஒரு ஓரமாய் சாய்ந்து கொண்டு பார்ப்பது, ஸ்கூட்டி ஓட்டும் போது கால் ஊன்றிக் கொண்டு நிற்பது என்று அவளது ஒவ்வொரு விஷயமுமே அவனை உலுக்கி எடுத்தன. நாட்டில் எவ்வளவோ அழகான பெண்கள் இருக்கிறார்கள். அவர்கள் அழகாக இருக்கிறார்கள். அவ்வளவுதான்! ஆனால் சில அழகுகள் தான் மனதை கிள்ளுகின்றன. அந்த அழகு எனக்கே எனக்கு மட்டும் வேண்டும் என்று ஒரு வித ராட்சஸ உணர்ச்சியைத் தூண்டி விடுவதாக இருக்கிறது. அந்த அழகு ஏன் இப்படி பொறாமைத் தீயைப் போட்டு மனிதனை வாட்டுகிறது என்பதெல்லாம் உளவியல் அறிஞர்கள் ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்க வேண்டிய விஷயம்.

மனோகர் வரையில் பாபு கேட்ட கேள்விகள் எல்லாம் சில நிமிடங்கள் வரையில்தான் அவனைக் கட்டிப் போட்டது. நேரம் வந்துவிட்டால் முட்டை ஓட்டை உடைத்துக் கொண்டு குஞ்சானது வெளியே வந்து விடுவது போல, அவனது ஆசையும் பாபு சொன்னதை எல்லாம் ஒரு ஓடு போல உடைத்துக் கொண்டு திரும்பவும் நந்தினியிடம் போய் நின்றது.



"பாபு... எனக்கு நந்தினி வேணும். அவ எனக்குன்னு பொறந்தவ. அவ இல்லாத வாழ்க்கையை நினைக்கவே என்னால முடியல. நீ என்ன சொன்னாலும் சரி..." என்றான் இறுதியாக.

"சரி... அப்ப உன்னை அந்த ஆண்டவன்தான் காப்பாத்தணும்..." என்றான் பாபுவும்.

"இல்லடா... என் விடாமுயற்சி, வெறித்தனமான காதல் எல்லாம் என் நந்தினியை நிச்சயமா கவரும். எனக்கு நம்பிக்கை இருக்குடா..." என்று திரும்பவும் அவன் நினைப்பானான்.

இல்லையில்லை... அவன் எண்ணமாகவே பற்றி எரியத் தொடங்கினான்.

## 3

**உ**லகில் சக்தி என்பது இருவிதமாக உள்ளது. ஒன்று இயங்கு சக்தி. இன்னொன்று மனோசக்தி. இயங்கு சக்திக்கு ஒரு எல்லையில்லாதது போலவே மனோசக்திக்கும் எல்லையில்லை என்பதை பலரும் நிரூபித்திருக்கின்றனர்.

இயங்கு சக்தி பல வடிவம் எடுத்து மின் சக்தி, அணு சக்தி, எரிசக்தி, விசை சக்தி என்று பல பரிமாணங்களை பெற்றுவிட்டது. மனோசக்தியும் இப்படித்தான். ஆனால் இதை எட்டு மகா சக்திக்குள் பெரியவர்கள் அடக்கி விட்டனர். ஒருவர் நல்ல மனோசக்தி உடையவராக இருந்தால் உலகின் இயங்கு சக்தி அவ்வளவையும் ஓரம் கட்டி விடலாம். ஒரு வாகனம் இருக்கிறது. அது எரிசக்தியால் ஓடக் கூடியது. அதில் நாம் பயணம் செய்யலாம். அது நம்மைச் சுமந்து ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு வேகமாக செல்ல பயன்படுகிறது. அவ்வளவுதான். மனோசக்தியுள்ள ஒரு மனிதன் அவனது எண்ணும் சக்தியால் நொடியில் அந்த வாகனம் கடக்கும் தூரத்தைக் கடந்து விடுவான். இங்கே மனிதன் கண்டறிந்த வாகனம் அவன் மனோசக்தியின் முன்னால் சென்று விடுகிறது.

அந்தக் காலத்தில் இவ்வளவு வசதி வாய்ப்புகள் இல்லாத நிலையில் மனோசக்தியை உச்சபட்சமாக பயன்படுத்திய பலர் இருந்தனர். இன்று பல உபசக்திகள் இருப்பதால் அந்த உச்சபட்ச மனோசக்தி பற்றி எண்ணிப் பார்க்கக்கூட பலர் தயாராக இல்லை.

ஆனால் மனோசக்தியால் சாதித்தவர்களின் பேச்சைக் கேட்டால் அற்புதங்களை உட்கார்ந்த இடத்தில் இருந்து கொண்டே சாதாரணமாகச் செய்யலாம்.

**அ**ன்றைக்கு கடையைத் திறந்து கொண்டு ராம்கி உட்கார்ந்தபோது மணி சரியாக ஒன்பது. ராவுத்தர் போலவே ஒரு ஊதுபத்தியை ஏற்றி மணக்க மணக்க செருகிக் கொண்டான். அந்த பழைய புத்தகக் கடைக்குள் ஊதுபத்தி வாசம் வளைய வளைய வர ஆரம்பித்தது. அங்கங்கே கிடந்த புத்தகங்களை எடுத்து அப்படியே அடுக்கி வைத்தான். அடுக்கும்போது அது என்ன புத்தகம் என்றும் ஒரு பார்வை பார்த்தான். சில புத்தகங்கள் மர்ம நாவல்கள். சில புத்தகங்கள் தமிழ் இலக்கியம் சார்ந்தவை. சில கவிதைகள். கவிதை புத்தகத்தை மட்டும் கையில் எடுத்து பிரித்துப் படித்தான்.

தமிழார்வம் உள்ள பலர் கவிதைக்கு முயன்றிருக்கிறார்கள். அவர்களில் பலர் புத்தகமாகவே போட்டிருக்கிறார்கள். அது என்னவோ தெரியவில்லை. எல்லோருமே கன்னிப் பெண்ணையும், நிலவையும் பாடுவதை மட்டும் விடவேயில்லை.

'வெள்ளித்தட்டே... ஒளிப்பொட்டே...!
ஏன் கறைபட்டாய்... எதனால் மேகச்சிறை படுகின்றாய்?
'இளைப்பதும், பருப்பதும் எதோடு சேர்த்தி...?
நித்தமும் பௌர்ணமியானால் இத்தரை ஒளிருமே...
ஏன் வர மறுக்கிறாய்?
உன் அருமை தெரியத்தான் அமாவாசையா?
மறுப்பு வானில் யாருக்கும் விருப்பமில்லை...



சந்திரனே... நீ ஜொலிக்கும் வானமே
பூமிக்கு விருப்பம்...!'

ராம்கி சந்திரன் பற்றிய அந்தக் கவிதையில் மூழ்கிய போது கடை முன் ஸ்கூட்டி ஒன்று தேங்கும் சப்தம் நிமிர்ந்தான்.

எதிரில் நந்தினி.

கவிதையில் அவன் வாசித்த நிலவு எதிரில் ஒரு பெண்ணாக... முதல் பார்வையிலேயே சில பெண்கள் ஆண் வர்க்கத்தையே சாகடித்து விடுவார்கள். அதில் சில ஆண்கள் அந்தப் பெண்களுக்காக எவ்வளவு கொலை வேண்டுமானாலும் செய்யத் துணிந்து விடுவார்கள். 'இவளுக்காக நான்கூட எதை வேண்டுமானாலும் செய்வேன்' என்பது போல ராம்கி அவளைப் பார்க்க...

"பாய் இல்ல...?" -அவள் இதமாகக் கேட்டாள். குரலில் குயில் ஒளிந்திருப்பதை உணர்ந்து கொண்டான்.

"நானும் பாய்தான்... ஐ மீன், பி.ஓ.ஒய். பாய்..." என்றான்.

அவள் அதை ரசித்து சிரித்தவளாக, "பாய்கிட்ட நான் ஒரு புத்தகம் கேட்டிருந்தேன்..." என்று ஆரம்பித்தாள்.

"என்ன புத்தகம்?"

"இங்கிலீஷ் நாவல் அது..."

"யார் எழுதினது...? இர்விங் வாலஸ் ஆர் அகதா கிறிஸ்டி...?"

"நோ... நோ... எட்வின் பார்னர்னு புது ரைட்டர் எழுதிய When I was in Moon..."

"ஓ... நான் நிலவில் இருந்த போதுங்கற புத்தகமா? அவர் எப்ப நிலவுக்குப் போனாராம்?"

"எழுத்தாளர்கள் நிலவுக்கு மட்டுமல்ல... எங்க வேணும்னா போவாங்க. அவங்க கற்பனைக்கு எல்லை ஏது?"

"சரிங்க... நான் பார்த்து எடுத்து வைக்கிறேன்..."

"அப்ப நாங் இனி வரமாட்டேளா?"

"அப்படித்தான் வெச்சுக்கங்களேன்..."

"நீங்க...?"

"என் பேர் ராம்கி. இப்போதைக்கு இது என் கடை..."

"குட்... நான் ஒரு புத்தகப் பிரியை. அடிக்கடி வருவேன்..."

"இன்னிக்கு சாயந்திரமே வாங்க. உங்க நிலா புத்தகம் ரெடியா இருக்கும்..."

"தேங்க்ஸ்..."

"உங்களை ஒண்ணு கேட்கலாமா?"

"தாராளமா..."

"தமிழ்ப் புத்தகங்களும் படிப்பீங்கதானே...?"

"நிச்சயமா. ஆனா அது படிக்கற மாதிரி இருக்கணும்..."

"உங்களுக்கு அந்த மாதிரி எத்தனை புத்தகம் வேணுங்க?"

"உங்களுக்குப் பிடிச்ச புத்தகத்தை சொல்லிடாதீங்க. என் ரசனையே வேற மாதிரி."

"இல்லீங்க... நான் என் ரசனைக்கே சொல்லலை. பொதுவா உங்களை மாதிரி அழகான- ஆங்கிலம் தெரிஞ்ச பெண்களை யாரோட எழுத்து கவரும்னு எனக்கு ஒரு கணக்கு இருக்கு. வேணும்னா டெஸ்ட் பண்ணி பார்க்கறீங்களா...?"

"சரி... ஒரு புக் கொடுங்க பார்ப்போம்..."



-அவள் கேட்க, அவன் உடனே ஒரு மாத நாவலை எடுத்துத் தந்தான்.

"நம்ம எழுத்தாளர்களும் வெளிநாட்டு எழுத்தாளர்களை விஞ்சி எங்கேயோ போய்ட்டாங்க. இந்த நாவலை படிச்சுட்டு சொல்லுங்க..." என்றான். அவளும் வாங்கிக் கொண்டு புறப்பட்டாள். அவள் சென்ற பிறகு அவளது மேனியில் அவள் செய்து கொண்டிருந்த ஸ்ப்ரே வாசம் அந்த இடத்தில் அடித்துக் கொண்டிருந்தது. அது ராம்கிக்கு மிக பிடித்துப் போனது.

அவள் போன ஐந்தாவது நிமிடம் அவன் நின்ற இடத்தில் பகீலா! அவள் ராம்கியைப் பார்த்த விதமே ஒரு திருசாக இருந்தது.

"உங்களுக்கு என்ன வேணும்?"

"ஒரு தகவல்..."

"தகவலா?"

"ஆமாம். கொஞ்சம் முந்தி இங்க ஒரு பொண்ணு வந்து புத்தகம் வாங்கிட்டுப் போச்சுதானே?"

"ஆமாங்க... ஒரு மர்ம நாவல் வாங்கிட்டுப் போனாங்க..."

"அப்படியா... அவங்க இங்கிலீஷ் நாவலால்ல விரும்பிப் படிப்பாங்க...?"

"ஆமாம். When I was in Moonனு ஸ்டீவின் பர்னார்ட்கறவர் எழுதின ஒரு நாவலைக் கேட்டாங்க. தேடி எடுத்துத் தரேன்னு சொன்னேன். நீங்க யாரு?"

"அது உனக்கு அவசியமில்லாத கேள்வி..." -பகீலாகர் முருங்கைக்காலை ஒடித்தது போல் சொல்லவும் ராம்கிக்கு அவள் கன்னத்தில் சதைப் பகுதியைப் பார்த்து அறைந்த மாதிரி இருந்தது.

"நீ என்கிட்ட அந்த பொண்ணு பத்தி எல்லா விவரத்தை யும் தெரிஞ்சுக்கலாம். ஆனா நான் 'எதுக்கு கேக்கறே'ன்னு மட்டும் உனக்கு அது பிடிக்காது. அப்படித்தானே?"

-ராம்கியும் மடக்கத் தயாரானான்.

"அது... அது..."

"எதுப்பா? சரி, நீ இடத்த காலி பண்ணு. நல்லதுக்கு காலம் இல்லைன்னு சும்மாவா சொன்னாங்க..."

"சாரி... வெரிசாரி... நான் இப்ப கொஞ்சம் டென்ஷன்ல இருக்கேன். அதோட நந்தினி விஷயத்துல நான் ரொம்ப பொஸஸிவ். அதான்... அவ சம்பந்தமா யார் எது கேட்டா லும் நான் கோபப்பட்டுடறேன்..."

"என்ன பொஸஸிவ்வோ... ஐயா பேசறத பார்த்தா விரட்டி விரட்டி அந்தப் பொண்ணைக் காதலிக்கிறீங்கன்னு தெரியுது..."

"ஆமாம். நந்தினிதான் என் உலகம். அவதான் எனக்கு எல்லாம். அவ இல்லாம என்னால வாழ முடியாது..."

"இதெல்லாம் டி.வி.ல வர்ற ட்ராமா டயலாக்குங்க. நீ என்ன நிறைய சீரியல் பார்ப்பியா?"

"ஓக்... நான் உன்னை வா போன்னு கூப்ட்டதுக்காக பதிலுக்கு நீ என்னைக் கூப்டாதே. நான் யார் தெரியுமா?"

"யாரா இருந்தா என்ன தம்பி... மரியாதைங்கறது ஒன்னும் ஒன் வே டிராஃபிக் இல்லை. கொடுத்தாத்தான் கிடைக்கும்."

"ஓ.கே. நான் உன்னை... சாரி, உங்களை வாங்க போங்கன்னே கூப்படறேன். போதுமா?"

"நல்லது. இடத்தைக் காலி பண்ணுங்க..."

"போறேன். அதுக்கு முந்தி ஒரு சின்ன ரிக்வெஸ்ட்..."

"என்ன?"



"அந்த இங்கிலீஸ் நாவல் கிடைச்சா நீங்க நந்தினிக்குக் கொடுக்கக்கூடாது. எனக்குத்தான் கொடுக்கணும்..."

"பார்றா... ஏன்... அதை நீங்க கொண்டுபோய் கொடுத்து 'என்'னை டெவலப் பண்ணிக்கலாம்னு உத்தேசமா?"

"ஆமாம்... நந்தினியை அசத்தணும். அசத்திக்கிட்டே இருக்கணும். ஒரு நேரம் இல்லை ஒரு நேரம் அவ மனது மாறி 'ஐ லவ் யூ' சொல்ல மாட்டாளா?"

"அப்ப அம்மையார் உங்களை இப்ப கொஞ்சம் கூட கன்சிடர் பண்ணலை. உங்க காதல் ஒரு ஒருதலைராகம்னு சொல்லுங்க..."

மனோகர், ராம்கியின் அந்த கேள்வி முன்னால் மௌனமாக தலையைக் குனிந்தான். கொஞ்சம் கண் கலங்கவும் செய்தான். அந்த கலங்கிய கண்களே அவன் நந்தினியை எந்த அளவு நேசிக்கிறான் என்று சொல்லாமல் சொல்லி விட்டது.

"ஹலோ. என்ன இது...? நான் என்ன சொல்லிட்டேன்னு இப்படி கண் கலங்கறீங்க? உங்க காதல் ஜெயிக்கும்ங்க. அந்த நந்தினி உங்க நந்தினிதான்... போதுமா?" என்று திரும்பவும் வேடிக்கையாகப் பேசி மனோகருக்குள் தெம்பை உருவாக்கினான். அடுத்த நொடியே மனோகர் முகத்தில் ஒரு மத்தாப்பு பற்றி எரிவது போல ஒரு ஜொலிப்பு.

"உங்க வாய் முகூர்த்தம் அப்படியே நடக்கட்டுங்க..."

"நடக்கும்... நீங்க சந்தோஷமா போய்ட்டு வாங்க. புத்தகத்தையும் எடுத்து வைக்கறேன். நீங்களே பிரசன்ட் பண்ணுங்க. தொடர்ந்து உங்க காதலுக்கு எந்த உதவி வேணும்னாலும் கேளுங்க. செய்யறேன்" என்று கூறவும் மனோகருக்கு வானில் மிதக்கிற மாதிரி இருந்தது.

"தேங்க்யூ பிரதர். தேங்க்யூ வெரிமச். ஒரு ஒவ்வொர் கழிச்சு வர்றேன். புக்கை எடுத்து வையுங்க. ஆயிரம் ரூவான்னா

ஜும் சரி. நான் அதை வாங்கிட்டுப் போய் நந்தினியை ஒரு அசத்து அசத்தறேன்..."

"உங்களுக்கு ஒரு ஐடியா கொடுக்கவா?"

"என்ன?"

"புக்கை வாங்கிட்டுப் போங்க. பிரசண்ட் பண்ணாதீங்க..."

"அப்புறம் எப்படி பிரதர் அவளை அசத்த முடியும்?"

"முடியும் சாமி. அந்தப் பொண்ணு எதிர்க்க அந்த புத்தகத்தைப் படியுங்க. அந்தப் பொண்ணு உங்ககிட்ட கேட்கணும். அப்படி கேட்கலைன்னாலும் பரவாயில்லை... 'எனக்குப் பிடிச்ச புத்தகமே இவருக்கும் பிடிச்சிருக்கு'ன்னு நினைச்சாலே போதும். ரசனை ஒத்துப் போறதா நினைக்கிறது எவ்வளவு பெரிய விஷயம்..."

"அட... இது பிரசண்ட் பண்றதைவிட பவர்ஃபுல்லா இருக்கே..."

"ஆமாம். காதல்ல கருத்து ஒற்றுமை ரொம்ப முக்கியம். இப்ப... அப்புறமா வேணும்னா புக்கை படிக்க கொடுங்க. என்ன?"

"ஒருவேளை உங்ககிட்ட வந்து நின்னா?"

"என்கிட்ட அந்த புக் ஒரு காப்பிகூட இல்லைன்னு சொல்லி விடறேன். அது மட்டுமில்லை... அவங்க எந்த மாதிரி புக் கேட்டாலும் உங்களுக்கும் ஒரு காப்பி எடுத்து வெச்சு தந்துட்றேன். நீங்களும் அவங்க எடுக்க படிங்க. அவங்க அப்படியே ஆடிப் போயிடணும்..."

-ராம்கி மினோசருக்கு சரமாரியாக ஐடியா கொடுக்க, வந்த தொடக்கத்தில் அலட்சியமாகவும், இறுக்கமாகவும் வந்த மினோ இப்பொழுது ராம்கியை ஒரு காதல் மான்டராகவே நினைக்க ஆரம்பித்துவிட்டான்.



"தேங்க்யூ பிரதர்... தேங்க்யூ ஸோ மச். எனக்கும் நந்தினிக்கும் கல்யாணம் ஃபிக்ஸ் ஆச்சுன்னா முதல் பத்திரிகை உங்களுக்குத்தான்..." என்றபடியே பைக்கில் ஏறிக்கொண்டு பறந்து மறைந்தான்.

ராம்கிக்கு சிரிப்பாக வந்தது.

இந்தக் காதல்தான் சில மனிதர்களை என்ன பாடெல்லாம் படுத்திவிடுகிறது.

## 4

இந்த பூமியில் நாவலந்தீவாகிய இந்திய மண் பலவிதங்களில் விசேஷமானது. வட்டமான பூமியின் மையத்தில் பூமத்தியரேகை தொட்டுச் செல்லும் விதத்தில் உள்ள மையமான நாடாகும். இதனால் மேல், கீழ், இடம், வலம் என்னும் நான்கு பக்கமும் சீரான அளவு இடப்பரப்பை உலக அளவில் இது கொண்டுள்ளது. அத்துடன் கிழக்கு, மேற்கு, தெற்கில் இது நீரால் சூழப்பட்டு, வடக்கில் உலகின் உயர்ந்த சிகரமான இமயத்தைத் தன்னகத்தே உடையது. ஒரு வகையில் இமயம் என்பதும் நீரால் சூழப்பட்ட ஒரு அமைப்பே. கடல்நீர் உறையாமல் அலையோடு கிடக்கிறது. இமயமோ உறைந்து போய் நிமிர்ந்து நிற்கிறது. அந்த வகையில் நாற்புறமும் நீரால் சூழப்பட்ட ஒரு தீவு தான் இந்தியா. அதனால்தான் நாற்புறமும் நீர் இருப்பதை உணர்த்தும்விதமாக நாவலந்தீவு என்று நம் நாட்டுக்கு பெயரிட்டனர்.

இந்த நாவலந்தீவினில் ஒரு அதிசிறப்பான விஷயம். வடக்கே இமயம் என்றால் தெற்கில் பொதிகை! இமயம் பனிக்காடு என்றால் பொதிகை பச்சைக்காடு. சாதாரண பச்சைக் காடல்ல... உலகில் வேறு எங்கும் இல்லாத பலவிதமான மூலிகைகள் வளர்ந்து கிடக்கும் பச்சைக் காடாகும்.

இந்த பச்சை மலைக் காட்டில் திரிந்தவர்தான் வித்யாரண்யர் என்கிற சன்யாசி. இவர் தவம் பற்றி யாரும் சிந்திக்காத விதத்தில் எல்லாம் சிந்தித்தவர். இவர் எழுதியதே 'காலசக்கர பலகணியம்.'

அதுசரி... அப்படி என்ன இருக்கிறது அந்த பல கணியில்..?

கடைசியில் தலைகீழாக புரட்டிப் போட்டு தேடியதில் அந்த ஆங்கில நாவல் புத்தகம் எப்படியோ அகப்பட்டு விட்டது. ஒவ்வொரு புத்தகமாக திறந்து பார்த்து பார்த்து தேடும் போது மீண்டும் ஒரு முறை நாம்பியின் கண்ணில் பட்டது அந்த 'காலசக்கர பலகணி' என்கிற அந்த பழைய புத்தகம்.

ஆங்கில புத்தகத்தை எடுத்து பத்திரமாக மேஜை மேல் வைத்து விட்டு அந்த பலகணியை திரும்பவும் கையில் எடுத்தான். 'என்னுரை' என்கிற பகுதியில் அந்த புத்தகத்தை எழுதிய முதலியார் தனது அனுபவக் கருத்துக்களை பதிவு செய்திருந்தார்.

வாசக மகா ஜனங்களே!

இதனால் சகலமானவருக்கும் நான் வந்தனங்கள் கூறிக் கொள்ளும் அதே சமயத்தில் நான் ஒரு மகா பாக்யசாலி என்பதோடு இந்தப் பொஸ்தகம் சொந்த மாக உள்ள ஒவ்வொருவருமே மிக மிக பாக்ய சாலிகள் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் கூறிக் கொள்கிறேன். பொதுவில் பொஸ்தகம் எனப்படும் நூலானது அறிவைத் தருவதாகும். வாசிப்பவனால் தான் நிறைய யோசிக்க முடியும். யோசிப்பவனே சிறந்த ஞானவானாவான். எனவே ஒவ்வொரு பொஸ் தகமும் மனிதர்களை யோசிக்க வைத்து ஞான வானாக்குவதால் பொஸ்தகங்களை நான் புதையலை விட பெரிய செல்வமாக கருதுகிறேன். இந்த புதையல் செல்வம்கூட ஒரு நாள் இல்லை ஒரு நாள் களவு போகலாம்; அல்லது செலவாகி விடலாம். ஆனால் ஒருவர் படித்தது எப்பொழுதும் வீண் போகாது. அதிலும் இந்த பலகணி இருக்கிறதே மிகுந்த விசேஷ



மானது. இதை வித்யாரண்யர் என்கிற முனிவர் உபதேசிக்க அதைக்கேட்ட அவரது சீடர்கள் பலரில் இறுதியாக மிஞ்சிய ஒருவரை நான் சந்தித்தபோது அவர்தான் எனக்கு பலகணி பற்றிக் கூறி இதை பயன்படுத்தும் வழியையும் கூறினார்.

இதனால் 'காலசக்கர பலகணி' பற்றி முதலில் தெளி வாக அனைவருக்கும் கூறிவிடுவது நல்லது என்பது என் முதல் கருத்தாகும்.

பலகணி என்றால் பலவிதமான கணிப்புகளை உடையது என்று பொருள். காலசக்கர பலகணி எனும் பொழுது காலமாகிய நேரத்தை வைத்து அந்த நேரத்துக்குண்டான பலாபலன்களை கணித்து இதில் கூறப்பட்டுள்ளது. அந்த வகையில் இது ஒரு ஜோதிட நூலைப் போன்றதுதான்... இதன் பலாபலன்களை கணித்தவர் மகரிஷி வித்யாரண்யர் ஆவார். இவர் சரஸ்வதி தேவியின் குமாரர் போன்றவர். படைப்புத் தொழிலுக்கதிபதியாகிய பிரம்மாவின் பரிபூரண கடாட்சம் பெற்றவர். நம்மைப் போன்ற உயிர்கள் எல்லாம் பிரம்மத்திலிருந்து வந்தவர்களே... நம்மை வழி நடத்துபவர்கள் கிரகாதிபதிகளாவர். அந்த கிரகாதிபதிகள் சஞ்சரிக்கும் காலநேரமறிந்து எங்கே எவர் இருக்க உற்ற உயிருக்கு, அதனால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவதே இந்த பலகணியாகும். கணிதத்தில் சில சூத்திரங்கள் இருக்கும். இதன்படி ஐந்தும் ஐந்தும் பெருக்கினால் அது இருபத்தைந்தாகும் என்பது எப்படி எவர் எத்தனை முறை பெருக்கினாலும் மாறாத அடிப்படையான அளவாக உள்ளதோ அதுபோன்று மாறாத சூத்திரங்களின் அடிப்படையில் இவை கூறப்பட்டுள்ளன. மற்றும் பிரசன்ன சக்கரமும் இதன் தனிச்சிறப்பு. கால சக்கரத்தில் காலத்தை

வென்று வாழும் பல நூறு தேவ தேவியர்கள் உள்ளனர். நமக்கு ஒரு ஆண்டுக் கணக்கு என்பது இவர்களுக்கு ஒரு நாளாம். அந்த வகையில் இக் கலியுகத்தில் ஆயிரம் ஆண்டுக்கு மேல் தேவசக்தியாக வாழ்ந்திடும் வரத்தினை இவர்கள் பெற்றவர்களாவர்.

கீழ்த்திசை நாட்டு கதையில் வரும் பூதா என்னும் பூதமானது எப்படி தேய்க்கப்படும் விளக்கில் இருந்து வெளிவந்து எஜமானனை ரட்சிக்கிறதோ அப்படி இதன் பிரசன்னஜாதகத்தில் உள்படி ஒருவர் தியானம் புரிய உரிய தேவர் வந்து வழிகாட்டுவர்.

ஆனால் ஒருவர்க்கு ஒரு முறையே பிரசன்ன பல கணி சித்திக்கும் என்பது மிக முக்கியம். மொத்தத்தில் நாமது தமிழ் பேசும் நல்லுலகமும், ஆன்மீக வித்தியார்த்திகளும் நலம்பெற வேண்டி வித்யாரண்யர் க்ருபையாலே அவரே மானசீகமாய் அவரது சிஷ்யருக்கு கூறிட அவரது சிஷ்யர் நான் தியானத்தில் அமர்ந்த சமயத்தில் எனக்கு கூறிட அதை இங்கே நான் அப்படியே எழுதி அச்சுப்படுத்தியுள்ளேன்.

இதன் அச்சுப் பிரதிகளும் கூட மொத்தம் 108 பிரதிகளேயாகும். இதற்கு கூடுதலான எண்ணிக்கை கூடாது என்றும் இதுவே போதுமானது என்றும் வித்யாரண்யர் ஆன்மா உரைத்தது. எனவே அபூர்வ நூலான இதை பிரம்மமாகவே கருதி, வாழ்க்கை வழிகாட்டியாக கருதி பயன்படுத்துங்கள்.

எவர் ஒருவர் இதைக் காண்கிறாரோ அவர் இதன் மூலம் பயன்பெறத் தகுதியானவர். இதை எப்பொழுது கண்டாலும் கண்ட நொடியில் இருந்து அரைக்கால் நாழிகைக்குள் கண்டவர் எதிரில் ஒரு கர்ப்பவதி கண்ணில் படுவாள். அதுவே இந்த நூல் சத்தியமானது, தெய்வீகமானது, பிரம்மம் உரைத்தது



22641

என்பதற்கு சாட்சியாம். அனைவர்க்கும் க்ஷேமலாபம் உண்டாக பிரார்த்தித்து வந்தனங்கள் கூறி விடை பெறுகிறேன்.

இப்படிக்கு
சிரோன்மணி சாதித்த
நரசிம்ம முனி

என்னுரையை வாசித்து முடித்த ராம்கிக்கு அந்த தமிழும் அதன் பொருளும் மிகுந்த ஆச்சரியத்தைத் தந்தன. எவ்வளவோ புத்தகங்களை அவன் தன் வாழ்நாளில் வாசித்திருக்கிறான். ஆனால் இந்தப் புத்தகம் அவன் வரையில் புதிது. கதையும் கட்டுரையும் தான் புத்தகம் என்ற நினைக்கையில் அதிலிருந்து மாறி கடவுள் போல ஒரு புத்தகம் காட்சியளிப்பது இதுவே முதல் தடவை. ராம்கி கூட அப்படித்தான் நினைத்தான்.

அவன் நினைப்பை கத்தரித்தது ஒரு பெண் குரல்.

"அய்யாசாமி... யதாச்சும் தர்மம் செய்யுங்க..."

எதிரில் பரட்டைத் தலையும், கிழிந்த அழுக்கு ஆடையுமாய் ஒரு பெண். முதலில் பார்க்க அவள் எரிச்சலூட்டினாள். "அட போம்மா..." என்று சொல்ல வாயெடுத்தவன் அப்பொழுதுதான் அவளது மேடான வயிற்றுப் பாகத்தைப் பார்த்தான். கர்ப்பவதி!

ஜில்லென்ற பனிக்கட்டியானது பற்கள் இடையே அகப்பட்டது போல ஒரு உணர்ச்சி. புத்தகத்தில் முதலியாரின் 'என்னுரை'யில் அவர் கூறியிருந்தது போலவே அந்த புத்தகத்தைக் கண்ட அரைக்கால் நாழிகைக்குள் அவன் எதிரில் கர்ப்பவதி என்றால் முதலியார் எழுதியது போலவே இந்த புத்தகத்திற்கு ஒரு சக்தி இருக்கிறதா? இல்லை உண்மையில் அவர் எழுதியது போலவே வித்யாரண்யர் என்கிற மகரிஷியின் ஜோதிட ஞானம் தானா...? இது காலத்தை கணித்து

கணக்குப் போட்டு சொல்லியுள்ள ஒரு புத்தகமா....? இந்தக் கணக்குகள் உண்மையானவையா?

ராம்கிக்குள் ஆச்சரியப் பந்துகள் உருண்டு விழுந்து எம்பி எம்பிக் குதித்தன. அப்படியே அந்த பிச்சைக்கார பெண் ணிற்கு ஒரு ரூபாய் நாணயத்தைப் போட்ட போது அவள், "பசிக்குதுண்ணே... சாப்பிட ஏதாவது கொடுங்க. நான் தாங்கிடுவேன். என் புள்ள தாங்குமா?" என்று திருப்பிக் கேட்டாள். அது ராம்கியின் மனதை அப்படியே பிசைந்து விட்டது. அப்படியே தலையை வெளியே நீட்டி அதே வரிசையில் தொலைவில் தெரியும் சிந்தாமணியின் கடையைக் காட்டியவன், "அந்தக் கடைக்கு போய் நான் சொன்னேன்னு சொல்லி இட்லியும், தோசையும் எவ்வளவு வேணா கேட்டு சாப்பிடு. என் பேர் ராமகிருஷ்ணன். நீ போ... நான் இங்க இருந்தே கத்தி சொல்லிடறேன்" என்றான். அவளும் கண்கள் பனிக்க சற்றே கெந்திக் கெந்தி அந்தக் கடை நோக்கி நடந்தாள்.

தானத்தில் சிறந்த தானம் அன்னதானம். அதிலும் சிறந்தது கண்ணால் காண முடியாத ஒரு கர்ப்ப உயிருக்குச் செய்யும் அன்னதானம்!

ஒவ்வொரு கர்ப்பவதியுமே அந்த சிவசக்தி சொரூபம். ஒரு கர்ப்பவதியாகிய பெண்ணின் கர்ப்பத்துக்குள் ஆண் குழந்தை இருக்க, அவள் ஆண் பெண் கலந்த அர்த்தநாரி யாகிறாள். எனவே கர்ப்பவதிகளை அர்த்தநாரியாக பாவித்து பூஜிப்பது சிவ- சாக்த வழி நடப்பவர்களிடம் காணப்பட்ட ஒன்று. ஒரு சமயத்தில் ஒருவருக்கு செய்யும் தர்மம் இரு வர்க்கு போய்ச் சேருவதும் கர்ப்பவதிகளிடம்தான். இதெல் லாம் ராம்கிக்குத் தெரியாது. ஆனால் காலமும் நேரமும் கூடி வந்தால் நடக்க வேண்டிய அவ்வளவும் தானாகவே நிகழும் என்பது அவன் வரையில் நிரூபணமாகிக் கொண் டிருந்தது.



அந்த கர்ப்பவதியும் சிந்தாமணியிடம் சென்று, "தாயி... ராமகிருஷ்ணன்கற அந்த தம்பி என்னை இங்க பசியாறச் சொன்னுச்சு." என்று சொல்லி முடிக்குமுன் ஒரு தட்டில் தையல் இலையை வைத்து சுடச்சுட இட்லிகளை வைத்து சட்னி, சாம்பார் ஊற்றி எடுத்து நீட்டியிருந்தாள் சிந்தாமணி. அந்த கர்ப்பவதிக்கு அதைப் பார்க்கவும் வியப்பு. தன் உரு வத்தைப் பார்த்து ஒரு வார்த்தைகூட கடிந்து கொள்ளாமல் அவள் சாப்பிடக் கொடுக்கவும் கண் கலங்கி விட்டாள். அடுத்த நிமிடமே அந்த இட்லி அவ்வளவும் காலியாகி விட்டது. அது கால்வயிற்றுக்கு கூட காணவில்லை.

"என்ன... பசி அடங்கலியா...? அடங்கறவரை சாப்பிடு..." சிந்தாமணியும் தன் இட்லி பாத்திரத்தில் இருந்து இட்லிகளை எடுத்து வைத்தாள். மொத்தமாய் பன்னிரெண்டு இட்லிகளை விழுங்கி விட்டுத்தான் அவள் விட்டாள். அப்ப டியே ஒரு பெரிய ஏப்பம். அப்படியே "நீ நல்லா இருப்பே தாயி..." என்று மனதார ஒரு வாழ்த்து. சிந்தாமணிக்கு சிரிப்பு வந்துவிட்டது. "நான் நல்லா இருக்கிறது இருக்கட் டும். இப்படி வயித்தை தூக்கிட்டு பிச்சை எடுக்கறியே. எவன்கிட்ட ஏமாந்தே?"

சிந்தாமணி அப்படி கேட்பாள் என்று அவள் எதிர்பார்க்க வில்லை தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

"உன்னைத்தான்... காதுல விழலை..."

"விழுந்துச்சு தாயி... ஆனா நான் என்னத்த சொல்ல...?"

"நடந்ததைச் சொல்லு. இப்படி வாயும் வயிறுமா எத்தினி நாளைக்கு பிச்சை எடுப்பே? வலி கண்டா யார் பிரசவம் பார்ப்பா?"

சிந்தாமணியின் அக்கறை அவளுக்கு பிடித்துப் போனது.

"வாஸ்தவம்தான்... கட்னவன் உட்டுட்டு ஓடிட்டான். காதலிச்சு கல்யாணம் பண்ணதால குடும்பத்துலயும் ஆதரவு

இல்லை. வயித்துலயோ ஒரு உசுரு வளர ஆரம்பிச்சிடிச்சு. இதோட அப்படியே போய் கிணத்துல விழுந்தேன். விழுந்த கிணத்துல இடுப்புக்குத் தான் தண்ணி இருந்துச்சு. ரயில்வே தண்டவாளத்துக்குப் போய் படுத்தேன். 'எந்திரிச்சு அப்பாடி போய்ப் படு- இதுல ரயில் வராது- ஏன்னா இந்த ரயில் பாதை பெரிய பாதையா மாறுது. அதுக்கான வேலை நடக்குது'ன்னு சொன்னாங்க. சரிதான்னு லாரி, பஸ்சுல உழுவப் போயினேன். எல்லோரும் திட்டிக்கிட்டே ஓரமா போனாங்களே தவிர யாரும் எம்மேல ஏத்தலை. அப்பதான் எனக்கு ஒரு விஷயம் புரிஞ்சிச்சு. சாகக்கூட விதி இருக்கணும். என்னை விட என் வயித்துல இருக்கற உசுருக்கு ஆயுசு ஜாஸ்தி போல... அதான் என்னால சாக முடியலை. இந்த உசுரு சுகவாசிகூட... இந்த வயத்தோட நான் யார்கிட்ட போய் எதைக் கேட்டாலும் அவங்க கொடுத்துடறாங்க. பன்னெண்டு இட்லிய யார் தருவாங்க? நீ இப்ப இங்க தந்துருக்கியே... ஒரு வேளை என் வயித்துல இருக்கற உசுர் கருவிலேயே எந்த வருத்தமும் படக்கூடாதுன்னு விதியோ என்னவோ..."

அவள் மனதுக்குப் பட்டதை தான் சொல்லிக் கொண்டிருந்தாள். அதேசமயம் ராம்கி அந்த காலசக்கர பலகணியில் பிரசன்ன கட்டத்தில் கைநீட்டி ஒரு எண்ணையும் பார்த்திருந்தான். அந்த எண் 402. அதற்கான பக்கத்துக்கு சென்று எண்ணுக்குரிய தேவன் யார் என்று பார்த்த போது நான்கும் இரண்டும் கூடி வந்த ஆறாம் அதிபதி சுக்கிர மூர்த்தியாவார். கருக்கொண்ட குழந்தையாய் கர்ப்பத்தில் உள்ள இவர் ஜனிக்கும் முன்பாக கண்டவன் கைப்பிடிப்பான் கன்னியொருத்தியை. அவள் யாரென அறிய நோக்குக பெயர் ராசிக் கட்டம்' என்றிருந்தது. பெயர்ராசிக் கட்டத்தை தொட்டுக் கொண்டு போனபோது அங்கே நந்தினி என்கிற பெயர் தன்னாலே பட்டது.

அடுத்த நொடி ராம்கிக்கு பயங்கர ஷாக்!



## 5

**ப**லகணி என்பது கோள்களின் செயல்பாட்டை மனிதர்களின் வாழ்க்கையைக் கொண்டு உணரப் பயன்படும் ஒரு கணிதமாகும்.

ஒரு வகையில் எல்லாமே கணக்கு தான்.

கணக்காகிய எண்கள் அதன் தொடர்பாகிய அளவுகள் இல்லாத பட்சத்தில் எதுவுமே இல்லை. ஒரு உயிர் மனித உடலில் இவ்வளவு காலங்கள் இருக்கலாம் என்பது முதல் அந்த நாட்களில் அது இவ்வளவு முறை சுவாசிக்கலாம் என்பதுவரை திட்டமிடப்பட்டுள்ளது.

கணக்கு இல்லாவிட்டால் இது எப்படி சாத்தியம்?

அப்படி இந்த புவிக்கு வரும் உயிர்களுக்கு இந்த இந்த காலகட்டத்தில் இதெல்லாம் நடக்கும் என்று கூறுவதே காலசக்கர பலகணியாகும்.

வித்யாரண்யரும் தன் ஞானத்தால் போட்ட கணக்கு தான் காலசக்கர பலகணி. அதன்படி அந்த பலகணி யார் கையில் கிடைக்க வேண்டும், எப்பொழுது கிடைக்க வேண்டும், அதனால் என்னவெல்லாம் நிகழும் என்பதை முன்னதாகவே அவர் கணித்து குறித்தும் வைத்தார்.

இந்த உலகம் மிகப் பெரியது. ஆனால் அமெரிக்காவில் உள்ள மனிதனையும் சரி, இந்தியாவில் உள்ள மனிதனையும் சரி, காற்றுதான் இணைக்கிறது. அது மிகமிகப் பொதுவானது. இந்த உலகின் எங்கோ ஒரு மூலையில் காற்று வேகமாக வீசுவதன் தாக்கம் மற்ற எல்லா பாகங்களிலும் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அதை நம்மால் உணர முடியவில்லை. உணர முடிந்தால் அவன் மிகப் பெரிய ஞானி. அதன்படி கோடி கோடி சம்பவங்கள் அவ்வளவுக்கும் உள்ள தொடர்பை முன்பே மிகச்சரியாக கிரகித்துக் கொண்டு, தொடர்ந்து சம்பவங்கள் எப்படி நடக்கும் என்பது வரை அனுமானித்து சொன்னவர் வித்யாரண்யர் ஆவார்.

உதாரணமாக சாலையில் நடக்கும்போது ஒருவர் எச்சில் உமிழ்கிறார். இதன் எதிரொலியாக இந்த பூமியில் ஏதோ ஒரு மூலையில் ஒரு துளி நீர் ஆவியாகி இருக்கலாம் அல்லது எச்சில் உமிழ்வின் எதிரொலியாக ஒரு விஷயம்

*நடந்திருக்கலாம். அது எங்கே நடந்தது. எப்படி நடந்தது என்பதைக் கண்டறிந்து சொல்வதில்தான் ஞானிகளின் திறன் உள்ளது.*

*வித்யாரண்யர் அப்படி ஒரு திறனுடன் முயற்சி செய்தவர். பலகணியை உருவாக்கும் போதே அது எவ்வளவு வருடம் பூமியில் இருக்கும். எப்படியெல்லாம் பயன்படும், இறுதியாக அது என்னவாகும் என்பது வரை அவர் குறிப்பிட்டு விட்டார்.*

*அவ்வாறெல்லாம் நடக்கிறதா என்பதை பலகணியை வைத்துக் கொண்டு இனி நாம்பார்ப்போமா?*

அந்த ஆங்கிலப் புத்தகத்தின் அட்டை தெரியும்படி விரித்துக் கொண்டு நின்றிருந்தான் மனோ. .

சரியாக நந்தினி வரும் நேரம்!

தவறாமல் அவள் வர வேண்டும். அப்படியே அந்த புத்தகத்தையும் பார்க்க வேண்டும். அப்படியே அதிர்ந்து போக வேண்டும் என்பதெல்லாம் அவன் எதிர்பார்ப்பில் அலையடித்துக் கொண்டிருந்தது. சரியான காதல் கிறுக்கன்.

அவள் வருவதற்கு முன்பாக பாபு வந்தான். அதுவும் அவனது காரில்...

"என்னடா இங்கிலீஷ் புக் படிக்கிறே... உனக்கும் இங்கிலீஷிற்கும் காத தூரமாச்சே...?"

பாபுவின் கிண்டலை மனோ காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை.

"ஒரு விதத்துல பாராட்றேண்டா. ஒரு பொண்ணைப் பிடிக்க போய்ட்டா அவளை வளைக்கறதுக்காக இங்கிலீஷ் படிக்கத் தெரியலேன்னாலும் அதுக்காக முயற்சியெல்லாம் செய்யறே பார். அதைப் பாராட்டியே தீரணும். அமெரிக்காவைக் கண்டுபிடிச்ச கொலம்பசும், திருக்குறளை எழுதின திருவள்ளுவரும் கூட்டணி அமைச்சுகிட்டு வந்து எவ்வளவு தான் உபதேசம் பண்ணினாலும் படிப்புன்னா வழுக்கிகிட்டு



ஓடுற உன்னைப் போன்ற ஆட்கள்ளாம் காதலிக்காக கங்கை காவேரி இணைப்புக்கு கூட தயாராகறீங்க பாரு... அதைப் பாராட்டித்தான் தீரணும். காதல் சில சமயங்கள்ல இப்படி பாசிடிவாகூட வேலை செய்துடுது..." என்று தொடர்ந்து புத்தகம் முன்னால் நின்றபடி லெக்சரடிக்க, மனோ நெளிந்தான்.

"பாபு! இடத்தைக் காலி பண்ணுடா. அவ வர்ற நேரம்..."

"வரட்டும்.. நான் அவளை வரவேண்டாம்னு சொல்லலியே...?"

"இல்லடா. உன் காரையும் உன்னையும் பார்த்தா குட்டு உடைஞ்சிடாதா?"

"அதுவும் சரிதான். ஆமா, எவ்வளவு நாளைக்கு இப்படியே போகப் போறே?"

"அவ 'ஐ லவ் யூ' சொல்றவரை..."

"சொல்லிட்டா..."

"அப்புறம் என்னைவிட ஹேப்பியஸ்ட் பர்சன் இந்த உலகத்திலேயே கிடையாது..."

"நிஜமா...?"

"டேய்... இது நான் உன்கூட பேசற நேரமில்லடா. இடத்தைக் காலி பண்ணுடா..."

மனோ நெளிய, பாபுவும் நகர, மனோ எதிர்பார்த்தது போலவே நந்தினி தன் ஸ்கூட்டியில் வந்தாள். அவன் வரையில் அவளது கசின் பார்த்திபன் சொன்னபடியே மனோவைப் பார்த்து 'உன் மேல் எனக்கு காதலெல்லாம் கிடையாது' என்று சொல்லிவிட வேண்டும் என்கிற ஒரு எண்ணம் இருந்தது. மனோவைப் பார்க்கவும் அவன் அருகில் ஸ்கூட்டியுடன் வந்து நின்றாள்.

அவன் வந்ததையே கவனிக்காதவன் போல புத்தகத்தில் ஊர்ந்தான். பளிச்சென்று அந்த அட்டைப்படமும் தெரிந்தது. பார்த்தவளுக்கு இன்ப அதிர்ச்சி. என்ன சொல்ல நினைத் தாளோ அது அப்படியே மாறிவிட்டது.

"ஹலோ..."

"... ... ..."

"ஹலோ மிஸ்டர் மனோகர்! உங்களைத்தான்..."

"யாரு... ஓ... நந்தினி.., என் நந்தினியா?"

"வாட்?"

"நோ நோ... உங்க இனிஷியல் N தானே...? அதை சொன்னேன்..."

"அதானே பார்த்தேன். ஆமா. இந்தப் புத்தகம்...?"

"இங்கிலீஷ் புக். எனக்கு ரொம்ப பிடிச்ச ரைட்டர். ரொம்ப நாளா எதிர் பார்த்துக் கிட்டிருந்த புத்தகம் இது..."

"எட்வின் பர்னர் உங்க ஃபேவரைட்டா...?"

"ஆமா... இவர் பேரைச் சொன்னா அமெரிக்காவுலேயே யாருக்கும் தெரியாது. ஆனா என் வரைல இவர் மாதிரி இமாஜினரி மைண்ட் உள்ள ஒரு ரைட்டர பார்க்கறது கஷ்டம். இன்ஃபாக்ட் இவர் கற்பனையாவே நிலாவுல விசித்ர அனுபவத்த தான் நாவலா எழுதியிருக்காரு. இதுல பாருங்க, பூமியில பார்க்கும் போது நிலா தெரியற மாதிரியே, நிலாவுல இருந்து பார்க்கும் போது பூமியும் தெரியுது. ஆனா நிலா மாதிரி வெளிச்ச கோளமா இல்லை... அது எப்படி இருக்குன்னா ஒரு மஷ்ரூம் பிலானை ஆகாயத்துல தூக்கி எறிய, அது மிதந்தா எப்படி இருக்குமோ அப்படி இருந்ததுன்னு சொல்றார். என்ன ஒரு இமாஜினேஷன்..."

மனோ ஒரு பிடி பிடித்தான். நந்தினியிடம் வியப்பின் விரிவுகள்.



"பரவாயில்லியே... நல்லா ரசிச்சு படிக்கிறீங்களே..."

"இந்த புத்தகத்தைக் கூட நான் ரசிக்கப் படிக்கலேன்னா அடுத்த ஜென்மத்துல கடவுள் எனக்கு ரசனையே இல்லாம பண்ணிடுவார். அப்புறம் நான் ஊட்டியில ஒரு கார்டன்ல தோட்டக்காரனா பொறந்து ஏன்டா இந்த குளிரடிக்கிற ஊர்ல பொறந்தோம்'னு வருந்தப்பட்டுக்கிட்டே இருப்பேன்..."

"அது என்ன ஊட்டில தோட்டக்காரனா..."

"ஆமா... எந்த தோட்டக்காரன் தன் வேலையை ஒரு ரசனைக்குரிய வேலையா நினைக்கிறான். அதே தோட்டத்தை சுத்திப் பார்க்கப்போற ஒவ்வொருத்தரும் 'ஆஹா கண்ணுக்கு எவ்வளவு குளிர்ச்சியா இருக்கு'ன்னு தான் நினைக்கறாங்க..."

"பரவால்ல மனோ... உங்க தாட்ஸ் ரொம்ப டிஃபரண்டா இருக்கு. உம்... உங்ககிட்ட ஒரு உதவி கேட்கலாமா?"

"என்ன... சொல்லுங்க. உங்களுக்காக நான் இதயத்தைக் கூட பிடுங்கிக் கொடுப்பேனே..."

"ஆரம்பிச்சிடாதீங்க. இந்த புக்கை படிச்சிட்டு மறக்காம எனக்கும் படிக்கக் கொடுங்க..."

"இப்பவே எடுத்துக்குங்க... கமான், ஹேவ் இட்..."

"நோ... நோ... நீங்க அனுபவிச்சு படிச்சுக்கிட்டு இருக்கீங்க. அதை நான் கொடுக்க விரும்பலை..."

"இல்ல நந்தினி. எப்பவும் விட்டுக் கொடுக்கறதுல ஒரு தனி இன்பம் இருக்கு. கமான்..." அவன், அவள்வசம் புத்தகத்தை தந்தான். அவளும் நன்றி சொன்னவளாக புத்தகத்துடன் கூந்தலை ஒதுக்கிக் கொண்டு கிளம்பினாள். மனோவுக்கு தன் கணக்கு ஒர்க்அவுட் ஆகத் தொடங்கி விட்டதில் ஒரே குஷி.

நந்தினி நேராக ராம்கியின் பழைய புத்தகக் கடைக்குத் தான் சென்றாள். ராம்கிக்கும் அவளை புத்தகத்தோடு பார்க்கவும் ஜிவ்வென்றது.

"ஹலோ சார்... நான் முந்தி கேட்ட புக் எனக்கு வேண்டாம். இதோ கிடைச்சிடிச்சு பாருங்க. எனக்கு இப்ப வேற புக் வேணும். ஹிஸ்டரி ஆஃப்த வேர்ல்ட்-ல நாலாம் பாகம் வந்தாச்சு. அது கிடைக்குமா?"

"தேடிப் பார்க்கறேன் மேடம்..."

"இந்தத் தடவை கட்டாயம் எனக்கு வேணும்..."

"அதே புத்தகத்தை இன்னொருத்தரும் கேட்டிருக்காரு. அதுக்காக நூறு ருபா அட்வான்ஸும் பண்ணிட்டாரு..."

"ஐ சீ... யார் அது?"

"பேர் என்னவோல்ல சொன்னாரு... ஆங், மனோகர்..."

"மனோகர்...?"

"ஆமாம், மனோகர்தான்..."

நந்தினி வியந்தபடியே ஸ்கூட்டியில் ஏறிப் போனாள். அவள் போன பின்பும் அந்த ஸ்ப்ரே வாசம் இருந்து ராம்கியை கிறக்கியது. அப்படி மனோகரின் முயற்சி ஒர்க்அவுட் ஆகி விட்டது போல தோன்றியது.

டேபிள் மேல்தான் காலசக்கர பலகணியை வைத்திருந் தான். அது நந்தினி பெயரைச் சொன்னதில் ராம்கிக்குள் இப்போது நிறைய கற்பனைகள். ஆனால் அதற்கு எதிர்த் திசையில் நந்தினி பயணிப்பது போல தோன்றியது. அவன் அப்படியெல்லாம் யோசிக்கும் போதே மூச்சிரைக்க மனோ வந்து விட்டான்.

"ராம்கி... மிஸ்டர் ராமகிருஷ்ணன்..."

"என்ன மனோகர்... காரியம் ஜெயிக்க ஆரம்பிச்சிடிச்ச போல..."



"ஆமாம், இவ்வளவு சீக்கிரம் ஒர்க் அவுட்டாகும்னு நான் நினைச்சே பார்க்கல..."

"உங்களுக்கு ஒரு குட் நியூஸ்..."

"என்ன ராம்கி...?"

"இதுதான் சாக்குன்னு அவங்க ஹிஸ்டரி ஆப் த வேர்ல்ட் நான்காம் பாகம் கேட்டபோ அதே புக்குக்கு நீங்க பணம் கொடுத்து வெச்சிருக்கிறதா சொன்னேன். உடனே அவங் களுக்கு ஒரே ஆச்சரியம்..."

"அப்படியா?"

"ஆமா... உங்களுக்குள்ள கருத்தொற்றுமை உருவாக ஆரம்பிச்சிடிச்சு. உங்க காதல் நிச்சயமா ஜெயிக்கப் போகுது. இந்தாங்க ஹிஸ்டரி ஆஃப்த வேர்ல்ட் நான்காம் பாகம்..."

மனோ அந்தப் புத்தகத்தைப் பார்த்து பூரித்துப் போனான்.

"ராம்கி சார்... உங்க உதவிக்கு ரொம்ப ரொம்ப நன்றி. இந்த புக்கையும் என்கைல பார்த்துட்டா நிச்சயம் நந்தினி ஃப்ளாட் ஆகியே தீரணும். இப்பவே அவகிட்ட எவ்வளவு மாறுதல் தெரியுமா?"

"அப்புறம் என்ன... இந்த புக்கும் சேர்ந்து உதவி செய்யட் டும்."

"ரொம்ப சந்தோஷம்... நான் கிளம்பறேன்..." மனோ துள்ளிக் கொண்டு புறப்பட்டுப் போனான். அவன் நகரவும் அந்த கர்ப்பிணிப் பெண் கையில் ஒரு இலை மூடிய தட்டுடன் அவன் முன் நின்றாள்.

"யாரு... அம்மா பசியா?"

"சும்மா இருங்க தம்பி. நான் இப்ப அம்மா பசிங்கற பிச்சைக்காரி இல்ல... உங்க கருணையால உங்க இட்லிக் கடைல உங்கம்மாவுக்கு கூடமாட ஒத்தாசை பண்ணப் போற உங்க வேலைக்காரி..."

"சரிதான்... போனோம், பசிக்கு இட்லியை சாப்பிட்டோம், கிளம்பினோம்னு இல்லாம நல்லா ஒட்டிக்கிட்டியா?"

"நான் ஒட்டிக்கிட்டேனா... இல்லை நீங்க வந்து ஒட்னீங்களா தெரியாது. ஆனால் நான் இப்ப திம்மாதியா இருக்கேன். எந்தப் பக்கம் போறதுன்னு தெரியாம இருந்த எனக்கு இப்பதான் ஒரு திசை கண்ணுக்குத் தெரிஞ்சிருக்கு..."

"பரவால்ல... நல்லாவே பேசறே..." என்றபடி அவள் நீட்டிய டிபன் தட்டை வாங்கிக் கொண்டான். இளம் சூடு உள்ளங்கையில் ஏறியது. இலையை விலக்கிப் பார்த்தான். பூப்போல இட்லிகள், இரண்டு மெதுவடை, ஒரு நெய் தோசை, வெங்காயத் துண்டுகளுடன் மணக்க மணக்க சாம்பார். ஸ்டார் ஹோட்டல்களில் ஏ.சி. ரூமுக்குள் என்ன தான் ஏப்ரன் கட்டிக் கொண்டு சாப்பிட்டாலும் இந்த சுவையை கற்பனை கூட செய்து பார்க்க முடியாது. அதிலும் சிந்தாமணியின் கைப்பக்குவம் என்பது லட்சம் பெண்களில் ஒருத்திக்குத்தான் அமையும். இல்லாவிட்டால் அந்த ஏரியா கோடீஸ்வரர் தன் டிரைவரை விட்டு சிந்தா கடை டிபனை வாங்கிவரச் சொல்லி சாப்பிடுவாரா என்ன?"

ஆசை ஆசையாக ராம்கி இட்லியை விழுங்கத் தொடங் கினான். அவளும் நின்று பார்த்தாள்.

"நீ ஏன் நின்னுகிட்டிருக்கே... போய் வேலையை கவனி..."

"இல்லே தம்பி... சாப்ட்டு தட்ட கொடு. வாங்கிட்டே போறேன். பத்தாட்டி இன்னும் நாலு இட்லி போட்டுத் தரேன்னு சிந்தாம்மா சொன்னாங்க..."

"அய்யய்யோ... இதுவே ஜாஸ்தி. நீ வாயைப் பார்க்காதே, கிளம்பு. பிறகு எனக்குத்தான் வயிறு வலிக்கும்" என்று அவளை அனுப்பிவிட்டு ஆனந்தமாக டிபனை சாப்பிடத் தொடங்கினான். ஒரு கட்டத்தில் விக்கிற்று. தண்ணீருக்காக



கொஞ்சம் எழுந்து செல்ல வேண்டியிருந்தது. ஒரு மூலை யில் வைத்திருந்த பானையில் இருந்து தண்ணீரை சரித்து குடித்துவிட்டு திரும்பிய போது கடை முகப்பில் கறுப்பு வேட்டியும், சட்டையுமாக ஒருவன். நெற்றியில் கூட வித்தி யாசமாக கறுப்புப் பொட்டு. இடுக்கிக் கொண்டு பார்க்கும் விதமும் ஒரு தினுசாக இருந்தது. ராம்கி கவனிக்கவும், ராம்கியைப் பார்த்து பேசத் தொடங்கினான்.

"தம்பி யாரு?" - குரலிலும் ஒரு கொரகொரப்பு.

"நான் யாரா இருந்தா உங்களுக்கென்ன... உங்களுக்கு என்ன வேணும்?"

"ராவுத்தர்..."

"ராவுத்தரா... அவரை எல்லாம் என்னால விக்க முடி யாதுங்க..."

"கிண்டல் பண்றியாப்பா... நான் இந்த கடை ராவுத்தரைக் கேட்டேன்..."

"ராவுத்தர் குவைத்துக்கோ, துபாய்க்கோ போயிருக்காரு. நான்தான் இனி இந்தக் கடைக்கு எல்லாம்..." ராம்கி கூறவும் அவன் முகத்தில் முதலில் ஒருவித அதிர்ச்சி பரவியது.

"என்ன விஷயம்... ராவுத்தர்கிட்ட ஏதாவது பேசணுமா?"

"இல்ல... ராவுத்தர் என்ன இப்படி பண்ணிட்டு போயிட் டாரு..."

"இப்படின்னா...? எனக்குப் புரியல..."

"இந்தக் கடையை நீ விலைக்கு வாங்கிட்டியா தம்பி?"

"இதெல்லாம் உங்களுக்கு எதுக்கு?"

"சொல்லுப்பா... நான் காரணமாதான் கேக்கறேன்..."

"என்ன காரணம்னுதானே நானும் கேட்டேன்."

"அது... அது... இந்தக் கடையை நான் எனக்கு கேட் டிருந்தேன்."

"உங்களுக்கா?" ராம்கியிடம் அதிர்ச்சி கலந்த ஆச்சரியம்.

"ஆமாம். எனக்குத்தான்..."

"உங்களைப் பார்த்தா மந்திரவாதி மாதிரில்ல தெரியுது..."

"ம்... அப்படியும் சொல்லலாம்..."

"அப்படியும் சொல்லலாம்னா... வேற வேலையும் பார்க்கறீங்களா?"

"நீ அதிகம் பேசறே..."

"சரி... நான் இனி பேசலை, நீங்க கிளம்புங்க..."

"அது வந்து..."

"எதுவும் வர வேணாம்- எதுவும் போக வேணாம். நீங்க கிளம்புங்க..."

"இல்ல, நான் என்ன சொல்ல வரேன்னா..."

"நான் இந்த மாயம், மந்திரம்னு அலையறவங்கள எல்லாம் மனுஷ லிஸ்ட்லயே வைக்கறதில்ல. நீங்க இடத்த காலி பண்ணுங்க."

"இதோ பார்... என்ன கோபப்படுத்தாதே... நான் என் சக்தியைக் காட்ட ஆரம்பிச்சா, நீ தாங்க மாட்டே... ஆமா, இந்த கடையை என்ன விலைக்கு ராவுத்தர்கிட்ட இருந்து வாங்கினே?"

"இதுக்கெல்லாம் நான் பதில் சொல்ல நீங்க என்ன என்னோட ஆடிட்டரா... இல்லை, கார்ப்பரேஷன்ல இருந்து வந்திருக்கிற அதிகாரியா...?"

"அவங்கள விட நான் அதிக பவர் உள்ளவன்..."

"சரி, நான் இனி உங்ககூட விவாதம் பண்ண தயாரா இல்லை. நீங்க இடத்தைக் காலி பண்ணலாம்..." முகத்தில் அடித்த மாதிரி அந்த மனிதனிடம் பேசிவிட்டு முகத்தை திருப்பிக் கொண்டான் ராம்கி. சிறிது நேரம் நின்று பார்த்துவிட்டு அவனும் முறைத்துக் கொண்டே போனான்.



## 6

கண்ணிக் கணக்கு என்று ஒன்று உள்ளது. கணக்கில் புலிகளாக உள்ளவர்களுக்குத்தான் இது என்னவென்றே தெரியும். வாழ்க்கையே ஒரு கணக்குதான் என்று சொல்வார்கள். அந்த கணக்கு எப்படிப்பட்டது என்று அறிந்தவர்களால் மட்டுமே இந்த கண்ணிக் கணக்கை விளக்கிக் கொள்ள முடியும்.

அது என்ன கண்ணிக் கணக்கு என்று கேட்பவர்கள் மரம், செடி, கொடி இவற்றைப் பார்த்து இந்த கணக்கை விளங்கிக் கொள்ளலாம். ஒரு மரத்தின் கிளைகள் வேண்டுமானால் அந்த மண்ணின் வளம், அதற்கு கிடைக்கும் நீர் போன்றவற்றை வைத்து அமையலாம். ஆனால் இலைகள் ஒன்று போலவும் ஒரு இலைக்கும் அடுத்த இலைக்குமான இடைவெளி ஸ்கேல் வைத்தது போல மிகச்சரியாகவும் இருக்கும். ஒரு வேப்பமரத்தையோ இல்லை வேறு எந்த மரத்தையோ எடுத்துக் கொண்டு பார்த்தால் இந்த உண்மை விளங்கும்.

மரத்தை ஜடம் என்கிறோம். மனிதன் போல மனம் இல்லாத ஒரு உயிரியாகத்தான் அதை பார்க்கிறோம். ஆனால் அதனிடம் இருக்கும் ஒழுங்கு ஆச்சரியப்படுத்துகிறதல்லவா? இதை இயற்கை என்று ஒரு வார்த்தையில் சொல்லிவிடுவது சுலபம். ஆனால் இந்த திட்டமிட்ட தன்மை என்பது மரத்திடம் மட்டுமல்ல... மனித வாழ்விலும் உள்ளது. ஒரு இலைக்கும் அடுத்த இலைக்குமான சீரான இடைவெளி போலவே நம் வாழ்விலும் சில சம்பவங்கள் அதே இடைவெளியான காலத்தில் நடக்கின்றன.

ஒரு மரத்தில் கிளை இலைகளுக்கு நடுவே குறிப்பிட்ட ஒரு இடத்தில் காய்கள் காய்ப்பது போலவே, வாழ்விலும் முக்கிய சம்பவங்கள் நடக்கின்றன. அவை ஒரு விநாடிகூட பிசகுவதில்லை. இதைப் புரியவைப்பதுதான் கண்ணிக் கணக்கு. ஜோதிடம் தெரிந்தவர்கள் இந்தக் கணக்கை வேகமாக போட்டு விடுகிறார்கள். இப்படி கணக்கு போட்டுத்தான் நாடிகளில் முன்னதாகவே பலன்களை எழுதி வைக்கிறார்கள்.

மனோகர் காட்டில் மழை!

அவன் கையில் ஹிஸ்டரி ஆஃப் த வேர்ல்ட் புத்தகத்தைப் பார்த்துவிட்டு ஒரே குஷியாகி விட்டான் நந்தினி. அதன்பின் கிட்டத்தட்ட அரை மணி நேரம் பல்வேறு விஷயங்களை பேசிக் கொண்டிருந்தான். அவள் அவனோடு கலகலப்பாக பேசுவதை அவளது கஸின் பார்த்திபனும் கவனித்துக் கொண்டே போனான். அவன் அவளிடம் பேசி முடித்துவிட்டு வரவும் அவனைப் பார்த்து நக்கலாக சிரித்தான்.

"எதுக்குப்பா இப்படி வழிசலா சிரிக்கிறே?"

"சிரிக்காம... யாரைப் பிடிக்கலைன்னு சொன்னியோ அவன்கூட மணிக்கணக்குல பேச ஆரம்பிச்சிருக்கே. அவன் முகத்துலயும் ஒரு ஜோதி தெரியுது. காதல் எப்பவும் மோதல்ல தொடங்கும்கறது சரியாத்தான் இருக்கு..." என்றான். அதற்கு மறுப்பாகவோ எதிர்ப்பாகவோ நந்தினி ஒரு பதிலையும் சொல்லவில்லை. அப்பொழுதே பார்த்திபனுக்குப் புரிந்துவிட்டது- அவள் மனோவை நேசிக்க ஆரம்பித்து விட்டாள் என்பது. ஒரு சில நாட்களில் இப்படி ஒரு மாற்றம் எப்படி வர முடியும் என்று யோசித்தவன் மனோகர் ஏதாவது குறுக்கு வழியை கடைப்பிடித்திருக்கலாம் என்றுதான் இறுதி முடிவுக்கு வந்தான். அது ஆர்வக் கோளாறில் அமைந்திருந்தால் கவலை இல்லை. ஆனால் அது ஏதாவது விபரீதமாக இருந்தால் நாளை நந்தினியின் வாழ்க்கையை பாதிக்கலாம் என்று கருதியவன் மனோகரிடம் இது சம்பந்தமாக பேசிவிட வேண்டும் என்ற முடிவுக்கும் வந்தான். ஆனால் அதை நந்தியிடம் கூறவில்லை.

இரவுக்கு அன்றைய தினம் புத்தகங்கள் விற்றுக் கொண்டிருந்தன. அவ்வப்போது ஆட்கள் வருவதும், புத்தகத்தை பார்ப்பதுமாக இருந்தார்கள். ஒரு பள்ளிச் சிறுவன் தனது பாடப் புத்தகங்களை அப்படியே பாதி விலைக்கு விற்க



வந்தான். அன்றைக்குத்தான் பரீட்சை முடிந்ததாம். 'இனி இந்தப் புத்தகங்கள் எதற்கு என்பது அவன் கேள்வி. ஆனால் ராம்கி வாங்கிக்கொள்ள மறுத்து விட்டான். அந்தச் சிறுவனின் செய்கைக்காக வருத்தப்படவும் செய்தான்.

பாடப் புத்தங்களை விற்பது என்பது அச்சடித்தவன் செயலாக மட்டும்தான் இருக்க வேண்டும். ஒருவர் அதை வாங்கிவிட்டால் எந்தக் காலத்திலும் புத்தகத்தை விற்கவே கூடாது. ஒரு லைப்ரரியை உருவாக்கி அதில் அவ்வளவு புத்தகங்களையும் வைத்துப் பராமரிக்கலாம். அதில் கொஞ்சமும் தவறில்லை. ரத்தத்தை கூட விற்கலாம். ஆனால் சித்தம் தெளியக் காரணமான பாடப் புத்தகங்களை மட்டும் விற்கக் கூடாது என்பது ராம்கியின் கொள்கை.

தான் மட்டும் தமிழ்நாட்டில் கல்வி அமைச்சராக வரும் பட்சத்தில் பாடப் புத்தகங்களுக்கு மட்டும் விலையே வைக்கக் கூடாது என்றெல்லாம் உட்கார்ந்த இடத்திலேயே கற்பனை செய்ய ஆரம்பித்து விட்டான். எதிரில் டேபிள் மேல் கிடந்தது அந்த காலசக்கர பலகணி புத்தகம்.

அது ஒரு முறை 'நந்தினிதான் உன் மனைவி' என்று கூறிவிட்டது. அதில் இருந்தே அதை தொட்டுப் பார்க்க ஜுரமாக இருந்தது.

அந்தப் புத்தகம் மனதுக்குள் ஏதாவது வேண்டாத கற்பனைகளை உருவாக்கி விடுமோ என்றுகூட தோன்றியது. அதே வேளையில் மனோகர் நந்தினியை விரும்புவது தெரியும் என்பதால் அவன் காதல் ஜெயிக்க வேண்டும் என்றுதான் தோன்றியது. இருந்தும் அந்தப் புத்தகம் அவனுக்குள் ஒரு மெல்லிய க்யூரியாசிட்டியை ஏற்படுத்திக் கொண்டுதான் இருந்தது. அது தனது கருத்துக்கு சாட்சியாக ஒரு கர்ப்பிணி வருவாள் என்று சொன்னபடி ஒரு கர்ப்பிணி வந்து நின்றதையும் இப்போது அவன் சிந்தாவிடமே எடுபிடி வேலைகள் செய்வதையும் கூட்டிக் கழித்துப் பார்த்தான்.

அதை எல்லாம் தற்செயலாக எடுத்துக் கொள்வதா இல்லை திட்டமிட்ட செயலா என்பதிலும் குழப்பம் ஏற்பட்டது.

மெல்ல விரல்கள் நீண்டு அந்த புத்தகத்தை எடுத்தன. பக்கத்தை விரிக்கத் தொடங்கியபோது மீண்டும் அந்த கறுப்புப் பொட்டுக்காரன்.

"தம்பி" என்கிற கரகர குரலோடு.

"என்ன...?"

"நான் இப்ப ஒரு முடிவோட வந்துருக்கேன்..."

"என்ன... என்கூட சண்டை போடணும்னா?"

"இல்ல... உன்கூட சமாதானமா போகணும்னு..."

"அப்ப உன்கிட்ட நான் ஜாக்ரதையா இருக்கணும்னு சொல்லு..."

"பயப்படாதே... எனக்கு என் வழியில் குறுக்கிடுறவங்களதான் பிடிக்காது..."

"சரி... இப்ப என்ன வேணும் உனக்கு? அதைச் சொல்..."

"இந்த புத்தகக் கடை..."

"இந்தக் கடையை உனக்கு நான் கொடுத்துட்டு தெருவுல நிக்கவா?"

"நீ எதுக்கு தெருவுல நிக்கணும்? உனக்குத்தான் நான் கோடி கோடியா பணம் தரப்போறேனே..."

"இந்த புத்தக் கடைக்கு... அதுவும் பழைய புத்தகக் கடைக்கு கோடிக் கணக்குல விலையா?"

"ஆமாம், எனக்கு புத்தகம்னா உயிர். அதுக்காக நான் எவ்வளவு வேணும்னாலும் விலை தருவேன்..." அவனது கரகர குரல் ராம்கியை உசுப்பிவிட்டது. மனிதர்களில் நேர்வழியில் உழைக்கத் தெரியாத ஒருவன் கோடி கோடியாக பணம் என்கிறான். பார்க்க பக்கிரியை விட மோசமாக



இருப்பவனிடம் அவ்வளவு பணம் எப்படி இருக்க முடியும்?

ராம்கிக்குள் சந்தேகங்கள் நெளிய ஆரம்பித்துவிட்டன.

"என்ன தம்பி... ஒரு பழைய புத்தகக் கடைக்கு கோடிக் கணக்குல விலை தரேனேன்னு பாக்கறியா...? உனக்கும் ஊருக்கும் தான் இது பழைய புத்தகக் கடை. ஆனா இங்கதான் எனக்கு வழிகாட்ற பெரிய பெரிய புத்தகங்கள் இருக்கு. அந்தக் காலத்துல, அதாவது நூறு வருஷத்துக்கு முந்தி புத்தகம்ங்கறது பணக்காரங்களுக்கான ஒரு விஷயமா தான் இருந்தது. அப்பவே ஒரு புத்தகத்துக்கு பத்து சவரன் தங்கத்தை விலையா வெச்சு சில புத்தகங்கள் வந்தது. அதாவது இன்றைக்கு மதிப்புக்கு 50,000 ரூபாய். அதையும் முன்பே கொடுத்து பதிவு பண்ணிக்கணும். எண்ணி ஐம்பது புத்தகமோ இல்லை நூறு புத்தகமோ தான் போடுவாங்க. ஓலைல எழுதிக் கொடுக்கறதுக்கு இப்படிச் செஞ்சா என்னன்னு சிலர் செஞ்சாங்க. இரும்பை தங்கமாக்கற ரகசியம், கண்கட்டு வித்தை, சித்த வைத்தியம், விஷக்கடி வைத்தியம், பாடம் போடற முறைகள், சாமுத்ரிகா லட்சணம், ஜோதிட சாஸ்த்ரம் இப்படி அபூர்வமான கலைகளைப் பத்தின புத்தகங்கள்ள நிறைய ரகசியங்களும் இருந்தது. அப்படிப்பட்ட புத்தகங்கள் இந்த புத்தகக் கடைலதான் இருக்கு. ராவுத்தர் இருக்கும் போதே நான் பத்து லட்ச ரூபா வரை விலை வெச்சேன். ஆனா ராவுத்தர் 'முடியாது இது என் முப்பாட்டன் சொத்து, அப்படி இப்படி'ன்னுட்டாரு. ஆனா உனக்கு மட்டும் வித்துட்டாரு..."

அவனது பேச்சில் கொஞ்சம் கொஞ்சமாய் முக்கியமான காரணங்கள் அவிழ ஆரம்பித்தன. குறிப்பாக ராவுத்தருக்கு பத்து லட்சம் தர முன்வந்ததும் அவர் மறுத்து விட்டால் நிச்சயம் ஏதோ விஷயம் இருக்கும் என்று எண்ணியவன் 'நாளைக்கு காலைல வாங்க. நான் என் பதிலைச் சொல்றேன்'

என்றான். அவனும் ஆழமாக பார்த்து சிரித்தபடியே, "நல்ல பதில் சொல்லு. நான் சொன்ன புத்தங்களுக்குத் தான் விலை. அதை எப்படி பயன்படுத்தனும் கூட இப்ப இருக்கறவங் களுக்குத் தெரியாது. ஆகையால என்னைவிட அதிக விலைக்கு கேட்டு யாராவது வருவாங்கன்னு மட்டும் நினைச்சுடாதே... இந்த பைரவனை விட்டா இந்த புத்தக் கடையை வாங்க யாருக்கும் மனசு வராது. அப்படியே வந்தாலும் சில ஆயிரம் ரூபா விலைல எல்லாத்தையும் முடிச்சுடுவாங்க..." என்று ஒரு எச்சரிக்கையையும் செய்து விட்டுத்தான் போனான். ராம்கிக்கு குழப்பமாக இருந்தது. ராவுத்தரிடமே விசாரித்துப் பார்த்து விடுவது என்கிற முடி வுக்கு வந்தவன், கடையைப் பூட்டிக் கொண்டு எஸ்.டி.டி. பூத் நோக்கிப் போனான். அவர் எழுதிக் கொடுத்த நம்பர் பாக்கெட்டிலேயே இருந்தது. எண்களைச் சுற்றி அவரைப் பிடித்தான்.

"ராவுத்தரே... ராம்கி பேசறேன்..."

"சந்தோஷம் ராம்கி. வியாபாரம்லாம் நல்லா நடக்குதா?"

"பரவால்ல... ஆனா நான் வேற விஷயத்துக்காக ஃபோன் செய்தேன்..."

"என்னப்பா விஷயம்...?"

"கறுப்பா ஒருத்தன்... பாக்க மந்திரவாதி மாதிரி இருக் கான்..."

"தெரியும், பைரவனைத்தானே சொல்றே...?"

"ஆமாம், அவன் நம்ம புத்தக் கடையை உங்ககிட்ட 10 லட்ச ரூபாய்க்கு விலைக்கு கேட்டானாமே...?"

"ஆமாம், கேட்டான். அவன் ஒரு கிறுக்கன். இந்த நரபலி அப்படி இப்படின்னு போகறவன். அதனால் நான் அவ னுக்கு கடையை கொடுக்க விரும்பலை. இப்ப என்ன... அவன் உன்கிட்ட வந்துட்டானா?"



"ஆமாம் எனக்கு ஒரு கோடி ரூபா தர்றேங்கான். ஒரு பழைய புத்தகக் கடைக்கு யாராவது இவ்வளவு விலை தருவாங்களா...? எனக்கு அவன்கிட்ட அவ்வளவு பணம் இருக்கானே சந்தேகமா இருக்கு..."

"வேண்டாம்; கொடுத்துடாதே! அவன் கண்கட்டு வித்தை எல்லாம் தெரிஞ்சவன். பலருக்கு அவன் கொடுத்த ரூபா நோட்டு வெறும் வெள்ளைத் தாளா மாறியிருக்குது..."

"அய்யோடா... அப்ப சரியான ஃப்ராடுன்னு சொல் லுங்க..."

"நிச்சயமா. அப்புறம் நான் உன்னை ஒரு கேள்வி கேட்கலாமா?"

"தாராளமா கேளுங்க. என்ன தயக்கம்?"

"நம்ப கடைல காலரக்கர பலகணின்னு ஒரு பழைய புத்தகம் இருக்குது. அதை நீ படிச்சியா?"

"ராவுத்தரே..."

"என்னப்பா... என் கேள்விக்கு படிச்சேன், படிக்கலைன்னு ஒரு பதில மட்டும் சொல்லு..."

"படிச்சேன் ராவுத்தரே... எனக்கு சில விஷயங்கள் சரியாவே புரியல..."

"படிச்சேன்னு சொன்னேல்ல, அது போதும். யாரும், யாருக்கும் அந்த புத்தகத்தை அறிமுகம் செய்யக்கூடாது. அது தானாவே உரியவர் கண்ணுல பட்டு அவங்களும் படிக்கிற ஒரு நேரம் வரும். அப்படி வந்தாதான் அது நல்லதும் கூட. உன்வரைல தற்செயலாதானே அது உன் கைல கிடைச்சிச்சு?"

"ஆமாம் ராவுத்தரே... எதுக்கு இவ்வளவு பீடிகை போடறீங்க...?"

"சொல்றேன். அந்த புத்தகத்துக்குத்தான் பைரவனும் குறிவெச்சு அலையறான். அது அவன் வரைல உயிர் மாதிரி. அது மட்டும் அவன் கைல இருந்தா அதை வெச்சுக்கிட்டே ஊரை ஜெயிக்கணும்கறதுதான் அவன் விருப்பம்..."

"அப்படியா விஷயம்..."

"நான் கூட அதுல சில விஷயங்களை டெஸ்ட் பண்ணிப் பார்த்தேன்..."

"எப்படி?"

"அதைப் படிச்ச நீயா கேட்கறே? என்னை ஆழம் பாக்கறியே..."

"ஆழமெல்லாம் நான் பாக்கலை. உங்ககிட்ட நான் எதையும் நேரடியாகதான் பேசுவேன். புத்தகம்கறது பொது வானது. அதுலே கடவுள் மாதிரி இருந்து வழிகாட்டுதுன்னா என்னால நம்ப முடியலை. அதுக்கு ஒருத்தன் ஒரு கோடி ரூபா தர முன்வறான்னா சிரிக்கிறதா, அழுறதான்னே தெரியல..."

"இதோ பார்... அந்த புத்தகத்தை நான் நம்பறேன். அது தான் நான் கடல் கடப்பேன்னு சொன்னிச்சு. அந்த புத்தக் கடையை உன் கைல ஒப்படைக்கச் சொன்னதும் அந்த புத்தகம் தான். ஒப்படைக்கும்போதே தன்னைப் பற்றி ஒரு வார்த்தை பேசக்கூடாதுன்னும் சொல்லிடிச்சு. அதனாலதான் நான் உன்கிட்ட எதுவும் சொல்லலை. அது பாக்கத்தான் புத்தகம். நிஜத்துல அது கடவுள் மாதிரிதான். பகவத் கீதை, பைபிள், குர்ஆன் எல்லாமே வணக்கத்துக்கு உரியதா இருக்கிற மாதிரிதான் இதுவும். நான் அப்படித்தான் நினைக் கிறேன். அந்த புத்தகத்தை யாரும் விலைக்கு வாங்க முடியாது; அதை விற்கவும் முடியாது. அது சொல்ற மாதிரி வேணும்னா எல்லாம் நடக்கும். ஆனா நாம விரும்பற மாதிரி அதுகிட்ட நாம நடந்துக்க முடியாது..."



"ராவுத்தரே... உங்க வயசு, அனுபவம் எல்லாத்துக்கும் மதிப்பு கொடுத்து நான், நீங்க சொல்றத கேட்டுக்கறேன். இப்ப நான் என்ன செய்யட்டும்?"

"கவலைப்படாதே... அந்த புத்தகத்துகிட்டயே கேள். அது வழிகாட்டும். எல்லாம் சரியாகத்தான் நடந்துகிட்டிருக்கு... இனியும் அப்படியே நடக்கும்."

"அப்ப இதுதான் உங்க கருத்தா...?"

"ஆமாம், வெண்ணெயை கைல வெச்சுகிட்டு எதுக்கு நெய்க்கு அலையறே?"

"சரி ராவுத்தரே... நீங்க இவ்வளவு சொல்றதால நான் அப்படியே செய்யறேன்..." ராம்கி தொலைபேசியை வைத்து விட்டு திரும்பி வந்தான். வேகமாக கடையைத் திறந்தவன் அந்த புத்தகத்தைத்தான் தேடி எடுத்தான். லேசாக வியர்த்திருந்தான். அறிவுக்கும் சிந்தனைக்கும் சம்பந்த மில்லாத- அதற்கெல்லாம் அப்பாற்பட்ட ஒரு விஷயத்தில் ஈடுபடுவதால் ஏற்படும் ஒரு வித டென்ஷன் அவனை ஆட்கொண்டபடி இருந்தது. அந்த பலகணி ஏட்டின் பக்கங் களைத் திறந்தவன் நேராக பிரசன்ன கட்டத்தில் போய் ஒரு எண்ணைத் தொட்டான். கண் திறந்து பார்த்தான். அந்த எண் 3. மூன்றுக்குரிய பலனை வாசிக்கப் போனான்.

'தொட்டதும் குருவெண்ணாம். குருவாகிய தெட்சிண சிவனை தூற்றிவிட்டு முறை இடையறாது எண்ணிட தெட்சிணாமூர்த்தியே வந்து இருந்து வழிகாட்டுவார். அவர் கடமை முடியவும் இப்புத்தகம் அவரிடமே சேரட்டும்' என்று குறிப்பிருந்தது.

சிவாலயங்களில் தெட்சிணாமூர்த்தியை பார்த்து வணங்கி இருக்கிறான். அவரே வருவார் என்றால் எப்படி? என்று சில விநாடி குழம்பியவன் முன்போல இதெல்லாம் முட்டாள்தனம் என்று ஒதுக்கி விடாமல் ராவுத்தர்

சொன்னதை மனதில் கொண்டு தெட்சிணாமூர்த்தியை நூற்றி எட்டு முறை இடைவிடாது எண்ண ஆரம்பித்தான்.

ஒன்று....

இரண்டு...

மூன்று...

நூற்றி எட்டு...

-ராம்கி அப்படி உட்கார்ந்து கொண்டு ஜெபிப்பதை யாராவது பார்த்தால் சிரித்து விடுவார்கள். 'இது என்ன புத்தகக் கடையா இல்லை பூஜையறையா' என்று கூட கேட்கலாம். அவனும் நூற்றியெட்டு என்கிற எண்ணிக்கையை கடந்து போய்விட்டான்.

வெளியே கடை முகப்பில் ஒரு வயதான கிழவர் ஒரு விவசாயியைப் போன்ற தோற்றத்தில் தெரிந்தார். அவரும் கண்களை மூடிக் கொண்டு ஜெபித்தவனைப் பார்த்து, "தம்பி... கண்ணைத் திறப்பா. வந்துட்டேன் பாரு" என்றார்.

ராம்கியும் உடம்பை சிலிர்த்துக் கொண்டு கண்ணைத் திறந்தான். எதிரில் திறந்த மார்பில் துண்டோடு அந்த வயதான கிழவர்.

"நீங்க...?"

"நான்தான் தட்சிணாமூர்த்தி. என்னைக் கூப்ட்டே போல இருக்கே. அதான் வந்துருக்கேன்..."

"நீங்க... நீங்களா தட்சிணாமூர்த்தி...?"

"ஏம்ப்பா... நான் வேற எப்படி இருப்பேன்னு நினைச்சே?"

"அது... வந்து..."

"ம், சும்மா சொல்லு... கோயில்ல தான் கல்லா மரத்தடியில இரிசடையோட உட்கார்ந்து ஜபம் செய்யற கோலம் ஞாபகத்துக்கு வருதா?"



"ஆமாம்..."

"அந்த தோற்றத்தோட நான் உன் எதிர்க்க வந்தா எனக்கு மேக்கப் போட்டு விட்டது யாரு... எந்த நாடகக் கம்பெனியில இருந்து நீங்க வர்றீங்கன்னு தான் நீயும் கேட்பே."

அவர் அவன் கேட்காமலே படபடவென்று பதில் சொல்லிக் கொண்டு போனார். ராம்கி திக்குமுக்காடி விட்டான். அப்படியே வெறித்துப் பார்த்தான்.

"என்னப்பா... இப்படி கூப்பிட்டுட்டு சும்மா நின்னா எப்படி?"

"இல்ல... நடக்கற விஷயங்கள் என்னை அந்த அளவு யோசிக்க வைக்குது..."

"கற்பனை, கதைன்னு நாம நினைக்கிற விஷயங்கள் கண் எதிர்க்க நடக்க ஆரம்பிச்சாலே இப்படித்தான் யோசிப்போம்..."

"அத விடுங்க... நான் இப்ப உங்ககிட்ட சில கேள்விகள் கேட்கலாமா?"

"தாராளமா கேள். எனக்கு எப்பவும் கேள்வி கேக்கறவங்களைத்தான் ரொம்ப பிடிக்கும்..."

"சரி..." ராம்கி தனக்குள் இருக்கும் சந்தேகங்களை வார்த்தைப்படுத்த தயாரானபோது தொலைவில் அந்த கறுப்புப் பொட்டுக்காரனும் வந்தபடி இருந்தான். அவன் வருவதைப் பார்த்துவிட்ட ராம்கிக்குள் படபடப்பு தோற்றிக் கொண்டு தொடங்கியது!

## 7

மனிதர்கள் பார்ப்பதற்கு முகம், கை, கால்கள் என்கிற அமைப்புடன் ஒரே இனமாகத் தெரியலாம். ஆனால் ஒவ்வொருவரும் வடிவத்தால் மட்டும்தான் ஒரே இனம்.

மனத்தால் மிக மிக வேறுபட்டே இருக்கிறார்கள். இதைத் தான் அம்சம் என்கிறது ஜோதிட சாஸ்திரம். கன்னலைக் கவ்வும் அழகுடன் இருக்கும் ஒருவர் மனதில் புலியின் சில நடவடிக்கைகளைக் கொண்டிருப்பான். அவன் புலியின் அம்சம். புலியானது வேட்டையாடுவதில் நிகரில்லாதது. அதற்குப் பசி வந்துவிட்டால் எதிரில் உள்ள விலங்கு எதுவாக இருந்தாலும் விடாது. துரத்திப் பிடித்து அதை அடித்து சாப்பிட்டு விட்டுத்தான் அடங்கும். அந்த விஷயத் தில் அது பசி என்கிற உணர்ச்சியால் ஆட்டி வைக்கப்படும். எடுக்கின்ற பசியை ஜெயிக்க அது உடம்பின் முழு பலத்தை யும் திரட்டி போராடும். பசி அடங்கவும் அப்படியே ஓரம்கட்டி படுத்து விடும். அதற்கு தான் செய்தது சரியா, தவறா என்ற சிந்தனைகள் அறவே கிடையாது. தான் யார் என்பதும் தெரியாது. எதற்காக பிறந்திருக்கிறோம், என்னவோம் என்ற ஒரு கேள்வியும் அதற்கு கிடையாது. அது முழுக்க முழுக்க உடல் உணர்ச்சியால் ஆட்டி வைக்கப்படுகின்ற ஒரு ஜீவனாகும்.

அப்படியே புலியின் இந்த ஆதார அம்சம் சிலரிடம் இருக்கும். கூடுதலாக புலியிடம் இல்லாத தான் யார் என்பது தெரிந்த தன்மையும், தான் செய்வது தவறான செயல், பாவமான செயல் என்கிற எண்ணமும் கூட இருக்கும். இது இருப்பதால் புலியைப் போல முழு பலத் துடன் இவர்கள் இயங்க மாட்டார்கள். தயங்கித் தயங்கி உணர்ச்சிக்கும் புத்திக்கும் நடுவில் கிடந்து தவிப்பார்கள். இதனால் வேகம் மட்டுப்பட்டு விடும். இருந்தாலும் இறுதியில் உணர்ச்சிப்படிதான் நடப்பார்கள். இவர்கள் முதலாளிகளாக இருந்தால் தொழிலாளர்களை கசக்கிப் பிழிந்து விடுவார்கள். சாதாரண தொழிலாளியாக இருந் தால் வேலை பார்க்கும் இடத்தில் தாதாவாக திகழ்வார்கள். ஒரு பிச்சைக்காரனாக இருக்கும் பட்சத்திலும் புலிக்குணத் தோடு வீடு வீடாக பிச்சை எடுக்கும் போது திருடுவது. அப்படி திருடும்போது யாராவது பார்த்து விட்டால் அவர் களை கொலை கூட செய்வது என்று மாறி விடுவார்கள்.

இது புலிக்குணத்துக்கு மட்டுமல்ல... உலகில் உள்ள எல்லாவிதமான உயிரினங்களிலும் அம்சங்கள் உண்டு. சிலர் மீனின் அம்சம், சிலர் ஆட்டின் அம்சம், சிலர் யானை... சிலர் குருவி... அவர்களைக் கூர்ந்து கண்டு பிடித்து விடலாம்.



*அப்படி இவர்கள் கொள்ளும் அம்சம் என்பதுதான் இவர்களின் முற்பிறப்பை அறுதியிட்டு காட்டக் கூடியது.*

அந்த கறுப்புப் பொட்டுக்காரன் வருகையை தட்சிணா மூர்த்தியும் கவனித்தார்.

"பயப்படாதே... யாருக்காக நான் வந்திருக்கேனோ அவனே வந்துகிட்டிருக்கான். அந்த புத்தகத்தை முதல்ல இப்படிக் கொடு. ம்... சீக்கிரம்..."

"இது... இது எதுக்கு உங்களுக்கு?"

"நீ சரியா படிக்கலையா.... அடுத்து இது என்கிட்ட தான் வந்து சேரணும். 'அதுல எழுதியிருக்குமே...?"

அவர் சொல்லவும் அதற்கு மேல் அவரை சந்தேகப் படுத்துவது தப்பு என்று உணர்ந்து அந்த புத்தகத்தை தூக்கி கையில் கொடுத்தான்.

"அவன் வந்தா இப்ப கடையைத் தூக்கி தாராளமா அவன் கைல கொடு. ஆனா பார்... அவன் இந்தக் கடை எனக்கு வேண்டாம்; இதோட மதிப்பு இப்ப ஐநூறு ரூபாகூட கிடை யாதும்பான். அவன் போன பிறகு நானே வருவேன். கவலைப்படாதே... என்ன?"

என்று அவர் நழுவ ஆரம்பிக்க, ராம்கிக்கு மனது பதைத் தது. 'அய்யய்யோ... இப்படி புத்தகத்தோடு போவது எனக்கு ஏமாற்றத்தை தந்துவிட்டால் என்ன செய்வது?' என்று அவனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அதற்குள் கறுப்புப் பொட்டுக்காரன் வந்து விட்டான். வந்தவன் சில விநாடி ராம்கியையும், கடையையும் கூர்ந்து பார்த்துவிட்டு, "என்னை ஏமாத்திட்டேல்ல?" என்றான்.

"என்னங்க இது... வந்ததும் வராததுமா நான் உங்களை ஏமாத்தினதா சொன்னா என்னங்க அர்த்தம்?"

"ஒண்ணும் தெரியாதவன் மாதிரி ஆக்ட் கொடுக்காதே. எனக்கு எல்லாம் தெரியும். இந்தக் கடையை நான் எதுக்காக வாங்க நினைச்சேனோ, அது இங்க இல்லை..."

"அதுக்கு நான் என்ன பண்ண முடியும்? நீங்க முதல்லயே வந்திருக்கணும்..."

"நானும் ஒவ்வொரு முறையும் முந்தத்தான் நினைக்கறேன். ஆனா என்னைவிட வேகமாக விதி செயல்பட்டுடுது..."

"இவ்வளவு தெளிவா சிந்திக்கிற உங்களுக்கு அந்தப் புத்தகத்து மேல அப்படி என்ன கண்ணு?"

ராம்கியின் கேள்விக்கு பதிலுக்கு ஒரு முறைதான் முறைத்தான் அவன்.

"இனி நான் வேற முறைல அதை அடையப் பாக்கறேன். வரேன்" என்று திரும்பி நடந்தான். போகும்போது திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டே போனான். அவன் தலை மறையவும் தட்சிணாமூர்த்தியும் திரும்பி வந்தார்.

"இந்தாப்பா புத்தகம். முதல்ல வாங்கி வை..." என்று நீட்டினார். அவர் அப்படிச் செய்வது அவன் வரையில் அவர் சோதித்துப் பார்ப்பது போல் இருந்தது.

"இல்ல, உங்ககிட்டயே இருக்கட்டும்..."

"மனசாரத்தான் சொல்றியா?"

"அப்படிச் சொல்லமுடியாது. நடக்கற விஷயங்கள என்னால புரிஞ்சுக்க முடியல. ஆனா ஒண்ணு வாழ்க்கைங்கறது எப்பவோ முடிவு செய்யப்பட்ட ஒரு விஷயம். அப்படிதான் எல்லாம் நடக்கும்னுதான் இப்ப நான் நினைக்கறேன்..."

"ஏன் அப்படி?" அவர் கேள்வியோடு அவன் கடை முன்னால் உள்ள பெஞ்சில் அமர்ந்தார்.



"அதை எல்லாம் என்னால புரியவைக்க முடியாதுங்க. எனக்கு அந்த சக்தி இல்லை..."

"கேள்வியே கேட்கத் தெரியலை உனக்கு... நீ எப்படி இந்த உலகத்தை- அப்புறம் உன்னை- விளங்கிக்கப் போறே?"

அவர் ஒரு இடி இடித்தார். அவனுக்கு அதைக்கேட்டு சற்று கோபமும் வந்தது. அதை முகத்தில் காட்டினான்.

"கோவிக்காதே... உனக்குள்ள என்ன மாதிரி குழப்பம் இருக்குன்னு நான்சொல்றேன். இந்த உலகத்துல மனுஷன் ஒருத்தனுக்குத்தான் காலம் பற்றிய கேள்வியும் பார்வையும் உண்டு. மனிதனைத் தவிர வேற எந்த உயிரினத்துக்கும் காலம்னா என்னன்னே தெரியாது. அதைப் பொருத்தவரை பகலும், இரவுமா இந்த பூமி இருக்கு. அவ்வளவுதான்... பகல், இரவு கூட எவ்வளவு நேரம் உடையது; ஏன் பகல், இரவுன்னு இரண்டு விதமா இருக்குன்னு எதுவுமே அவற்றுக்குத் தெரியாது; மனுஷனுக்கு மட்டும்தான் தெரியும். ஒரு மனுஷன் இன்னிக்கு இருக்கான்னா நேற்று அவன் இருந்திருந்தாதான் இன்னிக்கு நாம பாக்கும்போது அவன் இருக்க முடியும்.

அந்த வகைல எல்லாருக்கும் கடந்த காலம், நிகழ் காலம்னு இரண்டு இருக்கு. எதிர்காலம்கறது வரப்போற ஒண்ணு. அது எப்படிப்பட்டது, அதுல தன் வாழ்க்கை எப்படி இருக்கும்கற பல கேள்விகளுக்கு மனிதனுக்கு விடை தெரியாது.

தன்னம்பிக்கையும் தெளிவும் உடைய சிலர் வேணும்னா 'என் எதிர்காலம் நிச்சயம் நல்லவிதமா இருக்கும்'னு நம்பிக்கையோட பேசலாம். ஆனா அடுத்த அஞ்சாவது நிமிஷம் என்ன நடக்கும் யாராலயும் சொல்ல முடியாது. நடந்த பிறகுதான் நாம் தெரிஞ்சுக்க முடியும். ஆகையால

ஒவ்வொரு மனிதனுக்குள்ளேயும் எதிர்காலம்கறது மர்மமான ஒண்ணாவே இருக்கு. அந்த வகைல எதிர்காலத்தை நான் மர்மமான காலம்னும் சொல்வேன்.

இந்த மர்மத்தை தெரிஞ்சுக்கற ஆர்வம் எல்லாருக்குள்ளே யும் இருக்கு. இன்றைய உலக கோடீஸ்வரனான பில் கேட்ஸ்ல இருந்து இந்த தெருவுல பிச்சை எடுக்கற முனி யாண்டி வரைக்கும் தன் எதிர்காலம் எப்படி இருக்கும்கற கேள்வியோடு இருக்கறவங்க தான். அது இப்படித்தான் இருக்கும்னு சொல்றவங்களைக் கூர்ந்தும் கவனிப்பாங்க. அதனாலதான் ஜோதிடர்கள், அருள்வாக்கு சொல்றவங்க மேலெல்லாம் ஒரு தனிப் பார்வை.

அதுவையும் அவங்க சொன்ன மாதிரிமட்டும் நடந்துட்டா, அப்படிச் சொன்ன நபரை கடவுளுக்கும் மேலாகவே நினைக் கறதுதான் மக்களோட வழக்கம்.

வித்யாரண்யர்னு ஒரு ரிஷி! கடுமையாக தவம் செய்து மனிதப் பிறப்பை ஜெயிக்க முயற்சி செய்தார். மனிதப் பிறப்பை ஏன் ஜெயிக்கணும்னு இப்ப உனக்கு ஒரு கேள்வி எழலாம்.

மனிதப் பிறப்பை பற்றி நடுநிலையோட யோசிச்சா உனக்கு ஒரு உண்மை தெரியும். உனக்குன்னு ஒரு உருவம் இருக்கு. இதை நீ தீர்மானிக்கல... கருவுல உருவானதை அப்படியே ஏத்துக்கிட்டே. ஆக 'நான்'னு நீ சொல்லிக்கற நீயே உன் விருப்பப்படி இல்லை. கருப்போ, சிகப்போ ஒத்துக்கிட்டு சமாதானப்பட்டே தீரணும். அடுத்து பசிக்கும் போதெல்லாம் வயித்துக்கு சாப்பாடு போடணும். ஒரு நாள் ஒருவேளை போடத் தவறினாலும் நம்ம எஜமான்தானேன்னு உன் உடம்பே நினைக்கறதில்ல. அது வலியை உருவாக்கி, உன்னைக் கதற வெச்சு சாப்பாட்டை வரவழைச்சு சாப்ட்ட பிறகுதான் அடங்கி உன்னை விடுது.



சாப்பிட்டதாலேயே வயித்துல ஒரு பக்கம் மலத்தை சுமக்க வேண்டிய கட்டாயம். அதைக் கழிக்க வேண்டிய கட்டாயம்.

அப்புறம் நோய் நொடிகள். இவற்றைக் கண்டு அஞ்சி வாழ வேண்டிய கட்டாயம் இருக்கு. அப்புறமா பாச பந்தம் கற உணர்ச்சிகள் மனசுக்கு இருக்கு. ஆகையால நெருங்கின சொந்தங்கள் இறந்துட்டா தாங்கிக்க முடியாம துக்கப்பட வேண்டி இருக்கு.

ஆக மனிதனா பிறந்துட்டா இந்த மாதிரி நிர்ப்பந்தங்கள், இக்கட்டுகளுக்கு ஒரு அளவே இல்லை. எப்ப எது நடக்கும்னு தெரியாத ஒரு நிலை. எப்ப பார் போராட்டம், எதிர் நீச்சல்.

இவ்வளவெல்லாம் கஷ்டப்பட்டு வாழறவன் ஒரு நாள் செத்தும் போயிடறான். அப்படி செத்துப் போறானே அப்ப அவனால எதையாவது கொண்டு போக முடிஞ்சுதா? எதுவும் இல்லை... பெரிய கொடுமை. அவன் வாழ பயன்பட்ட உடம்பைக் கூட சம்பந்தமில்லாத நாலு பேர் சுமந்துகிட்டு போய் எரிக்கற கொடுமைதான் நடக்குது.'

உடம்பை வளர்க்கறதே கடைசியா தீக்கு தின்னக் கொடுக்கத்தானான்னு ஒரு கேள்வி எழுது இல்லையா?"

அவர் பேசிய பேச்சில் ஒவ்வொரு வார்த்தையிலும் அர்த்தப் பொதி. ராம்கி அவரது இடமான தீர்க்கமான பேச்சைக் கேட்டு விக்கித்துப் போய்விட்டான்.

"என்னப்பா... நான் சொல்றது விளங்குதா? முக்கியமான விஷயத்தையே இனிதான் சொல்லப் போறேன்.

"வித்யாரண்யர்ல ஆரம்பிச்சேன் இல்லையா? அவருக்கு மனிதப் பிறப்பு பிடிக்கலை. நான் முன்பே சொன்னபடி இந்த பிறப்பு ஒரு மாயப் பிறப்பு. இதுல விதிப்படி தான் எல்லாம் நடக்குது. நம்ம விருப்பம்னு எதுவும் இல்லை.

எப்பவும் சந்தோஷமா இருக்க நினைச்சாலும் முடியல... ஆகவே இந்த மாயப் பிறப்பு வேண்டாம்னு இதை உதறத்தான் அவர் தவம் செய்தார். அப்படி அவர் தவம் செய்யும் போது பல உண்மைகள் தெரிஞ்சது. 'அதுல ஒரு உண்மை. ஒரு உயிர் எதனால மனிதப் பிறப்பெடுக்குது? அதுலயும் குறிப்பா குறிப்பிட்ட ஒரு தாய், தந்தைக்கு அது ஏன் மகனாவோ இல்லை மகளாவோ பிறக்குது? அது பிறக்கக் காரணம் என்ன...? அதற்கு ஆயுட்காலம் எவ்வளவு? இப்படிப்பட்ட பல கேள்விகளுக்கு அவர் அந்த தவத்துல விடையைக் கண்டு பிடிச்சார்.

தான் கண்டுபிடிச்சதை கர்வத்தோட அவர் கடவுள்கிட்டேயும் சொல்லி சந்தோஷப்பட்டுக்கிட்டார்.

ஒரு மனிதன்தான் வாழற நொடிப் பொழுதுகளை செலவழிக்கற விதத்துலதான் அவன் எதிர்காலம் உருவாகுதுங்கறது முதல் உண்மை. அப்படி அவன் வாழற நொடிப் பொழுதுகளோ ஒன்பது கிரகங்களோட கைகள்ல இருக்குதுங்கறது அவர் கண்டுபிடிச்ச அடுத்த உண்மை. அந்த கிரகங்களோ பரம்பொருளோட பிடியில் உண்மை.

இப்படி உண்மைகளைக் கண்டறிஞ்ச வித்யாரண்யர் அதை எழுதி வெச்சு உலகத்துக்கு தெரிவிக்க விரும்பினார். நூத்துல ஒருத்தருக்கு அவர் சொல்றது புரிஞ்சாலும் போதும்; அவருக்கு அதுல ஒரு ஆத்மதிருப்தி இருக்கு. அது மட்டுமல்ல...

மனிதன் மனிதனா இல்லைன்னா அப்புறம் அந்த உலகம் சீக்கிரமா அழிஞ்சிடும். தேர் வேகமா ஓடும்போது தேர் சக்கரத்துக்கு இடைல பெரிய கட்டைகளைப் போட்டு ஓட்டத்தோட வேகத்தை கட்டுப்படுத்தி தேர் ஒழுங்கா போக வழிபார்ப்பாங்க. அது அப்படியே வாழ்க்கைக்கும் பொருந்தும். மேலோட்டமா பாக்கறவங்களுக்கு தேர்ச்சக்கரங்களுக்கு நடுவுல கட்டை போடுறது எரிச்சலைத் தரும். 'எவ்வளவு



கஷ்டப்பட்டு இழுக்கறோம்; அதுக்கு நடுவுல இப்படி கட்டைப் போட்டு, இழுக்க முடியாம பண்றானேன்னு கோபம் கூட வரும்.

ஆனா அப்படி செய்யறதே தேர் சுலபமா ஓடி சரியா கரை சேரத்தான்கறது நல்லா சிந்திக்கறவங்களுக்கு தெரியும்.

மனித வாழ்க்கைல பிரச்சனைகள் வர்றதும் சந்தோஷத்துல மனிதன் மயங்கி அதன் பின்னால போய்டாம தடுத்து அவனை சமநிலைல வைக்கத்தான்.

ஆகக்கூடி ஒவ்வொரு மனிதனுக்குப் பின்னாலயும் அவன் யார்? அவன் எதுக்கு பிறந்திருக்கான்? அவன் பிறப்பு நோக்கம் பற்றி அவனுக்கு தெரியுமா?ன்னு மூணு கேள்விகள் இருக்கு.

இந்தக் கேள்விகளுக்கு ஒவ்வொரு மனிதன் சார்பாகவும் விடையை தேடியலைஞ்சவர்தான் வித்யாரண்யர்.

அப்படி அவர் தேடி அலைஞ்சதுல அவர் கண்டுபிடிப்பது தான் இந்த காலசக்கர பலகணி. இது ஒருத்தர் கைல இருந்தா, அவங்கதான் இந்த உலகத்தோட மிகப்பெரிய பயில்வான். எப்படின்னா அவனுக்கு எப்ப எதைச் செய்தா வெற்றி மட்டுமே கிடைக்கும்கறத இந்த புத்தகம் சொல்லி கொடுத்துடுது. அதுமட்டுமில்ல, அவன் வாழ்க்கையையே இது புட்டுப்புட்டு வெச்சிடுது. நேற்று எப்படி இருந்ததுன்னு உனக்குத் தெரியும். ஒருவேளை தெரியலைன்னாலும் பாதகமில்லை. ஆனா எதிர்காலம் நிச்சயம் நல்லவிதமா மட்டுமே இருக்கணும்கறதுதான் ஒவ்வொருத்தரோட எதிர்பார்ப்பும். எதிர்காலம் சிறப்பா இருக்குமா? அதை தெரிஞ்சுக்க உதவி செய்யறதுதான் இந்த பலகணி. இது ஒருத்தர் எதிர்காலம் பற்றி தவறாவே சொல்லாது. ஏன்னா இது மனுஷன் கண்டுபிடிச்ச சாதாரண விஷயமில்லை. ஒரு மகான் உலகம் புரிஞ்சு தனக்குள்ள பல கேள்விகளைக் கேட்டு எழுதினது இந்தப் புத்தகம்..."

தட்சிணாமூர்த்தியின் அடுத்த கட்டம் ராம்கியை சிலையாக்கி விட்டது. அவரோ தொடர்ந்து கொண்டே போனார்.

"இதை வித்யாரண்யர் எழுதியிருந்தாலும் ஒவ்வொரு கால கட்டத்திலேயும் இது பல பேர் கைக்கு போய் அவங்களுக்கு செய்ய வேண்டிய உதவியை செய்துட்டு அதன்பின் இது தன் பயணத்தை தொடர்ந்துகிட்டுதான் இருக்கு. ஒரு புத்தகம் மொத்தமாக ஒரு சமுதாயத்துக்கே பயன்படாம ஒரு சிலருக்கு மட்டும் பயன்படறது சரியான்னு ஒரு கேள்வி எழலாம். பசிச்சவங்கதான் எப்பவும் சாப்பிட முடியும். பசியில்லாத இடத்து உணவு பாழாத்தான் ஆகும். இந்த விஷயமும் அப்படித்தான்..." என்று முடித்தார். அங்கே மட்டும் ராம்கிக்கு ஒரு கேள்வி எழும்பியது.

"பசிக்கிறவங்களுக்குத்தான் சாப்பாடுங்கற உங்க உதாரணம் நல்லாத்தான் சாமி இருக்கு... ஆனா எனக்கு இங்க பசியே இல்லையே...? அதாவது இந்த புத்தகம் மூலமா ஒரு உதவி கிடைக்கணும்கற எந்த வித எதிர்பார்ப்பும் எனக்கு கிடையாது. இவ்வளவு தூரம் விளக்கமா நீங்க சொல்லிகிட்டிருக்கிற போதும் இதன்மேலே எனக்கு பெரிய ஈர்ப்போ நம்பிக்கையோ ஏற்படலை. இந்த உலகம் ஒரு போலியான உலகம். அசந்தா ஏமாத்துற எவ்வளவோ பேர் அலையறாங்க. உழைச்சு பொழைக்கணும்கற எண்ணத்தைவிட உக்காந்து காலாட்டிகிட்டே சாப்பிடத்தான் ரொம்ப பேர் ஆசைப்படறாங்க. ஆகையால இப்படி நீங்க பேசறதும், இதுக்குப் பின்னால உள்ள விஷயங்களும் ஒரு பெரிய ஏமாற்று சதியோன்னு தான் என்னை யோசிக்க வைக்குது," என்றான். அவர் அதற்கு இணக்கமான சிரிப்பைத்தான் முதலில் பதிலாக்கினார்.

பின், "நிறைய சந்தேகப்படு... சந்தேகம்தான் எச்சரிக்கையா மாறி மனுஷனைக் காப்பாத்துது. அதுல தப்பு இல்லை. இந்த உலகத்துல வாழுற மனுஷங்களுக்கு சுத்தி இருக்கற



வங்களால ஒரு பாதிப்பு நிச்சயமா இருக்கும். நீ இப்படி சிந்திக்கவும் பேசவும் கூட அதுதான் காரணம். நீ தாராளமா சந்தேகப்படு. அதேசமயம் உனக்கு உதவி செய்யற கடமை எனக்கு இருக்கறதாலதான் வந்துருக்கேன். நீ எப்ப நினைச்சாலும் போதும்- நான் உன் முன்னால இருப்பேன். உனக்கு வழிகாட்டுவேன். இப்போதைக்கு இந்தப் புத்தகம் உன்கிட்டேயே இருக்கட்டும். ஏன்னா இதால உனக்கு நிறைய விஷயங்கள் நடக்க வேண்டி இருக்கு..."

அவர் எந்திரம் போல் பேசிவிட்டு புறப்பட காலெடுத்தார்.

"ஒரு நிமிஷம்..." ராம்கி தடுத்தான். அவரும் திரும்பினார்.

"நான் திரும்பவும் சொல்றேன். எனக்கு இந்த விஷயம் ஒரு பெரிய புதிரா இருக்குது. என்னால விளங்கிக்க முடியாத விஷயம் எவ்வளவு பெருசா இருந்தாலும் அது எனக்கு வேண்டாம்கறதுதான் என் பாலிசி. இந்த புத்தகம்- இதுக்குள்ள யோசிக்கற ஜோசியக் குறிப்பு, அப்புறமா தியானம் செய்தா உரிய தேவன் வருவான், உதவுவான்கற எல்லாமே எனக்குப் பெரிய புதிரா இருக்கு... இவங்க ஏன் வரணும்? எதுக்கு உதவணும்னு கேள்விகள் இருக்கு... இவங்க உதவலேன்னா என்னால எதுவும் செய்ய முடியாதா? இப்படியும் கேள்விகள் இருக்கு... ஆகையால தயவு செய்து என்னை விட்டுருங்க. இந்த புத்தகத்தை நான் இனி தொடமாட்டேன். இந்த மாதிரி புத்தகங்கள் இருந்து குழப்பறதுக்கு இல்லாம போயிடறது நல்லது...

மனிதன் அவனோட வாழ்க்கைல புத்தியின் போக்குல போய் வாழுறதுதான் நல்லது... நாளைக்கு என்ன நடக்கும்னு எனக்குத் தெரிய வேண்டாம். எனக்கு மட்டுமில்லை... யாருக்கும் தெரியத் தேவையில்லை. நடக்க நடக்க தெரிஞ்சுக்கறதுதான் நல்லது. ஒரு விஷயம் முன்னாடியே தெரிய சரியான காரணம் இருக்கணும். இதுதான் என் கருத்து..."

என்றவனை அவரும் நீர்க்கமாக பார்த்தார். பின் மௌனமாக நடக்கத் தொடங்கினார்.

"என்னங்க... எதுவும் சொல்லாம போறீங்களே...?"

அவரும் திரும்பினார். சிரித்தார். பின் பேசினார்.

"நீ சொன்னபடியே நடந்துக்க முடிஞ்சா சந்தோஷம். முடியுதான்னு பார். நாம அசைஞ்சா நம்ம நிழலும் அசையும். நாம மட்டும் தான் அசையணும், நிழல் அசையக் கூடாதுன்னா அது எப்படி சாத்யமில்லையோ அப்படித்தான் உன் பேச்சும். நீ இப்படி பேசவும் சிந்திக்கவும் எப்படி ஒரு சரியான காரணம் இருக்கோ, அதுபோல அடுத்தடுத்து நீ நடக்கறதுக்கும் காரணங்கள் இருக்கு... உன் நீண்ட பேச்சல இறுதியா நீ ஒரு கருத்து சொன்னே... ஒரு விஷயம் முன்னாடியே தெரிய சரியான காரணம் இருக்கணும்னு... இத சொன்ன உனக்கு காரண, காரியமில்லாம ஒரு விஷயம்கூட இந்த உலகத்துல நடக்கறதில்லைங்கறது தெரியலியே..."

அவர் கேலியாக கேட்டுவிட்டு விறுவிறுவென்று கிளம்பிப் போய் விட்டார். அவர் போவதையே சில நொடிகள் பார்த்தவன் திரும்ப அந்த காலசக்கர பலகணியைப் பார்த்தான்.

பழுப்பேறிய- ஒரு நூற்றாண்டு கடந்துவிட்ட புத்தகம். புத்தகங்கள் புத்தியில் புகுந்து கொண்டு வழிகாட்டும். ஆனால் அதற்குமேல் சென்று உதவிக்கு ஆளையெல்லாமா அனுப்பித்தரும்?

சிரிப்புத்தான் வந்தது... அப்போது கடை முகப்பில் உரசிக் கொண்டு வந்து நின்றது பார்த்திபனின் பைக். கூலிங் கிளாசில் ஒரு மாடரேட் இளைஞனாக தெரிந்த பார்த்திபனும் ராம்கியை பார்த்து 'ஹலோ' சொன்னபடியே வந்தான்.

"என்ன சார்... பழைய புக் ஏதாவது வேணுமா?"



"இல்லை... நான் மனோகர்ங்கறவர் பற்றி விசாரிக்க வந்திருக்கேன்..."

"மனோகர்... எந்த மனோகர்?"

"உங்ககிட்ட இங்கிலீஷ் நாவல்களை வாங்கி என் சிஸ்டருக்கு அல்வா கொடுக்க நினைக்கற அதே மனோகரன் தான்..."

"அப்ப நீங்க?"

"நான் நந்தினியோட கசின் பிரதர்..."

"ஐ ஸீ... உங்களுக்கு மனோகர் உங்க தங்கையை காதலிக்கிறது பிடிக்கலியா?"

"எந்த அண்ணன் காதலை விரும்புவான்? அதுலயும் காதலை ஒரு உடற்பசியா நினைக்கற நான் அதோட முதல் எதிரி..."

"சரி... இப்ப நான் என்ன செய்யணும்?"

"இந்த மனோகர் பற்றி எனக்குத் தெரியணும். என் தங்கை ஆரம்பத்துல அவனைக் கொஞ்சம்கூட விரும்பலை. இப்ப திடீர்னு அவன் மேல ஆசையா இருக்கா. எப்படின்னு தெரியல... அவன் ஏதாவது குறுக்கு வழியிலே போய் அவளை ஏமாத்திட்டானான்னு எனக்கு தெரியணும்..."

"காதலிக்கறவங்க குறுக்கு வழியில் போறது ரொம்ப சகஜம்தானே?"

"அது ஒரு ஆர்வக் கோளாறான வழியா இருந்தா பரவால்ல... அதுவே அவன் வாழ்க்கையா இருந்தா அப்புறம் அந்தப் பெண்ணோட கதி அவ்வளவுதான்..."

"நீங்க அநாவசியமா பயப்படறீங்க. மனோகர் ரொம்ப நல்லவர். உங்க தங்கையை ரொம்ப ஆசையா காதலிக்கிறார். அவரை சந்தேகப்படாதீங்க..."

"அப்படின்னு நீங்க சொல்ல உங்களுக்கு அவர் எவ்வளவு கொடுத்தாரு...?"

பார்த்திபன் அப்படிக் கேட்பான் என்று ராம்கி துளிகூட எதிர்பார்க்கவில்லை.

"சாரி சார். இனி உங்களுக்கு நான் பதில் சொல்லப் போறதில்ல. நீங்க புறப்படலாம். எனக்கு லட்ச ரூபாயை அந்த மனோகர் கொடுத்திருக்காருன்னு வெச்சுக்குங்களேன்..."

ராம்கியின் கோபம் பார்த்திபனை யோசிக்க வைத்தது. இப்படி இவன் கோபிக்கிறான் என்றால் இவனிடம் உண்மை இருக்க வேண்டும் என்று தோன்றியது.

"சாரி... நான் சும்மா உங்களை கிறிப் பார்த்தேன். தப்பா எடுத்துக்காதீங்க. நான் வரேன்..." என்று கிளம்பிப் போனான். ராம்கிக்கு சற்று அலுப்பாகக் கூட இருந்தது. காலையில் இருந்து ஒருவர் மாற்றி ஒருவர் வருவதும் பேச்க வளர்வதுமாகவே இருப்பதை எண்ணியபடியே கடையில் போய் அமர்ந்தான்.

எதிரில் அந்த புத்தகம்!

உதவி செய்வதற்கென்றே வந்துள்ளதாக தட்சிணாமூர்த்தி குறிப்பிட்ட அதே புத்தகம். அதைப் பார்க்கவும் சிரிப்புத்தான் வந்தது.

தனக்கு மனைவி என்று அந்த புத்தகம் குறிப்பிட்டிருக்கும் நந்தினி இப்பொழுது மனோகரின் காதலி. நாளை அவன் மனைவி. வேடிக்கையாக இருந்தது.

அப்பொழுது கையில் டிபன் தட்டுடன் வந்தாள் அந்த கர்ப்பவதிப் பெண். அவள் கையில் சிந்தாமணி ஆசையாக கொடுத்து அனுப்பியிருந்த பணியாரங்கள்.

"தம்பி..." என்றபடி தட்டை நீட்டிய அவளைப் பார்த்த வனுக்கு கொஞ்சம் சந்தோஷமாகவும் இருந்தது. திக்கற்றியாக



பசி என்று வந்து நின்றவள் இன்று வேலை செய்து பிழைப்பவளாக உள்ளாள். நினைத்துப் பார்க்கவே சந்தோஷ மாக இருக்கிறது. வாழ்க்கை இப்படி அர்த்தமுள்ள மாற்றங் களோடு தான் செல்ல வேண்டும் என்று எண்ணினான்.

"என்ன தம்பி என்னையே பார்த்துக்கிட்டு... சாப்பிட்டு தட்டைக் கொடு..."

"இல்லக்கா... நீ போ... நான் அப்புறமா கொடுத்து விடறேன். அப்புறம் உன்கிட்ட ஒண்ணு கேட்கணும். உனக்கு இப்ப இது எத்தனாவது மாசம்?"

"எட்டாம் மாசம்னு நினைக்கறேன்..."

"நினைக்கறியா... குழந்தைப் பொறக்கப் போற தேதி அப்ப உனக்கு தெரியாதா?"

"எங்க தம்பி... அதுக்கு டாக்டரை போய்ப் பார்க்கணும். நான் எங்க அவங்களை எல்லாம் பார்த்தேன். நானும் செத்து இதையும் அழிக்கக்கல்ல நினைச்சேன்..."

"அப்பசரி... இன்னிக்கு நான் உன்னை டாக்டர் கிட்ட கூட்டிகிட்டு போறேன். நீ இந்த வயித்தோட கஷ்டப் படாதே..."

"வேண்டாம் தம்பி. இது நல்லவிதமா பொறக்கணும்னு இருந்தா பொறக்கட்டும். இல்லாட்டி போகட்டும். இதுக்காக நீ சிரமப்படாதே..."

"இது சிரமமா...? கடமைக்கா! ஒருத்தர்க்கு ஒரு உதவி செய்யறதுன்னு இறங்கிட்டா அதை முழுசா செய்து முடிக்கணும். இல்லாட்டி செய்யவே கூடாது. எனக்கு ஒரு அக்கா இருந்தா செய்யத்தானே செய்வேன்..."

ராம்கியின் ஆதரவான பேச்சு அவள் கண்களில் கண்ணீரை புரட்டியது.

"தம்பி! உனக்கு ஆனாலும் ரொம்ப நல்ல மனசுப்பா.." என்று கண்ணீரை கண்டிவிட்டுக் கொண்டாள். அப்படியே

புத்தகக் கடைக்குள் பார்வையை விட்டாள். மரமேஜையின் மேல் காலசக்கர பலகணி என்னும் அந்த புத்தகம். அவள் பார்த்த நேரம் பார்த்து சிந்தாமணி, ராம்கியை உரத்த குரலில் அழைப்பது காதில் விழுந்தது.

"ஏலே ராமகிருஷ்ணா... என் ராசா... கொஞ்சம் வந்துட்டு போ. இங்க பாரு ரேஷன் கார்டுக்கு பேர் எழுதிட்டு போக ஆளுங்க வந்திருக்காக..." என்றாள்.

ராம்கியும் பணியாரத் தட்டுடன் அப்படியே கிளம்பினான்.

"யக்கா... கொஞ்சம் கடைகிட்ட இரு. வந்துடறேன்..."

அவளும் சேலை முந்தியால் விசிறிக் கொண்டே போய் உட்கார்ந்தாள். அந்தப்புத்தகத்தை எடுத்து சிறிது நேரம் விசிறிக் கொண்டாள். பிறகு அப்படியே புரட்டினாள். ஒவ்வொரு பக்கமாக படித்தவளுக்கு ஆர்வம் குப்பென்று தொற்றிக் கொண்டது. அதிலும் பிரசன்ன சக்கரத்தில் எண்களைத் தொட்டு அதற்குரிய தேவனை அழைக்கும்படியான குறிப்பை படித்தவள் அவள் தொட்ட 61 என்கிற எண்ணுக்கு அதிபதியான சூரிய அம்சம் கொண்ட தேவனை துளிகூட சந்தேகமே படாமல் தியானிக்க எதிரில் பனிச்சென்ற முகத்தோடு ஒரு இளைஞன்.

"கூப்ட்டியா பார்வதி..." என்று அவன் சொல்லாத பெயரைச் சொல்லி அழைத்தான்.

"என் பேர்... என் பேர் உங்களுக்கு எப்படி தெரியும்?"

"நான் காலதேவன். உங்களுக்கு எப்பொழுதும் நிகழ் காலம் மட்டும் தான். எனக்கு அப்படி இல்லை. நான் மூன்று காலங்களையும் அறிந்தவன்..."

"அப்படியா... நான்... நான்கூட இந்த புத்தகத்துல ஏதோ போட்டிருக்கு... சும்மாதானே இருக்கோம்னு சும்மா விளை



யாட்டுக்கு கூப்ட்டு பார்த்தேன். ஆனா இது இவ்வளவு பெரிய நிஜம்கறது என்னால நினைக்கவே முடியலை..."

"நல்லது... உனக்கு என்ன வேண்டும்? அதைக் கேள்..."

"நான் எதை கேட்டாலும் தர முடியுமா உங்களால?"

"நிச்சயமாக. அதற்குத்தானே நான் வந்திருக்கிறேன்..."

"இந்த அலாவுதீன் கதைல விளக்க தேச்சா வர்ற பூதம் மாதிரில்ல இருக்கு..."

"அது பூதம். நான் தேவன். நீ தியானித்ததால் வந்த தேவன்."

"அங்கதான் எனக்கு இப்ப குழப்பமே. நடக்கறதெல்லாம் கனவா இல்லை நனவான்னு இருக்கு..."

"நீ எப்படி நினைக்கின்றாயோ அப்படி..."

"இல்ல... அது கனவா இருக்க வேண்டாம். நனவாவே இருக்கட்டும். கனவா இருந்தாலும் நனவாவே இருக்கட்டும்..."

பார்வதி என்கிற அந்த கர்ப்பவதி ஆச்சர்யத்தில் துடிக்கும் போது ராம்கியும் திரும்பிக் கொண்டிருந்தான்.

"அதோ ஓங்கி கட்டிகிட்டு ஒரு தம்பி வருதுல்ல. அது என் தம்பி மாதிரி. ரொம்ப நல்ல பைய. அதனாலதான் நான் இன்னிக்கு மனுஷியாவே இருக்கேன். அது நல்லா இருக்கணும். எனக்கும் இப்படி புருஷன் இல்லாத பொண்ணா வயித்த தூக்கிக்கிட்டு இருக்கற வேதனை. ஆனா இந்த வயித்துல குழந்தை வந்ததுல இருந்தே நான் நல்லா இருக்கேன்னு தான் சொல்லணும். நான் சாக நினைச்சாலும் இது சாகவிட மாட்டேங்குது. என்மேல பரிதாபப்பட இந்த கர்ப்பமும் ஒரு காரணமா இருக்குது..."

அவள் ராம்கிக்கும் அந்த புத்தகத்துக்குமான கசப்பு பற்றி தெரியாமல் பேசிக் கொண்டே போக, சூரியதேவன் மட்டும்

திரும்பிப் பார்த்தான். அவன் பார்க்கவும் ராம்கி அப்படியே வந்த வேகத்தில் திரும்பிச் செல்லத் தொடங்கினான்.

"அட! என்ன இந்த ராம்கி திரும்பிப் போகுது. அதுகிட்ட உங்களைப் பத்தி சொல்லி, இந்த புத்தகத்தையும் காட்டணும்னு நினைச்சேன்..."

"வேண்டாம்... விட்டுவிடு! இந்த முயற்சியை அவன் ஒரு மாயமாகவும் புதிராகவும் நினைக்கிறான். நான்தான் அவன் வந்தால் காரியம் கெடும் என்று அவனைப் பார்த்து அவனை திருப்பி அனுப்பினேன்..."

"நீங்கதான் திருப்பி அனுப்பினீங்களா?"

"ஆமாம். நான் என்ன நினைத்து பார்க்கிறேனோ, அதன் படி எதிரிகள் நடப்பார்கள். நீ என்னோடு பேசுவது அவன் வந்தால் தடைபடும் என்பதால் நான்தான் அவனை திரும்பிப் போகச் செய்தேன்..."

"அய்யோடா... உங்களுக்கு அவ்வளவு சக்தியா?"

"உனக்கு என்ன வேண்டும் என்று கேள் பெண்ணே..."

"எனக்கு... எனக்கு..."

"ம்... எது வேண்டுமானாலும் கேள்..."

"கோடி ரூபா பணம் கேட்டா கொடுப்பீங்களா?"

"அதைவிட பெரியதைக் கேள்..."

"கோடி ரூபாயை விட பெரிசாவா... ம்... என்னை ஏமாத்திட்டுப் போன என் காதலன் திரும்பி வரணும். என்னை ஏத்துக்கணும். நான் அவரோட சந்தோஷமா வாழணும். நடக்குமா?"

"நிச்சயம் நடக்கும். உனக்கு குழந்தை பிறக்கும் அன்றே உன் காதலன் வந்து உன்னை ஏற்றுக் கொள்வார். இந்தக் குழந்தையும் அதிர்ஷ்டம் மிகுந்த குழந்தையாக இருக்கும்..."

"நிஜமாவா?"



"நான் சொன்னால் சொன்னதுதான். இன்னும் ஏதாவது கேட்க விரும்புகிறாயா?"

"எனக்கு இந்த சந்தர்ப்பம் கிடைக்கக் காரணமே ராம்கி தம்பிதான். பாவம் அதுவும் அப்பா அம்மா இல்லாத அனாதை. அதுக்கும் ஒரு நல்ல வாழ்க்கை அமையணும். அமையுமா?"

"எது நடக்கப் போகிறதோ, அதையே நீ கேள்வியாக கேட்கிறாய். அவனுக்கும் திருமணம் நடக்கும். அவனுக்கு அவன் தாய், தந்தையர் யாரென்பது தெரியவரும். அப்படி தெரிய வந்ததிலேயே அந்த திருமணம் வேகமாக நடக்கும். இன்னும் சிறிது நாட்களுக்குத்தான் ராம்கி இப்படி சாதாரண மாணவனாக இருப்பான். அதன்பின் அவன் வாழ்க்கை தலைகீழாக மாறிவிடும்..."

"இதையெல்லாம் நான் எப்படி நம்பறது?"

"நீ நம்பினாலும் நம்பாவிட்டாலும் இனி இதெல்லாம் நடந்தே தீரும். வித்யாரண்யரின் சீடர்கள் நாங்கள். அவர் ஜோதிடம் மெய்யாக வேண்டி நீ அழைத்த உடன் வந்தோம். உனக்கு என் மூலமாக உதவி கிடைக்க வித்யாரண்யர் உன் வீட்டிற்கு வந்த போது நீ அவருக்கு பாத பூஜை செய்து உபசரித்தாய். இப்பொழுதல்ல· உன் பூர்வ ஜென்மத்தில். அப்பொழுது அவர் கம்மப்படி உன் வாழ்க்கை எந்தப் பாதையில் எப்படிச் செல்லும் என்பதை இட்டமிட்டு விட்டார். பிரதிபலனாக நீ இப்பொழுது ராம்கி என்கிற இளைஞனால் உதவி பெற்று அதனால் என்னையும் தரிசிக்கும் பாக்கியம் பெற்றாய். இதெல்லாம் ஒரு விதையை நிலத்தில் விதைத்தால் அடுத்தடுத்து அது என்னாகும் என்று ஒரு கணக்கு இருப்பதைப் போன்றது..."

சூரியதேவன் சொன்னதில் பாதிதான் பார்வதிக்குப் புரிந்தது. மீதியை ஏதோ தலையை ஆட்டி கேட்டுக் கொண்டாள்.

சூரியதேவனும் சிரித்தபடியே, "இந்த புத்தகத்தை தட்சிணாமூர்த்தி தேவரை அழைத்து அவரிடம் ஒப்படைத்து விடு. அவர் உனக்கு சில செய்திகள் கூறுவார். அதன்படி நீ நடந்தால் எல்லாம் நான் சொன்னது போல சுபமாகவே நடந்து முடியும்" என்ற சூரியதேவர், "நீ தட்சிணாமூர்த்தி தேவரை மனதால் ஒரு முறை நினைத்தால் கூட போதும்... அவர் வந்து விடுவார்" என்று கூறி விட்டு விலகிக் கொள்ள- பார்வதியும் மலங்க மலங்க பார்த்தபடி 'அது யார் தட்சிணா மூர்த்தி தேவர்?' என்று சிந்தித்த நொடியே அவரும் அவள் எதிரில் தெருவில் நடந்து போய்க் கொண்டிருந்த ஒருவரைப் போல வந்து நின்றார்.

"அழைத்தாயா பார்வதி?" என்று அவளிடமும் ஆரம்பம்.

"நீங்க... நீங்கதான் தட்சிணாமூர்த்தி தேவரய்யாவா?"

"ஆமாம். உனக்கு என்ன வேண்டும்?"

"என்னங்க நீங்களும் அவர் மாதிரியே கேட்கறீங்க... 'என் காதலன் கிடைக்கணும். ராம்கி தம்பி நல்லா இருக்கணும். இப்படி நான் கேட்க வேண்டியதை கேட்டுட்டேன். அதுக்கு நீங்க வழிகாட்டுவீங்கன்னு அந்த சூரியதேவரய்யா சொன்னாரு... அதான் உங்களைக் கூப்பிட்டேன்..."

"நல்லது. நீ ஒரே ஒரு காரியத்தை மட்டும் செய்தால் போதும். எல்லாம் தானாக நல்லபடி நடந்து விடும்..."

"என்ன செய்யணுங்க?"

"இது காலசக்ர பலகணி. இது எல்லோருக்கும் கிடைத்து விடாது; கிடைக்கவும் கூடாது. இதை வசப்படுத்தி யாருக்கு என்ன நடக்கும் என்பதை முன்னதாக தெரிந்து கொள்வ தோடு வித்யாரண்யரின் மாணவர்களாக 1008 தேவர்களையும் அடிமை கொள்ள பைரவன் என்று ஒருவன் அலைகிறான். அவன் எப்படி எப்படியோ முயன்று பார்த்தும் அவன் வசம் இது அகப்படவில்லை. அவன் இறுதிக் கட்டத்தில்



இப்பொழுது இருக்கிறான். அதன்படி ஒரு கர்ப்பிணியை பூத பிசாசங்களுக்கு பலி கொடுத்து அவற்றின் உதவியோடு பலகணியைக் களவாட வேண்டும் என்பது அவன் விருப்பம். அவன் இன்னும் சிறிது நேரத்தில் ஒரு இறுதி முயற்சியாக இங்கே வர உள்ளான். உன்னை அவன் மயக்கி அழைத்துச் செல்வான். உன்னை பலி கொடுத்து தன் எண்ணத்தை ஈடேற்றிக் கொள்ள அவன் முயலும் போது நீ புத்திசாலித்தனமாக அதற்கு ஒத்துழைப்பு கொடு. அந்த சந்தர்ப்பம்வரை தைரியமாக இரு. அவன் வசியத்தில் மயங்கி விட்டது போல் நடி. அவன் உன்னைக் கொல்ல முயலும்போது என் மூலமாக காவலர்களுக்கு தகவல் சென்று அவர்கள் அவனை கட்டுக் கொள்வார்கள். அவன் மரணித்து விட்டால் அதன்பின் நடக்க வேண்டியவை தானா கவே நடக்கும். உன் விருப்பம் அவ்வளவும் ஈடேறும்..."

தட்சிணாமூர்த்தி தேவரின் பேச்சைக் கேட்க பார்வதிக்கு நரபலி என்றவுடன் உதறலெடுத்தது.

"அம்மா! வலி இல்லாமல் வலிமை இல்லை. என்னை நீ நினைத்துக் கொண்டே இரு. அவனது வசியம் வேலை செய்யாது. இல்லாவிட்டால் அவன் ஜெயித்து விடுவான். நான் சொன்னது நினைவில் இருக்கட்டும்." என்ற அவர் வந்தது போலவே திரும்பினார். அவர் சொன்னது போலவே பைரவனும் சிறிது நேரத்திலேயே வந்துவிட்டான்.

கடையில் பார்வதியை கர்ப்பவயிற்றுடன் பார்த்தவன் விழிகளை உருட்டி விழித்தான். பார்வதியும் மலங்க மலங்க பார்த்தாள். மனதுக்குள் தட்சிணாமூர்த்தி தேவர் நினைவாக வும் இருந்தாள். தட்சிணாமூர்த்தி தேவர் போகும்போதே அந்த பலகணியையும் எடுத்துச் சென்று விட்டிருந்தார். அது இருக்கும் இடத்தில் அவனுக்குள் இருஷ்டி வேலை செய் யும். இல்லை என்றால் தெரிந்து விடும். அது கடையில் இல்லை என்பது தெரிந்து விட்டது. பதிலுக்கு பார்வதியைப்

பார்த்தவன் மனோவசியம் செய்பவர்களைப் போல கண்ணாலேயே அவளை பார்த்தான்.

பார்வதியும் மனதுக்குள் 'நான் எதற்கு இவனைப் பார்த்து பயப்பட வேண்டும்... சாவதற்கு எல்லா முயற்சியும் செய்த வள்தானே நான்... இப்பொழுது என்ன திடீர் வாழ்க்கைப் பற்று' என்று யோசித்தவளாக அப்படியே கடையில் இருந்து அவனுடன் நடந்தாள்.

கடையும் ராம்கிக்காக காத்திருக்கத் தொடங்கியது.

## 8

மனிதப் பிறப்பு ஒரு வட்டச் சுழற்சி. ஒரு இரும்புத்தாது மண்ணில் இருந்து பெறப்பட்டு பின் சுத்திகரிக்கப்பட்டு, அதன்பின் உருக்கி வார்க்கப்பட்டு அதற்குப் பின் ஒரு இரும்புப் பொருளாக வார்க்கப்பட்டு அதற்குப் பின் ஒரு நீண்ட காலத்தில் அது தேய்ந்தோ இல்லை உடைந்தோ, அதுவுமில்லை அது வேறு ஒரு பொருளாக மாற்றப்பட்டோ தன் பயணத்தைத் தொடர்ந்து ஒரு நீண்டகாலப் போக்கில் துருவேறி மெல்ல மண்ணோடு மண்ணாக ஆவதைப் போலவேதான் உயிர்களின் பாதையிலும் பிறப்புகள். அது தொடர்பான வளர்ப்புகள், பின் மரணம் என்று ஒரு போக்கு இருக்கிறது. இதை அழகாக பிழையின்றி பின்பற்றத் தெரிய வேண்டும். அது தெரிந்து விட்டால் நாம் நமக்கே அதை பொருத்திப் பார்க்கலாம். அதாவது நாம் பின்னோக்கிச் சென்று கடந்த காலங்களில் எப்படிப்பட்ட உயிரினமாக இருந்தோம், இப்பொழுது மனிதனாக இருந்து மனம் பெற்று முன்பின் பார்க்கத் தெரிந்து வரும் காலங்களில் என்னவாக ஆவோம் என்றும் உணர முடியும். உணர்ந்தவர்களும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அதை எவரிடமும் கூறிக் கொண்டிருக்க மாட்டார்கள்.

பாஷை தெரியாத மனிதர்களிடம் எப்படி நாம் சுருக்கமாக சைகை பாஷை பேசி நம் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்கிறோமோ அப்படியே அவர்களும் நம்மை கருதி நம்மிடம் எதுவும் கூறாமல், நம் விருப்பு, பாராட்டு எதையும்



பொருட்படுத்தாமல் நம்மிடம் ஒன்றுமே தெரியாத முட்டாள்களைப் போல் கூட நடந்து கொள்வார்கள்!

கடைக்கு ராம்கி வந்தபோது அங்கு பார்வதி இல்லாமல் இருந்தது அதிர்ச்சியை தந்தது. 'எங்கே போய் விட்டாள்?' என்ற கேள்வியில் கண்களும் அவளைத் தேடுகையில் மனோகர் தன் பைக்கில் வந்து சேர்ந்தான். பார்க்க ஒரே குஷியாக இருந்தான்.

"வாங்க மிஸ்டர் மனோகர்..."

"அதான் வந்துட்டேனே. உங்க உதவி பயங்கரமா ஒர்க் அவுட்டாயிடிச்சு. நன்றி சொல்லிட்டுப் போக வந்தேன்..."

"அதெல்லாம் எதுக்கு... அதேசமயம் நீங்க ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும்..."

"எதனால?"

"நந்தினியோட கசின் பிரதர் உங்களைப் பத்தி ரொம்ப கவலைப்பட்டார். நீங்க நந்தினியை குறுக்கு வழியிலே போய் மயக்கிட்டதால்லாம் அவர் நினைச்சார். நான்தான் தடுத்தேன். 'அப்படி எல்லாம் இல்லை, மனோகர் ரொம்ப நல்லவர்'ன்னேன்."

"ரொம்ப தேங்க்ஸ். ஆமா, உங்ககிட்ட அந்த மாதிரி புத்தகங்கள்ளாம் எதுவும் இல்லையா?"

"அந்த மாதிரின்னா... புரியலியே...?"

"அதான் ராம்கி... ட்ரிபுள் எக்ஸ் புக்ஸ்..."

"நீங்க செக்ஸ் புக்ஸைச் சொல்றீங்களா?"

"கரெக்ட். உங்கள மாதிரி பழைய புத்தகக் கடைல அந்த மாதிரி புக்ஸ் தானே நிறைய இருக்கும்..."

"சாரி மனோ... இது அந்த மாதிரி கடை கிடையாது. என் கடைல அந்த மாதிரி புத்தகத்துக்கு இடமும் கிடையாது..."

"ஏன் அப்படிச் சொல்றீங்க? இங்க இருக்கற பழைய புத்தகங்களால உங்களுக்கு என்ன கிடைச்சுடப் போகுது..."

"அதுக்காக நீலப்படம் போட்ட புத்தகம் விக்கலாமா? அது எவ்வளவு பெரிய சமூக துரோகம் தெரியுமா?"

"என்ன ராம்கி! புத்தர் மாதிரி சமூக துரோகம் அது இதுங்கறீங்க? பொழைக்கற வழியைப் பாருங்க. என்னை மாதிரி இளைஞர்கள் அதிகம் விரும்பி வாங்கறது அந்த மாதிரி புத்தகங்களைத் தான். நான் நந்தினியை கவரத்தான் அவளுக்கு பிடிச்ச புத்தகங்களை உங்ககிட்ட வாங்கினேன். என் வரைல ட்ரிபுள் எக்ஸ் புக்ஸ்தான் என்னோட ஃபேவரைட் புக்ஸ்..."

"சாரி மனோகர்... உங்க காதலை புனிதமானதா நம்பி நானும் உங்களுக்கு உதவியெல்லாம் செஞ்சுட்டேன். ஒருவன் மனதில் ஒன்பதடா... அதில் ஒளிந்து கிடப்பது என்பதடா'ன்னு பாட்டு கேட்டிருக்கேன். இப்ப உங்க மூலமா அது எவ்வளவு உண்மைன்னும் உணர்றேன். ப்ளீஸ்... இனி என் கடைக்கு வராதீங்க. என் கூடயும் பேசாதீங்க. நான் நீங்க நினைக்கற வழக்கமான இளைஞன் இல்லை..."

ராம்கி பொட்டில் அடித்தாற் போல சொல்ல, மனோ முகம் கோணலாகிப் போனது.

"அட என்ன ராம்கி, கோபிச்சுகிட்டீங்க. நான் சும்மா உங்களை டெஸ்ட் பண்ணேன்..." என்று மனோகரும் பல்டி யெல்லாம் அடித்துப் பார்த்தான்.

ராம்கியிடம் பருப்பு வேகவில்லை. இறுதியாக முகத்தை தொங்க போட்டுக் கொண்டு புறப்பட்டுப் போனான். அவன் பைக் நகர்த்த மறுநொடியே ஒளிந்திருந்தவளைப் போல வெளிப்பட்டாள் நந்தினி. அவள் முகத்தில் பளிச்சென்று கலக்கம் தெரிந்தது. ராம்கிக்கு அந்த நொடியே அவள் மனோ



பேசியதை எல்லாம் கேட்டு விட்டாள் என்பது தெரிந்து விட்டது.

"வாங்க மேடம்.."

"தேங்க்ஸ் ராம்கி..."

"எதுக்கு?"

"மனோவை கன்சிடர் பண்ண இருந்தேன். ஆனா யதார்த்தமா புக் வாங்க வந்த இந்த சந்தர்ப்பத்துல அவரோட வக்ரபுத்தி தெரிஞ்சு போச்சு. நீங்க அவருக்கு உதவினதும் கூட தெரிஞ்சது..."

"அது முதல்ல மேடம்... இனி நான் அவருக்கு உதவ மாட்டேன். அதே சமயம் செக்ஸ் புக்ஸ் படிக்கறதாலேயே ஒருத்தரை ரொம்ப மோசமானவரா நினைக்க முடியாது. அது ஒருவித பலவீனம். அவ்வளவுதான்..."

"இல்ல மிஸ்டர் ராம்கி. எனக்கு என் கல்யாண விஷயத்துல நிறைய கனவுகள் இருக்கு. ஆண்கள் சாதாரணமா எடுத்துக்கற பல விஷயங்கள பெண்கள் அப்படி எடுத்துக்கறதில்ல. அவங்க உடம்பால, மனசால எவ்வளவு பெண்களை வேண்டுமானாலும் நேசிப்பாங்க. ஆனா வர்ற பொண்டாட்டி மட்டும் சீதையாதான் இருக்கணும். அதே நியாயத்தை பெண் இனம் கடைப்பிடிக்க ஆசைப்பட்டா ஒரு ஆணுக்கு கூட கல்யாணம் நடக்காது தெரியுமா?"

"நிச்சயமா... யார் அப்படி எதிர்பார்க்கறாங்களோ, இல்லையோ நீங்க அப்படி விரும்புங்க... உங்களுக்கும் ஒரு ராமனே மாப்பிள்ளையா வரட்டும். வாழ்த்துக்கள்..."

ராம்கியின் வாழ்த்தை ஏற்று சிரித்தவள், "இன்னிக்கு உங்களை நான் பார்க்க வந்த காரணமே வேறு..." என்றாள்.

"என்ன?"

"என்னோட மாமா ஒரு புத்தக பைத்தியம். அவர்கிட்ட ஆயிரக்கணக்கான புத்தகங்கள் இருக்கு. அதையெல்லாம்

அவர் நல்ல புத்தக விரும்பிகள் கிட்ட ஒப்படைக்க நினைக்கிறார். எனக்கு உங்க ஞாபகம் தான் வந்தது. அவர் வீட்டுக்கு வந்து புத்தகங்களை எடுத்துக்கறீங்களா?"

"புத்தக வியாபாரி புத்தகம் கிடைக்குதுன்னா விடுவேனா... கட்டாயம் வரேன். ஆனா அவர் யானை விலை, குதிரை விலை சொன்னா எனக்கு கட்டுபடியாகாது..."

"அட நீங்க ஒண்ணு... அவர் சும்மாதான் தர விரும்பறாரு. புத்தகங்களை விக்கறத அவர் வெறுக்கறவர். அதுக்கு விலை மதிப்பு கிடையாது. சும்மா அச்சுக் கூலிக்காக விலை வைக்கறோம்னு சொல்றவர் அவர்."

"அப்படியா... அப்படின்னா ரொம்ப சந்தோஷம். அதுக்காக நான் சும்மா எடுத்துக்கறதும் தப்பு. பொன்னை வைக்கற இடத்துல பூவை வைக்கற மாதிரி நான் நிச்சயம் எதையாவது தருவேன்..."

"சரி, எப்ப வர்றீங்க?"

"இப்பவே கூட நான் தயார்..."

"ஒரு டெம்போ வேணா... வாங்க... புத்தகத்தை அள்ளிப் போட்டுக்க வசதியா இருக்கும்..."

"முதல்ல பாத்துடுறேனே..."

ராம்கி அவனோடு கிளம்பத் தயாரானான். அப்போது சிந்தாமணி கையில் ஒரு புகைப்படத்துடன் அவனை நோக்கி வந்து கொண்டிருந்தாள். அது சட்டம் போடப்பட்டு அழகாக இருந்தது.

"என்ன சிந்தா..."

"இந்த போட்டோவை நீ கடைல மாட்டி வை. இப்பதான் சட்டம் போட்டுக் கொடுத்தான் கடைக்காரன். அதான் கையோட கொடுக்கவந்தேன்..."

"இது சின்ன வயசுல நீயும் நானும் எடுத்துக்கிட்ட படம் இல்ல..."



"அதுவேதான்... பழைய புத்தகம் வாங்க வர்ற யாருக்காவது உன்னை அடையாளம் தெரிஞ்சாலும் நல்லதுதானே?"

சிந்தா எங்கே வருகிறாள் என்பது அவனுக்கு புரிந்து விட்டது.

"அப்படின்னா இதை நான் கடைல மாட்டவே மாட்டேன். எனக்கு இனிமேட்டு என் அப்பா அம்மா தெரிஞ்சு என்ன ஆகணும்? நீதான் எனக்கு எல்லாம். இந்த வாழ்க்கை நீடிச்சா போதும் சிந்தா..."

ராம்கி கண்கலங்க, நந்தினி மெல்ல அந்த புகைப்படத்தை எட்டிப் பார்த்தாள். பார்த்தவள் ஒரு விநாடி அப்படியே விக்கித்துப் போய்விட்டாள். அதை கவனிக்காத ராம்கி, "பார்வதி எங்கே போச்சுன்னுதான் தெரியல..." என்றான் அவள் ஞாபகமாக.

"நானும் ரொம்ப நேரமா அவளைத்தான் தேடறேன்..." என்றாள் சிந்தாமணியும். நந்தினியிடமோ திகைப்பு, வியப்பு என்கிற எல்லாம்! எதனால்?

அது ஒரு மலைக்கோயில்!

ஒரு காலத்தில் பிரசித்தி பெற்று இருந்திருக்க வேண்டும். இப்போது இருள் மண்டிக் கிடந்தது. மலைக்குப் போகும் பாதையும் தூர்ந்துபோய் வழியே புலப்படவில்லை. அதில் பார்த்துப் பார்த்து நடந்து கொண்டிருந்தான் பைரவன். அவன் பின்னாலேயே ஒரு புறா போல மருண்டபடி அவனைத் தொடர்ந்து கொண்டிருந்தாள் பார்வதி.

மனதில் தட்சிணாமூர்த்தி குருவை நினைக்கத் தவறவே யில்லை. இருந்தும் விபரீதமாக ஏதாவது ஆகிவிட்டால் என்ன செய்வது என்கிற பயம் இருந்தது. அவனுக்குத் தெரியாது. தொலை தூரத்தில் ஓசைப்படாமல் போலீஸ் அவர்களைத் தொடருவது!

அந்தக் கோயில் முகப்பை பைரவன் அடைந்தபோது இருட்டத் தொடங்கியிருந்தது. உள்ளே ஒரு அகோரகாளி உருவை பைரவன் பிரதிஷ்டை செய்திருந்தான். முன்னாலே ஒரு பலிபீடம்... அதில் நிறைய ரத்தத் திட்டுகள்! அதுவே அவன் அடிக்கடி பலி கொடுத்து வருவதை ஊர்ஜிதம் செய்திருந்தது.

ஒவ்வொரு பலிக்கு ஒவ்வொரு விதமான பலன்!

கருவுற்ற ஆட்டை பலி கொடுத்தாலே போதும்... கருப்பு மகிழ்ந்துவிடும். கன்னிப் பெண் என்றால்தான் காளி மகிழுவாள். சேவலுக்கு, கோழிக்கெல்லாம் சின்னச் சின்ன சக்திகள் படிந்து வரும். அவன் வரையில் கர்ப்பிணிப் பெண் என்பது இப்பொழுதுதான் அவன் செய்யும் முயற்சி.

பலிக்கு முன் பார்வதியைக் குளிப்பாட்டி ஈரத்துடன் கொண்டு வந்து பலிபீடம் முன் நிறுத்த வேண்டும். அதற்காக அவளை அழைத்து பக்கத்தில் இருந்த ஊற்று ஒன்றில் இருந்து பானையில் நீர் மொண்டு அவள் தலையில் விட்டான்.

சிலுசிலுவென்றிருந்தது அந்த நீர்... அடர்வான இருண்ட சூழல். காளியின் தோற்றமோ நாக்கை நீட்டிக் கொண்டு மிரட்டியது. எல்லாம் சேர்ந்து அவள் வயிற்றில் கலக்கத்தை ஏற்படுத்த அடுத்த நொடியே இடுப்பு வலி எடுக்கத் தொடங்கி விட்டது. இந்த பைரவன் துளிகூட எதிர்பார்க்க வில்லை. வேகமாக அவளை எழுப்பி பலிபீடம் முன்மண்டி போடச் சொன்னான். அவள் மறுத்து பிரசவ வலியை சப்த மாய் வெளிக்காட்ட, இனியும் விட்டால் ஆபத்து என்கிற மாதிரி பைரவனும் அரிவாளைத் தூக்கியபடி நிமிர- காத்தி ருந்தது போல அவன் மார்பில் பாய்ந்தது ஒரு தோட்டா!

அப்படியே சுருண்டு விழுந்தவன் எதிரில் திபுதிபுவென்று போலீசார்... அவர்களில் ஒருவர் மட்டும் பார்வதியைப் பார்த்துவிட்டு அருகே சென்று மடியில் அவளை அள்ளிப்



போட்டுக் கொண்டு "பார்வதி... பார்வதி..." என்று அனத்தும் போதே அந்த ஆபரேஷனுக்குத் தலைமை தாங்கிய எஸ்.பி.க்கு புரிந்துவிட்டது.

"என்னய்யா... 'துரோகம் பண்ணிட்டேன் சார்'னு நீ தேடிக் கிட்டிருந்த பொண்ணு இதுதானா?" என்று அருகில் வந்து அமர்ந்தார். அப்படியே எதற்கும் இருக்கட்டும் என்று தன்னோடு அழைத்து வந்திருந்த இரண்டு பெண் போலீஸை அழைத்து அவர்களிடம் பார்வதியை விட்டுவிட்டு வெளியேறினார்.

"இப்படி ஒரு கோயில்... இங்க பலிபூஜை அது இதுன்னு அட்டகாசம் பண்ணிக்கிட்டிருந்தவனை நல்ல வேளை சரியான நேரத்துல பிடிச்சுப்புட்டோம். விட்டிருந்தா அந்த பொண்ணு உசுரும் போய் நம்ம டிபார்ட்மென்ட் மானமும் போயிருந்திருக்கும்..." என்று எஸ்.பி. சடைத்துக் கொண் டார். உடன் வந்திருந்த சப் இன்ஸ்பெக்டர் ஆமோதிக்க உள்ளே இருந்து குழந்தையின் அழுகுரல் கேட்டு அவர்களை மகிழ வைத்தது.

"இந்த பொண்ணு தன்னைத் தொலைச்சது ஒரு இடத்துல... இருந்தது ஒரு இடத்துல... இப்ப பிரசவம் இதுக்கு சாமி முன்னால... இது என்ன ஜாதகமோ?" என்றும் எஸ்.பி.யே கமெண்ட் அடிக்க, உள்ளே வாரிச்சுருட்டிக் கொண்டு ஓடினார் அந்த ஒரே ஒரு போலீஸ்காரர்.

"ரொம்ப நாளாவே என் பொண்டாட்டியை தொலைச் சிட்டேன் சார்'னு புலம்பிகிட்டிருந்தான். இப்ப கண்டுபிடிச் சுட்டான். நம் வரைல ஒரு கல்லுல இரண்டு மாங்கா..." என்று கண்சிமிட்டினார் எஸ்.பி.யும்.

அந்த பங்களா கவரில் ஒரு சிறுகுழந்தையின் படம்... குழந்தையோ அதன் தாயின் தோளில்... அதை நந்தினி

கட்டிக்காட்ட- அதைப் பார்த்த சிந்தாமணி "ராமகிருஷ்ணா... இது நீயே தான்டா..." என்றான் ஒருவித விசும்பலோடு.

அருகிலேயே நந்தினியின் மாமா ரங்கராஜனும், அவர் மனைவி மங்களமும்.

"மாமா... அந்த... நீங்க சின்ன வயசுல தொலைச்ச உங்க மகள்தான் இவர். நேரம் வந்தா எல்லாம் தானா நடக்கும்னு சொல்லுவீங்க இல்லையா; இப்ப பாருங்க எல்லாம் நடந்துட்டதை..." என்று சொல்ல மங்களம் ஓடி வந்து திருஷ்டி கழித்தாள். ரங்கராஜன் கண்ணீர் பெருக்கினார்.

"என் மாமாவும் அத்தையும் போன வருஷம் வரை திருவனந்தபுரத்துல இருந்தாங்க. இந்த வருஷம்தான் இந்த ஊருக்கு வந்தாங்க. காணாமப் போன அவங்க மகளைப் பத்தி இவங்க வருத்தப்படாத நாள் இல்லை.

என்னைப் பார்க்கும் போதெல்லாம் 'எனக்கு மருமகளா வரவேண்டியவ... இப்ப யார் வீட்டுக்கு போகப் போறியோ'ன்னு சொல்வாங்க. அவ்வளவு மனக் குமுறல்..." என்று சகலத்தையும் நந்தினி வெளிப்படுத்த ராம்கி சிந்தாமணியைத்தான் கலக்கத்துடன் பார்த்தான். அவனிடம் அவனைப் பிரியும் வேதனை இருந்தாலும் அதை வெளிக்காட்டாமல் "ராம்கி... இனி நீ என்கூட குடிசைல இருந்து கஷ்டப்பட வேண்டாம்" என்று அவன் நலத்தை மையமாக வைத்து பேசவும் ராம்கி சரசரவென்று அழுதேவிட்டான்.

"சிந்தா... நான் எப்பவும் உன் ராம்கி சிந்தா... நீ என்னை விட்டுப் போக நான் அனுமதிக்கவே மாட்டேன்" என்று கண்ணீர் விட்டான்.

வாழ்க்கை ஒரு நொடியில் திரும்பும் என்று படித்திருக்கிறான். ஆனால் இப்பொழுதுதான் பார்க்கிறான். இதற்குப் பின்னால் பார்வதியின் ஒரு பெரிய துணிவு இருப்பதெல்லாம் அவனுக்குத் தெரியவில்லை. போகிற போக்கில் நடக்கின்ற ஒன்றாகத்தான் கருதினான்.



நந்தினி கண்களில் பளபளப்போடு அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். 'உங்களுக்கு ஏற்ற ஒரு ராமன் கிடைக்கட்டும்' என்று அவன் வாழ்த்தியதை எண்ணியவள் அந்த ராமனாக அவனே அமைந்து விட்டதையும் வெட்கத்துடன் எண்ணிப் பார்த்தாள்.

சிறிது நேரத்தில் எல்லாம் எப்படியோ பார்வதியைப் பற்றிய தகவலும், அவளுக்கு குழந்தை பிறந்த கையோடு அவளது காதலன் கணவனாகவே வசப்பட்டுவிட்டதும் தெரிய வந்தபோது அவனுக்கு ஆச்சரியம் தாளவில்லை.

அந்த பலகணிதான் ஞாபகத்தில் வந்தது.

அது முதல் முதலாக நந்தினிதான் அவன் மனைவி என்று சொன்னதும் நினைவுக்கு வந்தது. ஒருவேளை பலகணியை பிரித்துப் பார்த்திருந்தால் இந்த சம்பவங்கள் முன்கூட்டியே தெரிய வந்திருக்கலாம் என்று எண்ணியவன் 'தெரிந்து மட்டும் என்ன ஆகிவிடப் போகிறது? எதுவும் தானாக நடக்கும் போதுதான் தெரிய வேண்டும்' என்றும் சொல்லிக் கொண்டான்.

அப்படியே ஆஸ்பத்திரிக்கு பார்வதியைப் பார்க்க சிந்தாவோடு கிளம்பினான்.

ஆஸ்பத்திரியில் சிந்தா. அருகில் தட்சிணாமூர்த்தி தேவர்.

"சாமி... நீங்க சொன்ன மாதிரியே எல்லாம் சுபமா முடிஞ்சிடிச்சு" என்று அவரிடம் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந்தாள் பார்வதி.

"சில நல்ல விஷயங்களுக்கு சில தீய சக்திகள் தடையா இருக்கும். அதை தகர்த்துட்டா நல்லது தானா நடந்துடும். உன் வரைல உன் புண்ணியம் அதுக்கு வழிகாட்டினிச்சு. ராம்கி வரைலயும் அவன் புண்ணியம்தான் எல்லாத்துக்கும் காரணம். குறிப்பா உனக்கு அவன் கொடுத்த ஆதரவுதான் அவன் தீவினை தகர்த்தது. இதெல்லாம் ஒரு கணக்கு. ஆனா

இதைப் பத்தியெல்லாம் அவன்கிட்ட சொல்லாதே. அவன் வரைல அவன் எதிர்காலத்தைப் பார்க்கற விதமே வேற... யார் எப்படிப் பார்த்தாலும் நடக்கறது நடக்க வேண்டிய நேரத்துல நடந்தே தீரும்... என் கடமையும் முடிஞ்சது. நான் புறப்படுறேன்" என்று அவள் தலையை வருடி ஆசீர்வாதம் செய்துவிட்டு அவர் புறப்பட்டார். அவளுக்கு அப்பொழுதும் நடப்பது கனவா நிஜமா என்கிற குழப்பம் இருந்தது.

முற்றும்